www.tamilarangam.net

# பெண்கள் சந்திப்பு மலர்

1993



3

*Jahreszeitschrift des Frauenforums*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள்சந்திப்பு மலர்
# 1993

வெளியீடு 3

## Jahreszeitschrift des Frauen forums 1993

"Penkalchanthippu"
Frauen forum
Information Zentrum Dritte Welt
Overweg str. 31
44625 HERNE
Germany

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே




♀ எங்களிடமிருந்து .....
♀ மீளாத பொழுதுகள்
♀ நேற்று.இன்று!நாளை?
♀ ஆண்பிள்ளை
♀ கோசல்யா கவிதைகள் பற்றி .....
♀ விழிப்பு
♀ குழந்தை
♀ இந்தியப் பெண்கள் இயக்கங்கள்
♀ அவன்
♀ விட்டு விடுதலையாகி
♀ கிளாரா செற்கின்
♀ ஒரு உடன்படிக்கை செய்வோம்
♀ சிறகு
♀ அன்புள்ள அம்மா
♀ சர்வதேசப் பெண்கள் தினமும் மலையகப் பெண்களும்
♀ அவதி
♀ நினைவுகள்
♀ வேலைபார்க்கும் ஜேர்மன் பெண்கள்
♀ மொனிக்காவின் கவிதை
♀ ஜோன் போல் சார்த்தரும் பெண்களும்
♀ பெண்கள் மீதான வன்முறைகள்
♀ புகலிடச் சஞ்சிகைகளும் பெண்களும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எங்களிடமிருந்து......

ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் பெண்கள் ஒருங்கிணைந்து தமது அனுபவங்களையும், எண்ணப்பாடுகளையும் வெளிப்படுத்தும் முகமாக 1990ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பெண்கள்சந்திப்பு, தற்போது மற்றும் சில ஐரோப்பியநாடுகளில் புகலிட வாழ்வைக் கழிக்கும் பெண்களையும் தன்னகத்தே அடக்கி 10வது சந்திப்பில் காலெடுத்து வைக்கும் இவ்வேளையில், மூன்றாவது பெண்கள் சந்திப்பு மலரினூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

நீங்கள் இவ்வளவு காலம் சந்தித்துப் பெற்ற பயன் என்ன?- எனும் கேள்வியே எம்மை நோக்கி கேட்கப்படுகின்றது.

இலையுதிர்காலத்து இலைகள் காற்றால் காவிச் செல்லப்பட்டு எங்கோ போய் விழுவது போல், நாம் வெவ்வேறு நாடுகளில் சிதறப்பட்டோம். புகலிட வாழ்வில் எம்மைப் புகுத்திக் கொண்ட நாம், சொந்த அடையாளங்கள் மறுக்கப்பட்டு, அகதி என்ற பாத்திரமேற்று எதிலும் முழுமையாக ஒன்றாது வாழுமோர் வாழ்க்கை.

ஐரோப்பிய நாட்டின் இனவாதம் நமைத் துரத்திட . . . . . அச்சமே வாழ்வாகி. . . . . கூனிக்குறுகி . . . . . எம் நாடு நினைந்து . . . . . ஏக்கங்களோடு காலத்தோடு ஓடுகின்றோம். இந்நிலையில் அநேகமான பெண்களுக்கு மிஞ்சயிருப்பதெல்லாம் அடுப்படியும், பிள்ளைப்பேறுகளுமே.
ஐரோப்பிய வாழ்க்கைத்தரத்தோடு முண்டு கொடுக்க முடியாத நிலையில் சில குடும்பங்களில் பெண்களும் வேலைசெய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்படுகின்றனர். ஆனாலும் பொருளாதாரக் கட்டுப்பாடு, குடும்பத்தலைமை என வரும் போது 'வேதாளம் மீண்டும் முருக்கம் மரத்தில் . . .

வீதியில் நாஸிகளுக்கும் வீடுகளில் கணவன்மாருக்கும் பயப்படவேண்டிய நிலை எத்தனை பெண்களுக்கு . .
இத்தகைய சிக்கல் நிறைந்த புகலிடச்சூழலில், பெண்களாக முன் வந்து தமது பிரச்சனைகளைப் பற்றி மனந்திறந்து பேசுவதென்றால் இதைவிட வேறு பயன்பாடொன்றும் இருக்கமுடியாது.

எமது இத்தனை நாள் சந்திப்புகளாலும், எமது மலர் வெளியீடு மூலமும் புதிய தோழிகளின் பரிச்சயமும் . . . . பிரச்சனைகளை வெவ்வேறு கோணங்களில் ஓரளவேனும் பார்க்கக் கூடிய மனப்பக்குவமும் எமக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாகியுள்ளதென்றே சொல்லமுடியும்.

நிறைகள் இருக்குமிடத்து குறைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இரண்டு மலர்கள் வெளியிடப்பட்ட நிலையிலும், பெண்களிடமிருந்து போதியளவு விமர்சனங்கள் எமக்கு வாராதமையே அக்குறை.

இதற்கு ஏது தான் காரணம் . . ?

அதிகமான பெண்களுக்கு வாசிப்பிலுள்ள அசிரத்தையே இதற்கான முக்கியமான காரணம்.

ஒரு வீட்டிற்குப் புத்தகம் விற்கப் போனால் "அவர் வீட்டில் இல்லை" எனும் பதிலே பெரும்பாலும் வருகின்றது. இதற்கு அதிகமான வீடுகளில் பொருளாதார ஆளுமை ஆண்களின் கைகளிலிருப்பதுவும் . . . . புத்தகம் எல்லாம் ஆண்களின் சமாச்சாரம் என்ற மனப்பான்மை என்பவையே காரணங்களாகின்றன.

பெண்ணும் ஒரு மனிதஜீவி. இந்த சமுகத்தின் ஒரு பிரஜை. புத்தகங்களில் எழுதப்பட்டவையோடு நிச்சயம் அவளுக்கு தொடர்புண்டு. இந்த உலகிற்கே உயிர் கொடுக்கும் பெண் இவற்றை வாசிக்கவேண்டிய கட்டாயமுள்ளது. எழுத்துடனான எமது பரிச்சயமே எமது அறிவு வளர்ச்சிக்கு தீனி போட்டு எம்மை முழுமையடைய வைப்பது.

" மீன் எங்கு மலிவாக வாங்கலாம்? . . . பிள்ளைக்கு சட்டை மஞ்சளிலா அல்லது சிவப்பிலா தைத்தால் நன்றாகவிருக்கும்" என்பவை மட்டுமல்ல. பெண்கள் தம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளக்கூடிய விடயங்கள்.

" *உன்சிறு வீடே உனதுலகானது*
*உப்பும் புளியுமே பிரச்சனையானது* " என சன்மார்க்கா சொல்வது போல் . . . . எமது வட்டத்தை ஏன் நாமே குறுக்கிக் கொள்ளவேண்டும்?

எம்மாலும் எல்லாம் முடியும். . . . அதற்கான தகமையும், ஆளுமையும் எமக்குண்டு.

*"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்*
*றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்"* என பாரதி பாடியதை நாம் மெய்ப்பித்துக் காட்டவேண்டும்.

நாம் ஒன்றாக கூடி செய்யக் கூடியவை எத்தனையோ நமது கைகளில் . . . .

நாம் சிந்திப்பதில் பாதியையேனும் சொல்லக்கூடிய சுதந்திரம் எம்மிடத்தில் உண்டு. நாம் எமது செயற்பாடுகளை நகர்த்தும் இவ்வேளையில் . . . . . எமது தாய்நாட்டில் பெண்களின் உரிமைக்காகவும், மனித உரிமை மீறல்களுக்காகவும் குரல் கொடுத்த, கொடுக்கும் எமது சகோதரிகளின் நிலையை எண்ணாது இருக்கமுடியாது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காகவும், தமிழ் மக்களின் விடிவிற்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்த பெண்ணிலைவாதியும், **"முறிந்த பனை"** எனும் நூலை எழுதியவர்களில் ஒருவருமான **ராஜனி திராணகம** நான்கு வருடங்களிற்கு முன் கொலைவெறியர்களின் ஆயுதத்திற்கு பலியாகினாள். இதே மாதம் 21ம் திகதி தான் அவள் பலியான அந்த துர்ப்பாக்கியமான நாள். அவளை இவ்விடத்தில் நினைவுகூர்தல் அவசியமாகின்றது.

அவள் மட்டுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது சமூகத்தின் கோரப்பற்கள் பொது வாழ்வில் தம்மை இணைத்துக் கொண்ட எல்லாப் பெண்கள் மீதும் பதிந்தன . . . . .

"*புத்திசாலியான கடைசி மனிதனும் இறந்து கொண்டிருக்கின்றான்* " என உலகிற்கு அறிவித்த பெண்ணிலைவாதியும், கவிஞையுமான **சிவரமணி** சமூகம் மீதான தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்குத் தன்னைத்தானே மாய்த்துக்கொண்டாள்.
இதே வரிசையில் அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட **செல்வி** புலிகளால் கடத்தப்பட்டாள். இதுபோல் இன்னும் எத்தனையோ தோழிகள் உலகெங்கிலும் நாம் அறிந்தும், அறியாமலும் கொலைக்கரங்களின் பிடியில் . . . . . .

நாம் பெண்கள். எமக்கேன் சமூகப் பிரச்சனைகள் என்று இவர்கள் இருந்திருந்தால், இவர்களுக்கு இக்கதி நேர்ந்திருக்காது. ஆனால் . . . தூங்கிக் கொண்டிருக்கும் பெண்ணினத்திற்கு தாலாட்டுப் பாட அவர்கள் விரும்பவில்லை. மாற்றாக எழுச்சி கீதங்கள் பாடினார்கள்.

எமது மண்ணின் இந்த கொடூரத்திற்கு நாம் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதுவும் இன்று எம் முன்னுள்ள கடமையே.

இம்மூன்றாவது எம்முயற்சிக்கும் உங்கள் அனைவரினதும் பங்களிப்பும் இருக்குமென்ற நம்பிக்கையோடு, உங்கள் விமர்சனங்களையும், செழுமைப்படுத்தல்களையும் எதிர்பார்க்கின்றோம்.

**பெண்கள் சந்திப்பு- வெளியீட்டுக்குழு.**

25.09.1993



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ராஜனி!

நீஅழிக்கப் பட்டு அதற்குள் நான்கு வருடங்களாயிற்று
உன் உடல்தான் அழிந்தது
உன் பெயரும் உன் செயலும் அழிந்திடாது.
இருண்ட வீட்டிற்கு வெளிச்சம் பாய்ச்ச முனைந்தாய்
உன்னைக் கொன்றார்கள்
நாம் இன்னும் இருளிலே.........
நீ என்றும் எம் உள்ளங்களில் நிறைந்திருப்பாய்!
சரித்திரம் உன்னை ஒரு நாளும் மறவாது.
உனக்கு எமது அஞ்சலிகள்.

## மீளாத பொழுதுகள்

*அமைதியான காலைப் பொழுது*
*காலைச் செம்மை கண்களைக் கவரும்.*
*காகம் கரைதலும் இனிமையாய் ஒலிக்கும்.*
*நீண்டு பரந்த தோட்ட வெளிகளில்*
*தென்றல் தவழ்ந்து மேனியைத் தழுவும்*
*எங்கும் அமைதி !எதிலும் இனிமை!*

*நேற்று வரையும்*
*அமைதியான காலைப் பொழுது..*

*பொழுது புலராக் கருமை வேளையில்*
*தட தடத்துறுமின வண்டிகள்*
*அவலக் குரல்கள் "ஐயோ ! அம்மா !"*
*தோட்ட வெளிகள் அதிர்ந்து நடுங்கின*
*அங்கு மிங்கும் காக்கி உடைகளாய்.............*

*ஆட்கள் வெருண்டனர்*
*அள்ளி ஏற்றிய இளைஞர்கள்*
*மூச்சுத் திணறினர்.*

*தாய்மையின் அழுகையும்*
*தங்கையின் விம்மலும்*
*பொழுது புலர்தலில்*
*அவலமாய்க் கேட்டன.*

*காகம் கரைதலும் நெருடலாய் ஒலித்தது.*
*மெல்லிய ஒலிகளும் பயத்தையே தூண்டின*
*எங்கும் அச்சம் எதிலும் அமைதி.*
*தென்றல் சிலிர்ப்பதில் உணர்வே இல்லை*
*காலைச் செம்மையை ரசிப்பதை மறந்தோம்......*
*நேற்று வரையும்*
*அமைதியான காலைப் பொழுது!*

-- செல்வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேற்று.
# இன்று!
# நாளை?

கோடை விடியலின்
அவசர வருகையால்
கொடிய இரவொன்று
இருப்பை இழந்தது.

இந்த நிமிடம்
உயிர் வாழ்ந்திருப்பதினால்
உருவான மகிழ்ச்சியை
கடந்து சென்ற கணங்களில்
பயங்கர ஞாபகமூட்டல்
தகர்த்தெறிந்தது.

சின்னஞ் சிறிய
சிறகுகளை விரித்து
விடுமுறையில்
பறந்தோடி வந்தாயா
ஆயஸ்?[1]

சின்னச் சின்ன
ஆசைகளைச் சுமந்த உன்னை
தீயிலிட்டு
ஓலமிட்டு சிரித்தனரோ
நாசிய ஓநாய்கள்!



அன்று மூவர்
பின் ஐவர்
இறந்து போன இரவில்
மொகமட்டோ?
தேன் மொழியோ?

நான்
ஒரு அகதியானதால்
வெள்ளை நிறத்தவள்
ஜேர்மன் இனத்தவள்
அல்லாததால்
எந்தவொரு கணத்திலும்
இந்த அந்நிய தேசத்தில்
எரிக்கப்பட்டோ..............
கடித்துக் குதறப்பட்டோ ..........

-- நிருபா.

[1] நாசிகள் வெளிநாட்டவர்கள் இல்லங்களைத் தீயிட்ட போது எரிந்து மரணமான துருக்கி நாட்டைச் சேர்ந்த பெண்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தேவா

பாமினிக்கு லேசாய் இடுப்புவலி இருந்தது. என்றாலும் பல்லைக்கடித்துக்கொண்டு சமையலறைக்குப் போனாள். "இவருக்கு சாப்பாடு கொடுத்துவிடவேண்டும்" பெரிய ஒரு பொறுப்பு அவளை வருத்தியது. இரண்டுபேரே நிற்ககூடிய அந்தக் குசினியுள் அவள் அடுப்பைத்திறந்து அரிசியை கழுவி, குனிந்து பாத்திரங்களைத் தேடி. . . . . . . . . . . . "என்ன செய்கிறீர் எனக்கு நேரமாயிட்டுது " கணவன் குளியல் அறையில் இருந்து குரல் கொடுக்கிறான். என்னை என்ன சொல்லுறியள். உவளெவயிட்ட உதவி செய்யச் சொல்லுங்கோவன். நானே கிடந்துசாகிறன்"

இடுப்புவலி இன்னும் கூடவே வருத்தியது பாமினியை. "உன்ர பெட்டையள்தானே. நீ வளத்த வளப்பு. வாங்கடி. இங்க கொம்மாவுக்கு எதென்டாலும் உதவி செய்யுங்கடி"

ஒருத்தி மட்டும் குசினியை எட்டிப்பார்த்தாள். கடைசி மகளின் நிழலைக் கண்ட பாமினிக்கு எரிச்சல் கூடியது. " இஞ்ச பாருங்கோவன் குமரிகள் எல்லாம் ரி.வி பாக்குதுகள். இவ.ர் சின்னப்பெட்டையை மட்டும் இங்க அனுப்பியிருக்கிறாளவை"

அடி, ஏச்சு, அழுகை இவையெல்லாம் ஒன்றுதிரண்டு சுவர்களில் முட்டி மோதின. ரி.வி. நிற்பாட்டப்பட்டது. எல்லாப் பெண்களுமே ஓடிப்போய் பெற்ரூமில் மறைந்து போனார்கள். ஒருத்திமட்டும் அம்மாவிடம் வந்தாள். "என்ன செய்யச் சொல்லுறாய் " அவள் முழுக்கோபமும் அம்மாவில் இருந்தது. " தேங்காயைத் துருவித்தாவடி" ஜேர்மனிக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் தேங்காய்ப்பால் விட்டுக்கறிசமைத்துத் தந்துவிடும் பெருமையைப் பெரிதாகவே எல்லா நண்பிகளிடமும் சொல்லிக்கொள்வாள் பாமினி.

" நான் அங்க மாடுமாதிரி பாடுபடுறன். இதுகள் படம் பாத்துக் கொண்டு திரியுதுகள். இதுகளுக்காக நான் மாஞ்சு போறன். . . . இதுகள் என்னாவென்டால் . . . . . . மோகனுக்கு எதில் ஆத்திரம் என்று தெரியாமல்க் கத்திக் கொண்டிருந்தான்.

கணவனுடைய சாப்பாட்டைக் கரியலில்ப் போட்டு மூடும் போதே பாமினிக்கும் அவன்பால் மிகவும் பரிவு ஏற்பட்டது . "பாவம் மனிசன். . . . எங்களுக்காகத்தானே இப்பிடி அவதிப்படுது. ஐஞ்சு பெட்டையளுக்கும் எனக்கும், உழைக்கிற தெண்டால் . . . . சும்மாவே? அந்த வெக்கேக்க வேலை செய்திட்டு வருது . பாவம் . . . . . இந்த மனிசனும் என்ன மாதிரி உடைஞ்சிட்டுது "

நானுந்தான் இந்தக் குளிர் நாட்டுக்கு வந்து பாத்துக்கொண்டிருக்கிறன், ஒரு வருஷத்துக்கு இந்த மனிசனுக்கு நாலு கிழமை லீவு எண்டுதான் பேர் ஆறஅமர படுத்து எழும்பவும் எண்டு இருந்தால்த்தானே. . . . . . . எவனும் வந்திடுவாங்கள்; பார்ட்டி எண்டு இரவுபகலாய் கூத்துத்தான். ம். . . . கஷ்டப்பட்டு உழைக்கிறதுகள். வாடி! இஞ்ச கமலா சப்பாத்தைக் கொண்டு வா. . . .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பா வீட்டைவிட்டு வெளியேறினால்ப் போதும் ! என்ற அற்ப சந்தோஷத்தில் சின்னவள் சப்பாத்து,மேஸ் கொண்டுவந்து தந்தாள். மோகன் கதவைச்சாத்திக் கொண்டு வெளியேறியதுதான் தாமதம் , முத்தவள் ஓடிவந்து ரி.வி யைப்போட்டாள். மற்ற நால்வரும் ஓடிவந்து தங்கள் இடத்தைப் பிடித்துப் கொண்டனர்.

பாமினியின் இடுப்பு வலி குறைந்த மாதிரி இருந்தது. அவளும் வந்து வசதியாக உட்கார்ந்து கொண்டாள். " என்ன நடந்தது இடையில? நான் பாக்கேல்ல ரிவைண்ல விடன் " " நீங்கதான் அப்பாட்ட கோள்மூட்டி விட்டனீங்க" . . . . . . . . கடைசிப்பெட்டை வாயாடி என்று பெயரெடுத்தவள் . பாமினி கள்ளச் சிரிப்புச் சிரித்தாள். " உண்மைதானே ! உதவி செய்தால் தானே சாப்பிடலாம், படமும் பாக்கலாம். "

" தெரியும் எங்களுக்கு , இண்டைக்கும் எங்களுக்கு பாண்தானே? "

"பெரிய சமையல்... ஏன்? உங்கட கொப்பருக்குச் சமைச்சுக்கொடுத்துவிடேல்லையே. "உழைக்கிற மனிசன். வரட்டும், சொல்லித்தாறன்.

இந்த ஆயுதம் ஒன்றுதான் பாமினிக்கு எப்போதும் உதவிக்கு வரும். அவள் பேச்சை இந்த ஐந்து பெண்களும் கணக்கெடுக்கவே மாட்டார்கள். இப்படி நடப்பது ஜேர்மனிக்கு வந்துதானா? இல்லையே . . . . . . . . அங்கு இலங்கையிலும் கூடத்தான். தன்னுடைய தகப்பனை உதவிக்கு அழைத்து, பயன்படுத்தி தன்னை வாழப்பழக்கிக் கொண்டவள். இங்கென்ன புதிதாகவா. . . . மாறிவிட முடியும்.

அதுவும் ஒரு படுக்கையறை ஒரு வசிப்பறை, குளியலறை, குசினி. இதற்குள் ஐந்து பெண்களும் தானும் கணவனும் நடத்தும் வாழ்க்கை பாமினிக்கு பல சமயங்களில் வெறுப்பூட்டும் "சீ . . . . இதென்ன . . . . விசர் வாழ்க்கை" என அலுத்துக் கொள்வாள். "இதுக்கிடையில இன்னொண்டு" அவள் படம் பார்த்துக்கொண்டிருந்தாலும், மனம் என்னவோ அசைபோட்டுக் கொண்டிருந்தது. நான் வேணாம் என்டன். இந்த மனிசன் கேட்டால்த்தானே? ஐந்துபெட்டைக்கு பிறகெண்டாலும் , ஒரு பெடியன் வேணுமாம் .

இந்தச் சமயத்தில் அவளைப்பயம் பிடித்துக்கொண்டது. குசினிக்குப் போய் ஒரு கோப்பி குடித்தால் நல்லது போலிருந்தது. வயிற்றுக்குள் என்னென்னவோ நடந்து கொண்டிருந்தது. "எங்க போறீங்க ? மறுபடி ரிவைன் பண்ணமாட்டம் இருந்து பாருங்கோ" ஒருத்தி கத்தினாள்.

பாமினியின் பயம் ஒரு கோப்பி குடிப்பதனால் போய்விடுமா என்பது அவளுக்கு தெரியும். என்றாலும் மனசு புறுபுறுத்தது. இந்த மனிசன் விடியவும் சொல்லிப்போட்டுது " இந்த முறையும் பெட்டையெண்டால் ! ஆசுப்பத்திரிக்கு உன்னைப்பாக்கவும் வரமாட்டன். "

" அதுக்கு நான் என்ன செய்யிறது? உங்களையெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டு காசு செலவழிச்சு கடன் வாங்கி எடுத்திருக்கிறன்."

பாமினியால் இதற்கும் ஆண்பிள்ளைக்கும் என்ன சம்மந்தம் ? என்று விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவருக்கும் ஆசைதானே , எல்லாம் பெட்டைகளாய்ப் பிறந்திட்டுதுகள். பெடியன் ஒண்டு வேணுந்தானே . . . . . . . . "

இந்த மனிசன் சொன்ன மாதிரி ஆசுப்பத்திரிக்கு வராவிட்டாலும் , விட்டிடும் அங்க ஒரு இளவும் எனக்கு விளங்காது. அவளவை எதையும் கேட்பாளவை நான் மேலேயும் கீழேயும் முழிக்கப் போறன்"

எனக்கு உக்காந்து நிம்மதியா எண்டாலும் இருக்கேலாது. இஞ்சுாரான் வயித்துள்ள உதைநடக்குது. ஓடி விளையாடுது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரி.வி. யிலும் கூட உதைத்து புரண்டு வெகுவேகமாக மல்லுக்கட்டிக் கொண்டிருந்தனர் .

இரண்டாவது மகள் மட்டும் அம்மாவை ஒரு தடவை திரும்பிப்பார்த்து விட்டு மீண்டும் படத்தில் லயித்து விட்டாள். இந்த முறையும் பெட்டை பிறந்திட்டால் . . . . . . . . . இவன் மூத்தவளுக்கும் அப்படி இப்பிடி எண்டு கொஞ்சம் டொச் கதைப்பாள். நான் எப்படி இதுகளை சமாளிக்கப்போறன்? கடவுளே ! எனக்கு இந்த முறை எப்பிடியெண்டாலும் ஒரு ஆண்பிளைப்பிள்ளை பிறக்க வேணும். ஊரில்ல இருக்கிற அம்மனுக்கு வைச்ச நேத்திய எப்பிடியும் முடிப்பன்.

என்னும் நாலு கிழமைக்குள் பிள்ளை என்று டொக்டரும் சொல்லிப் போட்டார். டொக்டர் சொல்றதெல்லாம் இருக்கு விளங்குதோ, எல்லாத்துக்கும் தலையாட்டிப் போட்டு வரும். இஞ்ச என்னட்டைத்தான் எல்லாப் போடும் போடுவார்.

" மூடுங்கடி ரி.வி. யை. ஒரோத்தடி படிக்கிறதில்லையோ. . . . . . .? பாமினிக்கு எல்லாவற்றிலும் வெறுப்பு வந்தது. இந்தப் பெண்கள் சிரித்துக் கொண்டு சந்தோஷமாய் இருக்கிறார்கள். எதற்கோ எல்லாப் பெண்களும் சேர்ந்து சிரித்தார்கள். அவள் வார்த்தையை யாரும் மதிப்பதாகத் தெரியவில்லை.

"இப்ப மூடப்போறீங்களோ.... இல்லையோ ....? கொப்பர் வரட்டும் சொல்லித்தாறன்" "கொப்பிய நாளைக்கு மாமா வந்து திருப்பிக்கொண்டு போடுவார் . பாத்துப் போட்டுத்தாறன் எண்டு நீங்கதானே வேண்டினியள் . . . . . ." வந்த எரிச்சலில் பாமினி, "ஓம், ஓம் . பொழுது விடிஞ்சா உங்களுக்கு படம் தான்" என்றவளுக்கு படுத்தால் தேவலை என்றிருந்தது.

நீண்டு கிடந்த மூன்று கிழமைக்காலம் அவளுக்கு பெரிய பாரத்தைத்தந்தது. பெட்டையாய் பிறந்திட்டால் . . . . ஊருக்கு போயிடுவன் இஞ்சை இருந்து என்ன செய்ய? ஒரே நோயும் குளிரும் தான் . இந்த மனுசனும் பத்து வருஷமாய் உழைச்சு உழைச்சு என்னத்தைக்கண்டது . பேசாம அங்கேயே இருந்திருக்கலாம்" இடுப்புவலி வருகிறமாதிரி இருந்தது. புரண்டு படுத்தாள்; இன்னும் நாள் கிடக்கு தானே? ஆம்பிளைபெண்டால் எண்டால் முந்திப்பிறக்கும் எண்டு சொல்லுவினம்.

அவளுக்கு சிலசமயம் சந்தோஷமாயும் இருந்தது. அந்த மகிழ்ச்சியில் உறங்கிப் போனாள். அவள் கணவன் வந்து தனது பக்கத்தில் படுத்துக் கொண்டதோ, தனது பெண்கள் சாப்பிட்டதோ அவளுக்கு தெரிந்திருக்கவில்லை.

அவள் விழித்து எழுந்திருக்க முயற்சி செய்த போது வயிறு மீண்டும் பாரம் கூடின மாதிரி தெரிந்தது. பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த போது மோகனும் எழுந்துவிட்டான்.

"இண்டைக்கு டொக்ரிட்ட போவேணும். தெரியும் தானே" பாமினியின் குரல் ஒரு எதிர்ப்பார்ப்போடு இருந்தது.

"இவன் மூத்தவளை கூட்டிக்கொண்டு போவன். நான் லீவு எடுக்கேலாது." "நேற்றும் எனக்கு சாடையா வலிவந்திட்டுது, சிலவேளை ஆம்பிளைபிள்ளையோ" . . . . . . அவன் முகத்தை ஆவலோடு பார்த்தாள் பாமினி. "பாப்போம் உம்மட லக் எப்பிடி எண்டு. நான் சொன்னபடி செய்வன். உமக்கு ரெண்டு பவுண் கொடியிலபோட வாங்கித்தருவன்". கணவன் கண்களைச்சிட்டி சொன்னபோது அவளுக்கு பெருமையாய் இருந்தது.

"ஆண்பிளைபிள்ளைதான்"

"சரி, சரி தேத்தண்ணியகொண்டா. பகல் ஷிப்டுக்கு போக முந்தி இன்னொரு நித்திரை கொள்ள வேணும்." "இஞ்ச பாருங்கோ, பருப்பு, மரக்கறி வேண்டவேணும். காசை தந்திட்டு போய்ப்படுங்கோ." "காசு , காசு எண்டுதான் அழுவியள். பாங்குக்குத்தான் போகவேணும்" அவன் சேட்டை மாட்டிக்கொண்டு போகும் போது பாமினி நினைத்தாள்.

"பாங்கில காசை எப்படி எடுக்கிறதெண்டு காட்டி குடுத்தால் நானும் போய் எடுப்பன் தானே. . . . . தானும் பத்தும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐந்தும் ஆக வீட்டுச்செலவுக்கு கொடுக்கும் காசில் மிச்சம் பிடித்து வருவது இவருக்கு எங்கே தெரியப்போகிறது. " இவர் பத்துவருஷமா உழைச்சவாரம் என்னத்தைக் கண்டார். நான்வந்து அப்பிடி, இப்பிடி எண்டு ரெண்டு செயின் வாங்கிப்போட்டன். இவ்வளவு காலத்துக்கு நான் எண்டா எவ்வளவு சேத்திருப்பன் பாமினிக்கு கொஞ்சம் அலைந்து திரிந்தால் தேவலை போலிருந்தது. வயிற்றுப்பாரம் முட்டிமுட்டி நெஞ்சுக்கு ஏறிக்கொண்டு இருந்தது. "இந்தக் கிழமை பிறந்திட்டா. . . . ."

அவள் நினைவுகள் தன் கணவன்விருப்பு , வெறுப்புகளிலேயே நிலைத்தது. "சில வேளை பிறந்திட்டால். . . . . . தன் மீதே வெறுப்பு வளர்ந்தது . "பின்நேரம் டொக்டரிட்ட போகாமல் விட்டால்தான் என்ன...? ஒழுங்காய் செக் பண்ணினால், தானாமே ஏதோ உதவிக்காசும் கிடைக்குமாம். இல்லாட்டி இவரும் பேசுவார். போகத்தான் வேணும். இந்த மனிசன் வரமாட்டுதாமே . . . . இவன் மூத்தவளைத்தான் கூட்டிக் கொண்டு போவம்.

"அவளும் எவ்வளவு நாளா கேட்டு கொண்டிருக்கிறாள். றேடியோவுக்கு பற்றிரி வேணுமெண்டு, அது வேண்டி கொடுத்தாத்தான் வருவாள். இவட்ட கேப்பம்" கதவுதிறக்கப்படும் சத்தம் கேட்ட மோகன் திரும்பி விட்டான். "இடுப்புவலி சாடையா வந்தபடியால் இண்டைக்கு டொக்டரிட்ட போ ." " நீங்க வாங்கோவன் லீவு போட்டுட்டு " அவனுடைய அன்பைத்தேடி அலைந்தது அவளது ஆத்மாவும் கூட . . . . . . "உமக்கென்ன விசரே? எத்தனை பெட்டையள பெத்திட்டீர் . இன்று தெரியாதே . . . . நான் லீவுபோட அவன் என்ன மச்சானா. . . . காசை அவள் கையில் திணித்துவிட்டுப் படுக்கப்போய் விட்டான். பாமினிக்கு உலகமே வெறுத்துப்போனது. "பேசாம ஊரில் கிடந்திருக்கலாம்"

மகளை இழுத்துக்கொண்டு போனாள் டொக்டரிடம்.

அங்கே பரிசோதனையின் பின் வெளியில் நின்ற மகள் உள்ளே வந்தாள். "உங்கள இப்பவே ஆசுப்பத்திரிக்கு போகட்டாம்." பாமினியின் கால்கள் பலமிழந்து போயின. "நான் போகேலாது நாள் கிடக்குத்தானே , சொல்லன்." மகள் திரும்பி இவளிடமே வந்தாள் "அவளவ சொல்லினம் உங்கள ஆசுப்பத்திரிக்குப் போகட்டாம்."

"அப்ப கொப்பருக்கு யார் சொல்லுறது . என்ர துணிமணிகள் எப்பிடி எடுக்கிறது." "நான் கொணந்து தாறன். வாங்க போவம் ஆசுப்பத்திரிக்கு " பாமினிக்கு முழு உடம்பும் நடுங்க ஆரம்பித்தது. தன் உடம்பு ஏன் இப்படி பாரமாகிப்போனது? கால்கள் அடியெடுத்து வைக்கவே மறுத்தன.

"பிள்ள இண்டைக்கே பிறந்திடுமோ? இந்த மனுசன் என்னைத்தேடி பாக்கவருமோ. . . . . . . . "எல்லாம் வெள்ளையாய் , வெறுமையாய் தெரிந்தது. கட்டிலில் ஏறிப்படுத்தது மட்டும் தெரியும். ஒன்றையும் யோசிக்க முடியவில்லை. தான் செத்துப் போய் விட்டால் என்ன என்ற நினைப்பு மேலோங்கி நின்றது. பாமினி நினைவிழந்தாள்.

யாரோ தொட்டு தன்னை எழுப்பின மாதிரி இருந்தது . . . மோகனின் சிரித்த முகம் அவள் கனவில் வந்த மாதிரி தெரிந்தது. வயிற்றை தொட்டுப்பார்த்தாள். பாரம்குறைந்து சுருங்கி இருந்தது.

"பிள்ளை எங்கே. . . . " அதிர்ச்சியடைந்து போன பாமினியை மோகனின் கரங்கள் சமாதானப்படுத்தின. பக்கத்துத்தொட்டிலில் ஒரு சின்ன ஜீவன் உறங்கிக் கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோசல்யா கவிதைகள் பற்றி......

– தேவிகா

( 20.06.1993 அன்று முல்சைமில் நடைபெற்ற "கோசல்யா கவிதைகள்" என்ற நூலின் வெளியீட்டு விழாவில் தேவிகாவினால் ஆற்றப்பட்ட உரையே இங்கே பிரசுரமாகின்றது.)

இன்று இங்கு நடைபெறுகின்ற "கோசல்யா கவிதை" தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வினையொட்டி நாமெல்லோரும் இங்கு கூடியிருக்கின்றோம்.

தமிழிலக்கியத்தின் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும் போது, அரசசபைகளிலும், பெரும் புலவர்களும்,பண்டிதர்களும் கூடுமிடங்களிலேயும் தான் இவ்வாறான கவிதை பாடுதல், நூல் அரங்கேற்றம், அல்லது கவிதை நயத்தல் போன்ற நிகழ்வுகள் நடந்ததாக அறியப்படுகிறது. பல்கலைக்கழகங்களிலும் நடைபெற்ற இந்நிகழ்வுகள் தற்போது சஞ்சிகைகளினூடாகவும், சந்திப்புகளினூடாகவும் எம்மைப்போன்ற சாதாரண மனிதர்கள் கூடுமிடங்களிலே நடைபெறுகின்ற சங்கதியாகிவிட்டது.

மனிதனுடைய கண்டுபிடிப்புகளுள் அதியுயர்ந்த கண்டுபிடிப்பு மொழி. இதுவே ஒரு மனிதனின் உள்ளத்து உணர்வை வெளிக் கொண்டுவரும் ஊடகமாக அமைகிறது. இம்மொழியின் சிறப்புப்பற்றித் தனது படைப்பொன்றின், "மொழி மனிதனை மேம்படுத்துகிறது; கவிதையோ மொழியை மேம்படுத்துகிறது" என்று குறிப்பிடுகிறார் கவிஞர் வைரமுத்து. இப்படி மொழியையே மேம்படுத்துகின்ற கவிதை படைக்கும் ஆற்றலென்பது சிலருக்கு இயல்பாகவே அமைந்து விடுகிறது. சிலர் இலக்கண, இலக்கியங்களை விதிமுறைப்படி கற்றறிந்து அதன் மூலம் வந்த பயிற்சியினாலோ அல்லது தேர்ச்சியினாலோ கவிதை படைக்கிறார்கள். சிலருக்கு இவ்வாற்றல் இயல்பாகவே அமைந்து விடுகிறது. இவ்வாற்றல் இயற்கையாகவோ, பயிற்சியினாலோ வந்ததாயினும் கவிதை எழுதுபவர்கள் பலவிதமானவர்களாயுள்ளனர்.

சமுதாயம் வேகமாக மாறிவருகிறது. இதனால் மனிதன் தனது சூழலில், புதிய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியவனாகிறான். இச்சிக்கல்களை ஒவ்வொரு கவிஞனும் வெவ்வேறுவிதங்களில் நோக்குவான். சிலர் அமைதியாகவும், நிதானமாகவும் தமது கவிதையில் விஷயத்தைச் சொல்லுவார்கள். சிலரோ ஆவேசத்துடன் குமுறியெழுந்து பிரச்சனைகளைச் சொல்லுவார்கள். சிலரது கவிதைகளிலே சமுதாயக் குறைபாடுகளும், அங்கு நிலவும் சீர்கேடுகளும் மட்டுமே சொல்லப்பட்டிருக்கும். சிலவற்றில் அவற்றுக்கான தீர்வுகளும் இருக்கும். சிலர் அடுத்தவனுடைய துன்பத்தை தான் அனுபவித்தது போல எழுதுவார்கள். சிலரோ தமது அனுபவங்களையே மாற்றமேதுமின்றி, வார்த்தை அலங்காரங்களுமின்றி கவிதைகளாக வடித்து விடுவார்கள். பெண்களுடைய பிரச்சனைப்பற்றி பெண்களே எழுதுகின்ற கவிதைகள் இத்தகையவை என்றே கருதுகின்றேன்.

கவிதையோ ,சிறுகதையோ படைக்கின்ற ஒருவருக்கு எதைக் கண்டும் ஒதுங்கிப்போகாத இயல்பு இருக்க வேண்டும். தன்னைச் சூழவுள்ள உலகில் நடக்கின்ற எதிலும் , எந்தச் சூழ்நிலையிலும் ஈடுபாடு இருக்க வேண்டும். அதேவேளையில் அவரது வாழ்க்கை அனுபவமும் , அந்த அனுபவத்தினைப் பரிசோதித்துப்பார்க்கும் துணிவும் இருப்பின் நிச்சயம் அவர் தனது படைப்பில் வெற்றி பெறுவார்.

இது எல்லாமிருக்க , கவிதையோ , கதையோ எழுதுபவருக்குக் கரு எப்படிக் கிடைக்கிறது? என்று பார்த்தால், கண்ட , கேட்ட, அனுபவித்த சம்பவங்களோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது கற்பனையில் உதித்ததாகவோ, எப்படியோ ஒரு கரு அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது. எழுதுவதற்கு எந்தக்கருவும் கிடைக்கவில்லை என்று கவிஞர்களோ, எழுத்தாளர்களோ திண்டாடிப் போனார்கள் என்று எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இதைச் சொல்லும் போது மகாகவியின் கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது. **"பாடுங்கள அத்தான்"** என்று தலைப்பிட்ட கவிதை. கவிஞன், *புழுதி படிந்த இப்பூமியினுக்கப்பால் விண்ணினம் போய்க் கவிபாட விஷயங்கள் தேடுவோம் வா !* என்றழைக்கிறான். அதற்கு அப்பெண் அதை மறுத்து ஏனத்தான் ! *இவ்வுலகில் எவ்வளவோ விஷயங்கள் உண்டே,*

*"இன்றவைதான் கவி எழுத*
*ஏற்ற பொருள் என்று , பிறர்*
*சொன்னவற்றை நீர் திருப்பிச்*
*சொல்லாதீர் ! சோலை , கடல்,*
*மின்னல் , முகில் , தென்றலினை*
*மறவுங்கள் நீந்திருக்கும்*
*இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு*
*என்பவற்றைப் பாடுங்கள்"*

என்று அவருக்கு அறிவுறுத்துகின்றாள். இயற்கையழகையும் கடவுளையும் போற்றிப்பாட வேண்டியளவு கவிஞர்கள் உள்ளனர். நீங்கள் மனித குலத்தின் மேம்பாட்டையோ, அல்லது அதன் இன்னல்களையோ பாடுங்கள் என்று கூறுகிறாள். இதைப்போலத்தான் கோசல்யாவும் தம்மை விட்டு வெகுதூரம் சென்று கவிதைக்கான கருக்களைத் தேடவில்லை. எமது மண், மக்கள் அவர்களைச் சுற்றியுள்ள பிரச்சனைகள் என்பதையே பாடு பொருளாக்கியுள்ளதால் பாராட்டுப் பெறுகின்றாள். அவரது கவிதைகளில் பெண்களின் பிரச்சனைக் குறித்து அவர் எழுதிய கவிதைகள் பெரும்பாலும் நமதுகுரல் சஞ்சிகையில் வெளியானவை.

எமது கடந்த காலம் பெண்களைப் பற்றிய சிந்தனைகளைத் தொடாமலேயே கழிந்து விட்டது. ஆம் ! "மாதர் தம்மை *இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்"* என்று பாரதி பாடி நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இருந்த போதிலும் எமது சமூகத்தில் இன்றள வும் நிலவுகின்ற குறைபாடுகளை நாம் களையவில்லை என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார். **"சின்னவளாய்...."** என்ற கவிதையில் ஒரு சிறுகதையையே சொல்லி விடுகின்றார். ஆண்குழந்தைகளைப் படிக்க வைத்து முன்னேற்றுவதும், பெண்குழந்தைகள் அடுக்களைக்குள் அம்மாவுக்கு உதவி செய்வதும் பெரியவர்களான பின் அவர்களிடையே கார், பங்களா, கறுத்தக் கோட்டு என்ற ஏற்றத்தாழ்வு பெண்ணைப்படிக்க வைக்காததால் தான் வந்தது என்று சொல்கிறார் . உண்மைதான். இன்றைய முன்னேறிய நாடுகளிலும வயோதிப காலங்களில் வறுமையில் வாடுபவர்களில் பெரும்பாலானோர் பெண்களே . ஏனெனில் அவர்களின் தொழிற்கல்வி மீது அக்கறை காட்டப்படாமை, அவர்கள் பார்க்கும் வேலைகளுக்கான குறைந்த சம்பளம், உத்தியோக உயர்வு கிடைக்காமை, திருமணமானபின் அதுவும் குழந்தை பெற்றபின் வேலையை விட்டுவிட வேண்டி நேரிடும் சூழ்நிலை இவற்றால் மிகக் குறைந்த ஓய்வூதியப் பணத்தையே பெறுவதால் பெண்களே முதுமைக்காலத்தைச் சிரமத்துடன் கழிக்க வேண்டியுள்ளது. இத்தனை பெரிய உண்மையை கோசல்யா இச்சிறு கவிதைக்குள் அடக்கி விட்டார்.

பெண்களின் பிரச்சனை குறித்து எழுதப்படும் இத்தகைய கவிதைகளால் மெல்ல, மெல்ல எம்மிடையே அரும்பி வரும் விழிப்புணர்வுகளும், புதிய சிந்தனைகளும் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிப் போக்கினையே காட்டுகின்றது. இன்றும் முழுமையாக இவை எல்லாப் பெண்களையும் போய் அடைய வேண்டும் என்ற நோக்கில் **"உன்னிடத்தில் தோழி"** என்றழைத்து நெருங்கும் கோசல்யா மிகுந்த பக்குவ உணர்வுடன் தான் சொல்ல வந்ததை சொல்லுகிறார். இவரது கவிதைகளில் ஆண் எதிர்ப்பு உணர்வு சற்றும் தோன்றிடாதபடி மிகக் கவனமாக எழுதுகிறார். பெண்ணினத்துக்கு ஆதரவுக்குரல் கொடுப்பதென்பது ஆணினத்தை எதிர்ப்பதென்பதல்ல என்பதை நாம் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும் . அதை இவரது கவிதைகளிலே காணலாம்.

அடுத்ததாக சீதனம் பற்றிய கவிதைகளுக்கு வருவோம். " ஆண்கள் எவ்வளவோ விடயத்தில் அப்பா, அம்மாவுக்கு அடங்காமல் நடந்து கொள்கிறார்கள். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீதனம் என்று வரும் போது மட்டும் பெற்றோர் சொல்லை மீறாத பிள்ளைகளாக நடந்து கொள்கிறார்கள் ! ! என்று வரதட்சணை எதிர்ப்புக் கருத்தரங்கொன்றில் கலந்துகொண்ட புகழ் பெற்ற நாவலாசிரியையான ராஜம் கிருஷ்ணன் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இதே கருத்தரங்கு மண்டபத்தில் "500 ரூபாய் கொடுத்து வாங்கிய மாட்டை கொட்டகையில் கட்டி விட்டேன், 1500 ரூ கொடுத்து வாங்கிய அத்தானை என்ன செய்வது? மகளின் கேள்வி அப்பாவின் பதில்; கொண்டு வந்து கூடத்தில் கட்டு என்ற ஜோக் ஒன்றே கருத்தரங்கினர் எழுதி ஒட்டியிருந்தார்களாம்.

இப்படி எவ்வளவோ தூரம் கண்டித்தும் நையாண்டி செய்தும் தீராத பிரச்சனையான சீதனம் என்றநோய் இங்கும் துணிவுடன் வளர்வதை "**சீதனம்**" என்ற கவிதையில் ஆதங்கத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

"ஆண்மகன் காலை தொடக்கம் மாலை வரை வேலை செய்கிறான், பெண்ணின் வேலையோ முடிந்த பாடில்லை " என்று அறிஞர் குறிப்பிட்டுள்ளார். இப்படியானதொரு ஓய்வில்லாத வேலைப்பழுவுக்குள்ளும் தமக்கென ஒரு விடயம் குறித்து சிந்தித்து, எழுத்தில் வடித்து உலவ விடும் திறமை படைத்த பெண்களைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. இவர்களுக்கு இன்னும் சிறிது ஓய்வு கிடைத்தால் இன்னும் எத்தனையெத்தனை கருத்துக்களோ, படைப்புக்களோ வெளிவருமே என்ற ஆதங்கமும் பிறக்கிறது.

உண்மையிலேயே பெண்கள் படைப்பாளிகளாகவிளங்குவது சாதாரணமாக விடயம் என எண்ணி விடாதீர்கள் உ+ மாக ; நவால் எல் சாடவி என்பவர் எகிப்திய நாட்டைச் சேர்ந்த பெண் எழுத்தாளர், பெண்ணிலைவாதி ,அத்துடன் ஒரு மருத்துவரும் கூட துணிச்சலாகத் தனது கருத்துக்களை எழுதுபவர். இவரது சிறுகதைகள், நாவல்கள் என்பன பெண்களைப் பற்றிப் பேசுவன. இவரது எழுத்துக்கள் எழுத்துக்களை எகிப்தில் கடுந் தணிக்கைக் குள்ளாக்கப்பட்ட போது எகிப்துக்கு வெளியே அவற்றைப் பிரசுரம் செய்வித்தாள். *"பெண்கள் தன்னிலையுணர்தலுக்கு இலக்கியமே சிறந்த ஆயுதம்; பேப்பரையும் பேனாவையும் ஆயுதமாகப் பயன்படுத்துங்கள்"* என்று இவர் கூறுகிறார். அன்வர் சதாத்தின் ஆட்சிக்காலத்தில் நவால் எல் சாடவி சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது அதிகாரியொருவர் ஒவ்வொருநாளும் இவரது அறையைச் சோதனை போடுவாராம். "உங்களுடைய அறையில் பேப்பரையும் ,பேனாவையும் நான் கண்டால் ஆயுதம் ஒன்றைக் காண்பதிலும் அது ஆபத்தானது " என்று அந்த அதிகாரி கூறுவாராம்.

ஆணாதிக்கம் நிறைந்த உலகில் தாம் சார்ந்த துறைகளில் பெண் கலை இலக்கியவாதிகள் அங்கீகாரம் பெறுவது எவ்வளவு சிரமமானது என்பதை "மாறும் சமூகங்களில் பெண் கலைஞர்கள்" என்ற தனது கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த உண்மையை தனது உயிரைக் கொடுத்து நிரூபித்தவர் "**முறிந்த பனைமரம்** " தொகுதியை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்த **ராஜினி திரணகம** அவர்கள்.

பெண்களுடைய கவிதைத் தொகுப்பாக நானறிந்தவரையில் முதலில் வெளிவந்தது "**சொல்லாத சேதிகள்**" புகலிட இலக்கிய வரிசையில் பாரீசில் நடைபெற்ற இலக்கிய சந்திப்பில் "**மறையாத மறுபாதி**" என்ற தொகுப்பு பெண்களின் ஆக்கங்களைக் கொண்டு வெளியாகியது. அதற்கடுத்ததாக "**கோசல்யா கவிதைகள்**" வெளியாகியுள்ளது.

புலம் பெயர்ந்தது வந்தோரின் இலக்கிய எனும் போது எமது இலங்கையைச் சேர்ந்த மலைநாட்டு மக்களின் கிராமியப் பாடல்களும் அவ்வகையைச் சேர்ந்தவையே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் . அச்சிலேறா வாய் மொழி இலக்கியங்களாக இருந்த இப்பாடல்களை சி.வி. வேலுப்பிள்ளை என்பவர் தொகுத்து வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பிலுள்ள பாடல்கள், தென்னிந்தியாவின் சில கிராமங்களில் பஞ்சம் நிலவிய போது பஞ்சம் பிழைக்கவென புலம் பெயர்ந்து இலங்கைத் தீவுக்கு இந்த மக்கள் எப்படியான சூழலில் கண்டிச்சீமைக்கு வந்திறங்கினார்கள் என்பதையும் , எவ்வாறு அவர்களின் உழைப்பு சுரண்டப்பட்டது என்பதையும் விளக்குகிறது.

கண்டிக்கு வந்திறங்கியதும் தாம் நினைத்தது போல் அது சுவர்க்க பூமி இல்லை என்று கண்டதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கண்டி கண்டி எங்காதீங்க,
கண்டி பேச்சு பேசாதீங்க,
கண்டி படும் சீரழிவே,
கண்டி பேரு சொல்லு வாங்க " என்றும்

இன்னொரு பாடலில் ,

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தைப் பனைத் தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நான் மறந்தேன்" என்று

பாடுவதும் மனதை உருக வைப்பவை. எந்த மொழியிலும் எவை பாடப்பட்டாலும் ,சொல்லப்பட்டாலும் அது பதிவு செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை நூல் வெளியீட்டாளர் குறிப்பில், சுசீந்திரன் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அதை அவர் கல், கடல், கவிதை பற்றி சில நினைவுகள் என்ற தலைப்பில் சொல்லுகிறார். எழுத்தாளர்கள் பொதுவாகத் தமது படைப்புக்களை வெளிக்கொண்டு வர பதிப்பாளர்களையே நம்பியிருக்க வேண்டும். அவ்வேளையில் வியாபார நோக்கும் படைத்த பதிப்பாளர்களின் விருப்பு, வெறுப்புக்கேற்ப விட்டுக் கொடுப்புகளுடன் எழுதினாலேயே அவர்களின் எழுத்துக்கள் பிரபல பதிப்பகங்களினூடாக வெளிவரும் என்ற நிலையும் உண்டு. ஆனால் இங்கு ஐரோப்பாவில் , ஜேர்மனியில் தமிழ் வெளியீடுகளைப் பொறுத்தவரை இந்நிலை ஏற்படாது என்ற நம்பிக்கை பிறக்கிறது. **கோசல்யா கவிதைகளை** "நூல்" பதிப்பகம் மூலம் திரு. சுசீந்திரன் வெளியிட்டுள்ளார். பாரீசில் **"மறையாத மறுபாதி"** "புகலிடக் கருத்து இலக்கியம்" என்ற அமைப்பினால் பதிக்கப்பட்டுள்ளது. அதன் பதிப்பாசிரியர் "எழுதுவதென்பது இடி விழுவதற்கொப்பான சூழலில் படைப்பிலக்கியக் கர்த்தாக்களைத் தேடிக் கண்டு பிடிப்பது இயலாத காரியம் என்று குறிப்பிகிறார். முற்றிலும் உண்மையிது. இங்கு வெளிவரும் சஞ்சிகைகளில் காலத்துக்குக் காலம் வெளி வந்த கவிதைகளே கோசல்யா கவிதைகளிலும், மறையாத மறுபாதியிலும் இடம் பெற்றுள்ளன. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இங்கு சஞ்சிகைகள் வெளிவந்தாலும் குறைந்த வாசகர்களையே அவை கொண்டிருக்கின்றன. இச்சஞ்சிகைகளுடனேயே இக்கவிதைகள் நின்றுபோய் விடக்கூடாது என்று எண்ணிய கோசல்யாவும், பதிப்பித்த சுசீந்திரனும் புகலிட இலக்கியத்துறைக்குப் பெரும் நன்மையையே செய்திருக்கிறார்கள்.

கோசல்யாவின், இத்தொகுப்பில் இடம் பெறாத ஏனைய கவிதைகளும் தொகுக்கப்பட வேண்டும். இவரது கவிதைகள் ஜேர்மன் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இருமொழியிலுமான கவிதைத் தொகுப்பொன்றினை இவர் வெளியிடுவாரானால் இந்நாட்டவரும் அதைப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

கவிதைகளையோ , கதைகளையோ பதிவு செய்யும் போது அவை வெளியான காலகட்டத்தைக் குறிப்பிடுவது அவசியம் . அத்துடன் இங்குள்ள நூலகங்களிலே இத்தொகுப்பினைச் சேர்ப்பிப்பதற்குரிய முயற்சியையும் எடுக்க வேண்டுமென கோசல்யா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் . புகலிடச்சூழலில் எழுதப்பட்ட கவிதைகள் என்ற ரீதியில் பிற்காலத்தில் தமிழை அந்நிய மொழியாகக் கற்கும் அல்லது ஆய்வுக்கெடுக்கும் மாணவர்க்கு இது பயன்படும் என்று நம்புகிறேன். ஒருவருக்கு இயற்கையாயமைந்த திறன் செம்மைப்படுத்தலின் மூலம் சிறந்தோங்கி வளருகிறது. இதை சந்திரலேகா அவர்கள் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் **"கோசல்யா கவிதைகள்"** வெளியீட்டு விழா இன்றுடன் முடிந்துவிடுவதாக நான் கருதவில்லை. இங்கு சமுகமளித்திருக்கும் பெண்களிடையே மறைந்து இருக்கும் ஆற்றல்களையும் ,படைப்புத்திறன்களையும் தூண்டி விடும் ஒரு தொடக்க விழாவாகவே கருதிக்கொண்டு எனதுரையை முடித்துக் கொள்கிறேன். ❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்ணே !
எதிரில் எனைக்கண்டு
ஏன் தலை குனிந்தாய் . . . ?
என் கோலம்
என்ன அலங்கோலமா . . . . ?
கோரமா . . . . .
ஓ . . . அது
உன்
கலாச்சாரமா . . . .
நங்கையே . . . .
உன்
கருவில் ஓர் ஜனனம்
அதுவும் குனிந்த நிலையில்
அதுவும் பெண்ணினம்
என்றால் . . . . .
தொடர்ந்தும் குனிவுதான்
அதுவே ஆணினம்
என்றால்
பெண்ணே ! !
நீயும்
ஒரு பெண் பிரம்மா
படைத்தலில்
முக்கால் பாதி உள்ளதே
நிமிர் . . . சொல் . . .
உரக்கச் சொல்
படைத்தலில்
நானும் ஓர் பிரம்மி
நீ குனிந்து
குடிசைக்குள் வாழ்வதால்
அவர்கள் தெருவில்
நிமிர்கிறார்கள்
வானமே எங்கள் கூரை
அதற்குள்
கூறை, தாலி கட்டி
உனைக்குனிய வைக்க
இவர்கள் யார் . . . . ?
அவர்களைப் படைத்தவர் நாம்
ஏன் குனிய வேண்டும் . . ?
குனிய வேண்டியது அவர்கள்
நீ என்ன . . . .
சுமைதாங்கியா . . . ?
பள்ளியில் புத்தகம்
பருவத்தில் மாராப்பு
படுக்கையில் கணவன்
கருவில் சிசு
இவ்வளவும்
சுமந்த நீ
சவால் விடு
உங்களால் முடியுமா . . . ?

# விழிப்பு !

ஜெயா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தை

**மேர்ரா**

அதிகாலை வேளை பறவைகளின் சத்தமும், பெண்கள், சிறுமிகளின் ஆராவாரச்சத்தமும், அந்த அனாதை இல்லத்தில் இன்று அதிகமாக கேட்கவில்லை. பூக்கன்றுகளுக்கு இன்று தண்ணீர் ஊற்றத்தேவையில்லை. அந்தப் பெண்களுக்கு சந்தோஷம் ! வெளியே இடிமுழக்கத்தோடு மழை பெய்து கொண்டிருந்தது. தன் நிலைகண்டு தனக்காக வானம் அழதுகொண்டிருக்கிறது என்று நினைத்தாள் சாந்தி. இன்று தான் அவர்கள் வருவார்கள். அவளுக்கோ அன்று இரவு முழுவதும் நித்திரையில்லை ! அன்று மட்டுமா கடந்த ஒரு வருடமாக அவளுக்கு நிம்மதி இல்லாத நித்திரை , தன் வேதனைகளை தனக்குள்ளேயே அடக்கி அதிலேயே வாழப்பழகி கொண்டு விட்டாள். அவளின் மௌனத்தை அங்குள்ள ஒரு சில பெண்கள், தவறாக எடுத்துக்கொண்டு அவளைப்பற்றி தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள். இவ இவ்வளவு பெரிய தவறு செய்து ஒன்றும் தெரியாத மாதிரி இருக்கிறா, இவவாள இங்குள்ளவர்களும் கூடாத பெயர் கேட்க வேண்டியுள்ளது. அவர்களின் மனக்குமுறல் அந்த ஊரில் உள்ள ஒரு சிலர், இந்த அம்மா என்ன அனாதை இல்லம் நடத்துறாவோ? அல்லது வேறு ஏதும் நடத்துறாவோ? என்று கதைத்துக் கொண்டதின் எதிரொலி அப்படி பேச வைத்தது. இந்தப் பேச்சுக்கள் அவள் காதில் விழுந்தாலும் கேட்காதவள் மாதிரி இருப்பாள். தன் பெற்றோர்கள் பேசியதை விடவா இவர்கள் பேசிவிட்டார்கள்.

அக்கா ஏன் பேபி நெடுக நித்திரை கொள்கிறா? சிரிக்கமாட்டாவோ, கதைக்க மாட்டாவோ விளையாடமாட்டாவோ சிந்தனை கலைந்து திரும்பி பார்த்தான் ஜெயா தான் அந்த அனாதை இல்லத்தில் உள்ள ஆகக் குறைந்த வயதுள்ளவள் இந்த ஒரு மாதமாக தினமும் அவள் கேட்கும் கேள்விகள் தான் அவை. அவளுக்கு பதில் சொல்ல முடியவில்லை. அவள் தன் ஒரு மாத குழந்தையை பார்க்கிறாள். சிவந்த கன்னங்கள் கருகருவென்ற தலைமயிர் அழகிய மூடிய இமைகள், இவள் நித்திரையில் மெல்லச் சிரித்ததைத்தான் இவள் பார்த்திருக்கிறாள். ஒரு வேளை தன்னைப்பார்த்து சிரிக்க இவள் விரும்பவில்லையோ என்று நினைப்பதுண்டு. இந்தக் குழந்தைக்கு விளங்கி விட்டதா? தன்னைப்பற்றி தனக்கு பால் தராத அம்மா, தன்னோடு பேசி கொஞ்சி விளையாட விரும்பாத அம்மா, தன்னை யாருக்கோ கொடுக்க விரும்பும் அம்மா அதனால் தான் நித்திரையில் தினமும் ஆழ்ந்து போகிறாளா? பிறந்த உடனேயே தாய்ப்பால் கொடுக்க வேண்டாம், மாப்பாலே பழக்கச் சொல்லி வட்டார்கள். அவளால் முடியவில்லை. அவள் பெற்ற குழந்தைக்கு தாய்மை பாலூட்ட விரும்பிய போது அவள் மார்பகம் வற்றிவிட்டது. சோக சுமைகளைச் சுமந்ததால் இயற்கை சுரப்பிகள் தடைப்பட்டுவிட்டன. தனக்கு மட்டும் சுமைகளை தந்துவிட்டு அவன் இந்நேரம் புதுமனைவியோடு உல்லாச வாழ்க்கையில் மிதந்து கொண்டிருப்பான்.

அவள் நினைவுகள் பின்னோக்கி ஓடுகின்றன. யாழ்ப்பாணத்தில் எங்கோ ஒரு மூலையில் தாய் தந்தை இரண்டு தங்கைகளோடு வாழ்ந்த அவளை இளமையின் கோலங்கள் காதல் வயப்பட வைத்துவிட்டன. கண்பார்வைகள், கடிதப்பரிமாறல், தனிமையின் சந்திப்பு இவைகளை மீறி அவனின் கட்டாயப்படுத்தலில் தன்னை இழந்து விட்டாள். எப்போதுமே நடந்து முடிந்த பின்தான் தவறுகளை உணர்வது உண்டு. அவள் தான் தாயாவதை உணர்ந்த போது இனம் தெரியாத பயம் தொற்றிக் கொண்டது. அவனிடம் சொல்லி எப்படியும் தன்னை திருமணம் செய்யுங்கோ என்று கேட்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைத்தான் சந்திக்க முடியவில்லை. கடிதமூலம் தன்நிலைமை தெரிவித்து பதிலுக்கு காத்திருந்த வேளையில் இயற்கையின் மாற்றங்கள் அவளை காட்டி கொடுத்து விட்டது. வாந்தி எடுப்பதை அம்மா கண்டுவிட்டாள். பதறிப்போய் கேட்ட போது சாந்தியால் இனியும் மறைக்க முடியவில்லை. எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். ஒரு தாயின் வேதனையை முழுமையாக அப்போதான் உணர்ந்தாள் ஏச்சுகள் திட்டல்கள் எல்லாம் தீர்ந்த பின் அம்மாவும், அப்பாவும் அவள் கொடுத்த விலாசத்திற்கு சென்றுவந்தார்கள். அவர்கள் முகத்தில் வேதனைதான் நிரம்பியிருந்தது. அம்மா வந்ததும் வாரததுமாக சாந்தியை மாறி மாறி கன்னத்தில் அடித்தாள், உனக்கு பணக்காரமாப்பிளளை வேற சாதிக்காறன் வேண்டுமென்றே அவனைப் போய்ப் பிடிச்சனி? அவங்கள் எங்கட சாதியில பொம்பிளை எடுக்கிறதில்லையாம்? அதைவிட எங்கட்ட என்ன இருக்கு என்று கேட்டார்கள். அம்மா அழத்தொடங்கிவிட்டாள். அம்மா அவர் நல்லவர் அவரிட்ட கேட்டிருந்தால் . . . . அம்மா பத்திரகாளியானாள் , அவர் என்னடி அவர் ! அவன் உன்னோடு சும்மாதான் சிநேகிதி என்று பழகினானாம், தான் ஒன்றும் தவறு செய்ய இல்லையாம் அவனுக்கும் மச்சாள் காவிக்கும் கலியாணமாம்.

அவளுக்கு தலையில் இடிவிழுந்த மாதிரி இருந்தது. தன்னை கைவிடமாட்டான் கடைசி வரை காப்பாற்றுவான், இந்த வாக்குறுதிகள் காலங்காலமாக பெண்களை ஏமாற்ற ஆண்கள் பாவிக்கும் வெறும் வார்த்தைகள். அவள் இந்த இயலாமைக்கு தள்ளப்பட்டதன் காரணம், தான் ஒரு பெண் என்பதாலும் தனக்கு சமுகத்தால் தந்திருக்கும் ஏற்றத்தாழ்வுகளும் தன்காலில் நிற்க முடியாமல் பிறரை சார்ந்து வாழ வேண்டி நேர்ந்தால் ஏற்பட்ட கட்டுப்பாடுகளும் அவளை வாய்திறந்து பேசவைக்கவில்லை. அவள் தன்னை மாய்த்துக் கொள்ள முயற்சித்த போது அம்மா அழுது குளறி தடுத்து விட்டாள். நீ உனக்காக இல்லாட்டியும் உன் இரண்டு தங்கைகளுக்காகவுமாவது இந்த தவறைச் செய்ய வேண்டாம் என்று அழுதாள். அவர்கள் இருவரும் ஏதோ நடக்கிறது என்ன என்று தெரியாமல் அழுதார்கள்.

அம்மா என்ன செய்வது என்று தெரியாமல் கடைசியில் கோயில் போதகரிடம் உண்மையைச் சொல்லி அவர் மூலம் இந்த அனாதை இல்லத்திற்கு வந்து சேர்ந்தாள். அக்கா தையல் பழகப் போனா என்று தங்கைகளுக்கும் சமுதாயத்திற்கும் சொல்லிதான் அம்மா என்னை இங்கு விட்டு சென்றாள். இந்தப்பாழாய்ப் போன சமுதாயகட்டுப்பாடுகள் இவளை இன்று தனிமைபடுத்திவிட்டது. இந்தக் குழந்தையை சுமந்தபோது வெறுப்புகளும் வேதனைகளும் பெற்று யாருக்காவது கொடுத்து விடவேண்டும் என்ற மனநிலை இன்று அவளை அழவைக்கிறது. முடிவில் அழித்துவிட நினைத்தவள், இந்த அனாதை இல்லம் நடத்தும் அம்மாவின் கருணையான மொழிகளால் உயிரைக் கொல்லக் கூடாது, குழந்தை இல்லாத பெற்றோருக்கு கொடுப்பதாக முடிவெடுக்கப்பட்டு கொழும்பில் உள்ள ஒரு பணக்கார தம்பதிகள் அவள் குழந்தையை இன்று அழைத்துச் செல்ல வருகிறார்கள். பணமுள்ள இடத்தில் குழந்தை இல்லை குழந்தை உள்ள ஏழைக்கு வாழ்க்கை இல்லை. வாழ்க்கையின் கோடுகள் மாறியே வரையறுக்கப்படுகின்றன.

அக்கா ஏன் அழுறீர்கள் மறுபடியும் ஜெயா தான் என் கையைப்பிடித்து ஆட்டிக்கொண்டு இருந்தாள். பக்கத்தில் மேற்றன் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள், அவவுக்கு விளங்கியிருக்க வேணும் ஒரு தாயின் வேதனை. அவவுக்கு வளர்ந்த இரண்டு ஆண்பிள்ளைகள் கணவன் குடிகாரன் என்றபடியால் வேதனைதாளாது இங்கு மேற்றனாக இருக்கிறா. இன்று தான் குழந்தையை குளிப்பாட்டுவதாக சொல்லிச் செல்லிறா. சாந்தி எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு விறாந்தையில் வந்து பாக்கிறாள். மழை இன்னும் சாதுவாக பெய்து கொண்டிருக்கிறது. பூக்கள் உதிர்ந்து தண்ணீரோடு அடித்துச்சென்று ஒரு இடத்தில் தடைப்பட்டு குவியலாக இருக்கிறது. கோயில் மணி ஓசை அடிக்கிறது. அதன்பின் சாப்பாடு தையல் வகுப்பு தொடங்க மணி நேரம் போனதே தெரியவில்லை மதியம் ஒரு மணி போல் அவர்கள் வந்தார்கள். அந்தப் பெண்ணின் முகத்தில் சந்தோஷம் குடிகொண்டிருந்தது. குழந்தையை வாங்கி முத்தமிட்டாள். நன்றியோடு சாந்தியைப் பார்த்தாள். கிடைக்க முடியாத முத்து கிடைத்தது போன்ற ஆனந்தம். கடற்சிப்பிக்கு முத்து சொந்தமில்லை, அதே நிலையில் சாந்தி இருந்தாள். அவள் கண்ணீரைப் பார்த்துவிட்டு அப்பெண் உம்மைப்பற்றி அம்மா சொன்னார்கள். பெண்களுக்கு சமுதாயம் தரும் தண்டனை இது. நீர் ஒரு பெண் என்றபடியால், குற்றவாளியாகவும் அவன் ஒரு ஆண் என்ற படியால்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமுதாயம் அவளை ஏற்றுக் கொள்கிறது. நீரும் பழையவைகளை உமது நிலமை அறிந்த ஒரு கணவனைத்தேடும். நாட்டில் நல்லவர்களும் இருக்கிறார்கள். உமது குழந்தைக்கு ஒரு குறையும் இருக்காது. இனி அவள் எங்கள் குழந்தை. நாங்கள் புறப்படுகிறோம் என்று சொல்லியபடி காரில் ஏறிச் சென்றுவிட்டார்கள். அவர்கள் போனதும் அவள் தன் கைகளை பார்க்கிறாள். என் குழந்தை! என் குழந்தை எனக்கு வேணும் நான் யாருக்கும் கொடுக்கமாட்டேன்.அவள் அழத் தொடங்கிவிட்டாள். அந்த அம்மா மெல்ல இவளை அழைத்துச்சென்று மகளே நீர் விரும்பியபடிதான் நான் அவர்களுக்கு கொடுக்கச்சம்மதித்தேன். உமது பெற்றேரும் யாருக்காவது கொடுக்கத்தான் சொன்னார்கள். நீர் முன்பே சொல்லியிருந்தால் சம்மதித்திருக்கமாட்டேன் .இங்கேயே நீர் குழந்தையோடு இருந்திருக்கலாம். இங்கு இப்படி ஒரு சில பெண்களை, அவர்களின் வாழ்க்கை தற்கொலையில் முடியக்கூடாது, அவர்கள் வாழவேண்டும் என்பதற்காக ஏற்றுக்கொண்டேன்.அவர்கள் இப்போ திருமணம் செய்து சந்தோஷமாக இருக்கிறார்கள். உமது குழந்தையோடு உம்மை ஒரு ஆண் ஏற்றுக்கொண்டாலும் குழந்தையைப்பார்க்கும் போதெல்லாம் பழைய ஞாபகமும். குழந்தை சிறுபிழை செய்தால் அடித்தாலும் திட்டுதலும் இதனால் இருவருக்கும் இடையே மனஸ்தாபங்கள் ஏற்படும். இதனால் உமது ஒரு நல்ல பெற்றோரிடம் வளர்வது நல்லது. அவளும் ஒரு பெண் குழந்தை என்ற படியால் இந்த சமுதாயம் அவளையும் தள்ளியே வைத்துப்பார்க்கும் வருகிறகிழமை உமது பெற்றேர் வருவார்கள் அழைத்துச்செல்ல, நீர் விரும்பினால் திரும்பவந்து தையல் முழுவதும் பழகி அதன் மூலம் உமது வாழ்க்கைக்கு நேர்வழியமைக்கலாம். கவலைப்படாமல் இரும், உமக்கு கடவுள் நல்ல வாழ்க்கை தருவார். அந்த அம்மாவின் வார்த்தைகள் மனதுக்கு அமைதியாக இருந்தாலும் அவள் அழுதபடியே எழுந்து சென்றாள், ஜெயா இவளிடம் வந்து அக்கா ஏனக்கா நீங்கள் அவையிடம் கொடுத்தீர்கள். பேபி இனி இங்க வரமாட்டாவோ? என்ற அம்மா செத்துப்போயிட்டா, அப்பா வேலைக்குப் போறபடியால் இங்க கொண்டு வந்து சேர்த்திருக்ககு. பேபிக்கு அப்பா இல்லை நீங்க இருக்கிறிங்கள்தானே நீங்க வைச்சிருக்கலாம்தானே? அவளின் பேச்சுக்கள் நியாயமாகப்பட்டது. ஜெயா உமது அறிவு எனக்கில்லையே என்று மனதில் நினைத்தபடி அந்த மாமிக்கும் ,மாமாவுக்கும் பிள்ளைகள் இல்லை, பேபியை வளர்க்க என்னட்ட காசு இல்லை, அதாலதான் அவை வளர்த்துப் படிப்பிக்கப் போகினம். அவளுக்கு சாந்தியின் பதிலில் திருப்தி இருக்கவில்லை எழுந்து சென்றுவிட்டாள்.

சாந்தியின் பெற்றேர் தங்கைகளை காரணம் காட்டி அவளை யாருக்காவது, அவளை ஏமாற்றியது போல் இன்னொரு ஆணை இவளின் பெற்றேர் ஏமாற்றப் போகிறார்களா? அல்லது திரும்ப வந்து தானே தன் வாழ்க்கையை அமைக்கப்போகிறாளா? அவளுக்காக மழை ஓய்ந்து முகில்களினூடே சூரியன் பிரகாசித்தது.

(உண்மைகள்.)

# நன்றி

அட்டைப்படம் : கே.கிருஷ்ணராஜா (லண்டன்)

**மற்றைய படங்கள் :**

**காமினி தணவத்த**
**டாபினர் து**
**நிர்மாணி**
**சரிநிகர்**
**கொழுந்து**
**Struggling for space**
**WILF**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தியப் பெண்கள் இயக்கங்கள்

மைத்ரேயி கிருஷ்ணராஜா.

வெகுஜனமட்டத்திலான பெண்கள் இயக்கத்தின் மத்தியிலும் சரி, சமூக இயக்கங்களின் மத்தியிலும்சரி இந்த இயக்கங்களின் அக்கறையிலிருந்து பெண்கள் எப்போதுமே தவிர்க்கப்பட்டே வந்துள்ளனர். பெண்கள் இயக்கங்கள் என்பன சமூகமாற்றத்திற்கான பொதுவான நீரோட்டத்திற்கு ரொம்பவும் புறந்தள்ளி நிற்கும் ஒன்றாகவே கருதப்பட்டு வந்துள்ளது. இத்தகைய நிலைமையானது இயக்கங்களின் செயற்பாட்டினை பலவீனப்படுத்துவதாகவே அமைந்தது. ஏனெனில் பெண்களின் பங்களிப்பினைத் தவிர்த்து விட்டமையானது, சிக்கல்பிக்கலான சமூக அரசியல் போராட்டங்களின் மீது முழுமையற்ற ஒரு அரைகுறைப் பார்வையையே தந்தது. பெண்களின் பங்களிப்பினைப் பற்றிய ஆய்வுகளும் சேர்த்துக்கொள்ளப்படும் பட்சத்திலேயே சமூக ஆய்வு பற்றிய அணுகுமுறைகள் நவீனத்துவமுற முடியும்.

பொதுவில் சமூக இயக்கத்தில் பெண்களின் பங்களிப்பு பற்றிய ஆய்வைப் பொறுத்தவரையிலும் சரி, அல்லது குறிப்பாக பெண்களின் கூட்டு நடவடிக்கை என்பதனைப் பொறுத்தவரையிலும் சரி பெரும்பாலான அடிப்படைப் பிரச்சனைகளின் சாராம்சமாயிருப்பது அரசியல் பற்றிய பிரச்சனையேயாகும். அதிகாரத்தினதும் ஆளுமையினதும் சாறாகத் திகழும் அரசியலானது ஆண்களின் தனியுரிமையாகவே இருந்து வந்துள்ளது. அரசியல் சார்பு கொண்ட பெண்கள் வழிதவறிப் போனவர்களாக அல்லது பொது நடத்தைக்குப் புறம்பானவர்களாக அல்லது பெண்கள் தம்மை ஒருவித பிரத்தியோகமான முறையில் ஒழுங்கமைத்துக் கொள்ளும் விஷயமாக - அரசியல் என்று அங்கிகரிக்கப்படாமலேயே நோக்கப்பட்டு வந்துள்ளது. வர்க்கத்துக்குள் மட்டுமே வரையறுக்க முடியாத செல்வாக்குகள், தனித்துவ இனங்காணல்கள், இயக்கங்கள் என்பன குறித்த நவமான பார்வை நமக்கு இன்று மிகுந்த அவசியமாகிறது.

பெண்கள் இயக்கங்கள் இன்று பரவலாகி வருகின்றன; மூன்றாம் உலகில் அவை பெரும் இயங்கு விசையோடு செயற்பட்டு வருகின்றன. அரசியல் பாத்திரமேற்று வரும் பெண்களின் எழுச்சியானது பெண்களை non-political ஆக- அரசியல் சாராதவர்கள் என்று நிலவிய கருத்தோட்டத்தை நிராகரித்துள்ளது. உணவு, வீடு . உடல்நலம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற பெண்களின் கோரிக்கையானது இன்று மூன்றாம் உலகில் பெண்களின் கூட்டுநடவடிக்கையின் நிரந்தர கோஷமாகியுள்ளது. இவர்கள் தனித்து பெண்களின் தேவைகளை மட்டுமே கோருகிறார்கள் என்றில்லை. இந்தக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிக்கைகளை வெளிப்படுத்துவதன் மூலம் பால் ரீதியான தொழிற்பாடுபாட்டின் விளைவாய் தமக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்பிற்கு பதிலளிக்க முனைகிறார்கள். இது பல்வேறு பிரச்சனைகளை எழுப்புகிறது.

1. சரித்திர மாற்றத்தின் பரந்த பின்னணியில், விசேஷமாக முதலாளித்துவ வளர்ச்சிச் செய்முறைகளுக்குள் பெண்களின் கூட்டு நடவடிக்கைகளான இடத்தை நிர்ணயித்தாக வேண்டிய தேவை.

2. குடும்பம் போன்ற தங்களுக்கு மிகவும் நெருக்கமான பிராந்தியத்துக்குள் ஏற்படும் மாற்றங்கள்.

3. பெண்களது இயக்கங்களை முக்கியமான தனித்த ஒரேயொரு குணாம்சம் கொண்டதாகக் குறுகிய எல்லைக்குள் கொண்டு போவதில் ஏற்படும் கஷ்டங்கள்.

இவற்றில் எத்தனை வேறுபாடுகள் இருந்தபோதும், பால் ரீதியான அந்தஸ்து பேதம் அல்லது பெண்களுக்கு குறைந்த தராதரமே வழங்கப்படுதல் என்பது போதுமான அளவிற்கு எங்கும் வியாபகமாகியுள்ளது. பெண்கள் இயக்கம் தொடர்பான பல பொதுவான தவறான கருத்தோட்டங்களுக்கு இந்தியப் பெண்களின் இயக்கம் சவால் விட்டுள்ளது. பால் ரீதியான பிரச்சனைகளையும் வரக்கப் பிரச்சனைகளையும் இணைத்து நோக்கியதன் மூலமும் பரஸ்பரம் நன்மைகளை விளைவிக்கும் வகையில் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த பெண்களும் தமது பிரச்சனைகளை வெளிப்படுத்திய வகையிலும் இந்த சவால்கள் அமைந்தன.

காலப்போக்கில் பெண்கள் பங்கு கொள்ளும் முறையிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. முதலாவது கட்டத்தில், பெண்களின் பங்களிப்பானது வர்க்கம் பற்றிய பாரம்பரியக் கண்ணோட்டம் சார்ந்ததாக அமைந்தது. அதாவது, பெண்கள் பொதுவான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களில் பங்கு கொள்ள ஆரம்பித்தல்.

தொழிற்சாலை வேலை நிறுத்தங்கள்,

காணிக்கான விவசாயிகள் இயக்கம்,

கூடிய சம்பளம் கோரி விவசாயக் கூலிகளின் போராட்டம்,

விலைவாசி உயர்விற்கான போராட்டங்கள் போன்றன. இத்தகைய போராட்டங்களில் பெண்களின் ஈடுபாடானது புதிய பெண்கள் அமைப்பிற்கான தளத்தை ஸ்தாபிதம் செய்தது.

1975ஐ அடுத்து, இடதுசாரிக்கூட்டு அல்லது இடதுமல்லாத வலதுமல்லாத நடுநிலை அரசாங்கங்கள் என்று இருந்தவற்றிற்கு மாறாக இன்னுமொரு மாற்றத்திற்கான தேடல் எழுந்தது. 1979-80ல் இந்தியாவில் பூர்ஷ்வா அரசு நன்கு ஸ்திரம் பெற்றுவிட்டது. பழங்குடிகளின் கிளர்ச்சி, 'தலித்' மக்களின் எதிர்ப்புகள், வெகுஜன விஞ்ஞான இயக்கங்கள் போன்ற சகல விதமான வெகுஜன இயக்கங்களின் துரிதமான வளர்ச்சியின் மத்தியிலேயே இவை நடந்தேறின. இந்தப் புதிய சமூக இயக்கங்கள் தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தவை அல்ல என்றும் சொல்லி விடுவதற்குமில்லை. கட்சி எல்லைகளுக்கு அப்பால் தொழிலாள வர்க்கத்திற்குள் நடைபெற்றுக் கொண்டிருந்த வளர்ச்சியின் பிரதிபலிப்புகளே இவை.

இந்தியாவில் பெண்கள் இயக்கத்தின் சமூகப் பொருளாதாரப் பின்னணியைப் பற்றிய சுருக்கமான குறிப்பு இங்கு பயனுடையதாகவிருக்கும். இந்தியாவில் பெரும்பான்மையான பெண்கள் தங்களுடைய அன்றாட ஜீவனத்திற்காகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் கிராமப்புற மக்களாவர். தங்களுடைய தொழில் நிலைமைகள் மீதே அல்லது அவர்களின் உழைப்பின் உற்பத்திப் பொருள் மீதோ அவர்களின் விருப்பு, வெறுப்பிற்கு எந்தவித இடமுமில்லை. தங்கள் வீட்டையும் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பை இவர்கள் மிகவும் அரிதான மூலவளங்களுடன் கடுமையான கஷ்டத்துடன்தான் கொண்டுநடத்த வேண்டியுள்ளது. அடிப்படையான அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகக்கூட அவர்கள் மணிக்கணக்கில் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. தண்ணீர் அள்ள, விறகு போன்ற எரிபொருள் சேகரிக்க, காய்கறிகள் பயிரிட, வீட்டு மிருகங்களைப் பார்த்துக் கொள்ள, கைக்குற்றல் அரிசி போன்ற உணவுப்பண்டங்களைத் தயார் செய்தல், துப்பரவு செய்தல், உலர்த்துதல், சேகரித்து இருப்பில் வைத்தல், புகைவிடும் "ஸ்ரவ்"களில் சமைத்தல், தரையை மெழுகிட்டு பேணுதல், கூரையைத் திருத்துதல் போன்ற விஷயங்கள் அனைத்தையும் பெண்களே செய்தனர். மறு வார்த்தைகளில் சொல்வதானால், வீட்டுத் தேவைகளிற்கான மனிதசக்தியின் 70 வீதத்தினரான பெண்களே நல்குகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தும் அவர்களுக்கு நிராகரிக்கப்பட்ட விஷயங்கள் பல: போஷாக்கு, சுகாதாரம், கல்வி என்பவற்றில் பாரபட்சம், காணியுரிமை இன்மை போன்றன.

இந்தப் பின்னணியில்தான் புதிய உயர்குலத்தினரின் ( new elites) தோற்றம் இடம்பெற்றது. ஆண் மேலாதிக்கத்தை தக்க வைத்துக் கொள்வதில் ஆர்வம் மிகுந்த வலிமை வாய்ந்த நில உடமையாளர்கள் (உயர்மட்ட மத்தியதர விவசாயிகள்) விவசாயிகள் குடும்பத்தின் தந்தைவழி அமைப்போடு சீதனமானது மிகுந்த நெருக்கத்தை கொண்டிருந்தது. மேல்மட்டத்தை நோக்கி உயர்வதற்காகப் பணத்தை நாடி நின்ற அல்லது மிகுந்த இழப்புகளை எதிர்நோக்கியும் செல்வந்தராவதில் பேரார்வம் கொண்டிருந்த புதுப்பணக்கார குழுவினர், பார்வைக்குத் தெரியத்தக்க பண்ணை வேலையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளும் தத்துவார்த்தத்தைத் தவிர்த்து விட்டு, எப்படியோ பெண்களின் உழைப்பு தேவையாய் இருந்தது; நிலச்சுவாந்தர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் வீடுகளுக்குள்ளேயே அறுவடைக்குப் பிந்திய வேலைகளையும், கூலிஉழைப்பாளர்களுக்கு சாப்பாடு போடுவது, கூலி வேலையை மேற்பார்வை செய்வது போன்ற வேலைகளையும் செய்தனர். அவர்கள் முன்பு செய்து வந்த வேலைகளை இப்போது கூலி உழைப்பாளர் செய்து வருகின்றனர். குடும்பத்தின் செழிப்பை வீட்டிற்கு TV வாங்குவதில் வெளிப்படுத்தினாலும் கூட பெண்கள் வீட்டுக்குள் புராதனகால வேலை நிலைமைகளிலேயே தொடர்ந்தும் உழலுகின்றனர். ஆண்கள் விஸ்தாரமான தங்கள் இரத்த உறவுகளைச் சேர்ந்த பிற ஆண் சகபாடிகளுடன் நன்கு இணைந்துகொண்டு விடும் அதே நேரத்தில் பெண்களுக்கோ அதிகாரத்தின் மீது ஒரு பாத்தியதையும் இல்லை. பெண்களின் மீதான சாதிக் கண்காணிப்பு, சீதன வழக்கம் பரவலாகுதல், கூடிய பட்சப் பெண்கள் மரண வீதம், குடித்தொகையில் பெண்களின் பற்றாக்குறை என்பன போன்ற இதன் விளைவுகள் மிகவும் தெளிவானது. கருவில் இருக்கும் போதே அதுவொரு பெண்குழந்தையாகவிருந்தால் அழிக்கும் சம்பவங்கள் தற்போது பெருகிவருகின்றன. இதற்கு சீதனமும் முக்கிய காரணமாகும். நகரச் சூழ்நிலைகளும்கூட புதிய விழுமியங்களை உருவாக்குவதில்லை. ஏனெனில், கிராமப் பகுதிகளுடனான குடும்ப, சாதி உறவுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதில் ஒரு போஷிப்புத்தன்மை உண்டு. பல குடும்பங்கள் தாய்மாருக்கு உரிய கௌரவத்தை வழங்குகின்றன. இவை தங்கள் மருமகள்மாரின் மீது சட்டபூர்வமான அதிகாரத்தைப் பலப்படுத்த துணைபுரிகின்றன.

காணி நிலமற்ற ஏழைகளைப் பொறுத்தவரையில்- பெண்கள் மிகவும் குறைந்த சம்பளத்திற்கே தொழில் செய்து வருகின்றனர். இங்கும் இயந்திரமயமாக்கத்தால் உள்ள வேலை வாய்ப்புகளுமே இல்லாமல் போய் விடுகின்றன. கைவினைஞர் குடும்பங்களில் பெண்கள் அடிப்படையான உற்பத்திக் கருவிகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். பெண்கள் இந்த உற்பத்திக்கருவிகளுடன் புழங்கினால் "தீட்டுப்பட்டு விடும்" என்ற பல்வேறு நம்பிக்கைகளின் கீழ் இது நியாயப்படுத்தப்பட்டு விடுகிறது. காடுகள் அழிந்து போனாலும், காணிகளை அரசு கையேற்பதாலும் பழங்குடிப்பெண்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். நகர்ப்புறத்திலோ ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற்துறைகளில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் மிகவும் குறைந்து வருகின்றன. இயந்திரங்கள் இவர்களுக்கு பிரதியீடாக வந்துவிட்டது. ஏற்றுமதி சார்ந்த தொழில்களில் பெண்களுக்கு வேலை கிடைத்துவிடுகிறது ஏனெனில் பெண்களின் உழைப்பு மலிவானதாயும், எளிதாகக் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் உள்ளது. படித்த மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் சட்டரீதியாகச் சில நன்மைகளை அடையக்கூடியதாகவிருந்தாலும் பல்வேறு வழிகளிலும் இவர்கள் பாரபட்சமாகவே நடாத்தப்படுகிறார்கள். குடும்பத்தின் கண்காணிப்பு மற்றும் இரட்டைச்சுமை ஆகியன மூலமாக இப்பாரபட்சம் தொடர்கிறது.

1980களில் மத்தியதர வர்க்கப் பெண்களையும் தொழிலாளர் வர்க்கப் பெண்களையும் ஒருங்கிணைந்து பல்முனைப்பட்ட போராட்டங்களிலும் சகல பெண்களும் எதிர்நோக்கும் பிரச்சனைகளை வெளிப்படுத்தியது. மதுரா என்ற ஒரு தாழ்த்தப்பட்ட சாதிப்பெண் மீது இரண்டு பொலிஸ்காரர்கள் பாலியல் வன்முறை செய்ததையடுத்து நாடு தழுவி எழுந்த கிளர்ச்சியானது ஒரு புதிய கட்டத்தை தொடக்கியது. இந்த இரண்டு பொலிஸ்காரர்களும் உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதும், இந்தத் தீர்ப்பு மாற்றப்பட வேண்டுமென்று பகிரங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நடைமுறையிலுள்ள பாலியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்முறைச்சட்டங்கள் மீது மிக விரிந்த வாதங்களைத் தோற்றுவித்தது; பாலியல் வன்முறைக்கு எதிரான போராட்டத்தில் பெண்கள் அமைப்புகள் குறித்து ஸ்தாபனமயமான இடதுசாரி கட்சிகளின் பல்வேறு பெண்களின் அணிகள் பெண்களின் பிரச்சனைகளை முன் எடுத்தன.

60களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பெண்களின் தேசிய கூட்டமைப்பு இயங்கிக் கொண்டிருந்தது. இதனையடுத்து ஜனதா கட்சியைச் சேர்ந்த மஹிலா தக்ஷத்த சமித்தி, இந்திய கம்யூனிஸ்ட்கட்சி(மார்க்ஸிஸ்ட்) யைச் சேர்ந்த ஜனவாடி மஹிலா சபா, மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளின் பெண்கள் கூட்டு நடவடிக்கைக்குழு போன்ற மாதர் அமைப்புகளும் செயற்பட ஆரம்பித்தன. மகாராஷ்டிரத்தில் லால் நிஷான் கட்சியைச் சேர்ந்த "ஸ்திரீ முத்தி சங்காதனா" பெண்களை அடிக்கும் பிரச்சனையையும், குடித்துக் கொண்டு திரியும் ஆண்கள் பிரச்சனையையும் முன்னெடுத்தது. ஹைதராபாத்தில் முற்போக்குப் பெண்கள் அமைப்பு பெண்களை கேலி செய்யும் பிரச்சனையை முன்னெடுத்தது. அதேவேளையில், சேவா, அன்னபூரணா, உழைக்கும் பெண்கள் அரங்கம் போன்ற அமைப்புகள் கடன் பெறும் வசதி, வேலை நிலைமைகளில் முன்னேற்றம், பொலிஸ் அட்டூழியங்களை எதிர்த்தல் ஆகிய பிரச்சனைகளில் பெண் தொழிலாளர்கள் அமைப்பாகினர். இவை அனைத்துமே மத்தியதர வர்க்க தலைமையைக் கொண்டிருந்தும் ஏழைப் பெண்களுக்காக, அவர்களை வெறுமனே சமூகநல உதவிகளைப் பெற்றுக்கொண்டிருப்பவர்களாக அல்லாமல் அவர்களை சக்தி மிகுந்தவர்களாக மாற்றும் பணியில் செயற்பட்டன. இந்த அமைப்புகள் அரசாங்க கொள்கைகள் மீது செல்வாக்குச் செலுத்தவும் ஆரம்பித்தன. இந்த அமைப்புகளின் அங்கத்துவ எண்ணிக்கையும் பல்லாயிரமாக அதிகரிக்க ஆரம்பித்தது. தமிழ் நாட்டின் பெண்ணுரிமை இயக்கம் உழைக்கும்பெண்கள் மத்தியிலிருந்து மட்டும் மூவாயிரத்திற்கும் அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டு விளங்குகிறது. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் இத்தகைய வெகுஜன அமைப்புகள் உள்ளன. பெண்கள் பிரச்சனை குறித்தும் சிவில் உரிமைகளுக்காகவும் தொழிலாள-விவசாய போராட்டங்களில் இணைந்தும் சிறிய நகர்ப்புற மத்தியதர வர்க்கப் பெண்கள் குழுக்கள் போராட ஆரம்பித்தன.

ஏழைப் பெண்களின் காணியுரிமைக்கான சட்ட ரீதியான போராட்டங்களிலும் பல அமைப்புகள் இறங்கின. வெவ்வேறு இடங்களில் புதுபுதுக் கிளர்ச்சி வடிவங்களையும் புதிய போராட்ட வடிவங்களையும் பெண்கள் முன்னெடுத்தனர். பல பெண்கள் மாநாடுகளில் அடிமட்டத்தை சேர்ந்த பெண்கள் பங்குகொண்டனர். 1990களில் களிக்காட்டில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் இந்தியா எங்கணுமிருந்து ஐயாயிரக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டனர். 1988ல் ஷேத்காரி சங்காதனா என்ற விவசாயிகள் அமைப்பு நடத்திய விவசாயப் பெண்களின் மகாநாட்டில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். பம்பாயில் பெண்கள் ஒடுக்குமுறைக்கெதிரான கூட்டுநடவடிக்கையான அரங்கில் பெண்களின் கூட்டு அமைப்புகளும் உருவாகின. மகாராஷ்டிரத்தில் இயங்கும் ஸ்திரீ முக்தி அன்டோலன் சம்பாக் சமித்தியில் மட்டும் முப்பது பெண்கள் அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன. பொதுப் பிரச்சனைகளில் குரல் கொடுப்பதற்காக இந்தக் கூட்டமைப்புகள் சேர்ந்து செயற்படுகின்றன.

இக்கட்டத்தில் சீதனம் பாலியல் வன்முறை(நிலச்சுவந்தரால் அல்லது பொலிஸ், இராணுவத்தால்) தொழில் செய்யும் இடங்களில் பெண்கள் பால் ரீதியாக சுரண்டப்படுதல், விபச்சாரம், கேலி செய்தல், சமசம்பளம், பெண்களின் தனிப்பட்ட உரிமைகள், வேலைபார்க்கும் பெண்களின் விடுதிகள், வீட்டில் வன்முறைக்குள்ளாகும் பெண்கள் குறுகிய காலத்திற்கு தங்கியிருப்பதற்கான இல்லங்கள், ஆலோசனை மையங்கள், உடனடித் தொலைத்தொடர்பு வசதிகள் போன்ற பல்வேறு பிரச்சனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. விவசாயப் பெண்களும், பழங்குடிப் பெண்களும் அமைப்புகளாகி செயற்பட்டனர். இதனைவிட சேரிகளை அப்புறப்படுத்தும் பிரச்சனை, கழிவிடவசதிகள், தண்ணீர் வசதி, வீட்டுவசதி போன்ற பிற தேவைகள் பற்றியும் அக்கறை காட்ட ஆரம்பித்தனர். மத்திய பிரதேசத்திலும் வடகிழக்கிலும் மதுவிலக்கு இயக்கங்கள் செயற்பட ஆரம்பித்தன; தெருவீதிகளில் ரோந்து பார்க்கவும் தவறு இழைக்கும் ஆண்களைத் தண்டிக்கவும் பெண்களின் கண்காணிப்புக்குழுக்கள் இயங்கின. கைவிடப்பட்ட அநாதவான பெண்களும் அமைப்பாகினர். உள்ளூர் நிர்வாகச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சபைகளுக்கும் மாநில பேரவைகளுக்கும் பெண்களை தெரிவு செய்வதற்கு உதவும் முகமாக அரசியற் கல்விக்குழுக்கள் பணிபுரிந்தன. உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கருத்தடைமுறைகளுக்கு எதிராகவும் தேசிய மட்டத்தில் பிரச்சாரம் முனைப்புப் பெற்றது. நுகர்வோர் நடவடிக்கைக்குழுக்கள் தன்னார்வ நடவடிக்கைக்குழுக்கள் ஆகியவற்றின் கருத்தரங்குகள் இடம்பெற்றன. இந்த அமைப்புகளில் பெண்களே அங்கத்தவர்களாய் இருந்ததுடன் பெண்களின் பிரச்சனைகளே இங்கு விவாதிக்கப்பட்டன. அண்மைக்காலத்தில் பல குழுக்கள் இனவாதத்திற்கு எதிராகவும் செயற்பட ஆரம்பித்துள்ளன. அரசாங்கம் கண்ட்ராக்டர்களுக்கூடாக சாராயம் விற்பனை செய்வதை எதிர்த்து ஆந்திராவைச் சேர்ந்த பெண்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பது அண்மைக்கால உதாரணமாகும். கிராமிய ஏழைப் பெண்களே இக்கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் கிளர்ச்சி ஏறத்தாழ 8000 கிராமங்களில் பரவியது. பெண்கள் சாராயக்கடைகளை உடைத்தனர்; சாராயக்கண்ட்ரக்டர்களை பிடித்து வைத்துக்கொண்டனர். தங்களது வீட்டு ஆண்கள் இந்த சாராயக்கடைகளுக்குப் போவதைத் தடுத்து நிறுத்தினர். இந்தக் கிளர்ச்சி வெற்றிகரமாக நடந்ததையடுத்து, அரசாங்கமானது சாராய வியாபாரத்தை தடைசெய்யவேண்டியதாயிற்று. காலாள் அதிகாரிகளையும் காலாள் பொலிஸாரையும் பெண்கள் எதிர்கொண்டனர். சாராய விற்பனை என்பது பல்வேறு பிரச்சனைகளை எடுத்துக்காட்டியது.

மோசமாகிக் கொண்டிருக்கும் பொருளாதார நிலமை, உடுபுடவைகள், பாத்திரங்களைக்கூட அடகு வைக்கவேண்டிய நிலைமை, கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசிகளின் உயர்வு, அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலைபோன்ற பிரச்சனைகள் துலாம்பரமாகின. பெண்கள் தமது ஆண்களை கிரிமினல்களாக நோக்காது, இவற்றால் பாதிக்கப்பட்ட நபர்களாக கருதினர். சாராயத் தவறணை போன்ற பொது இடமொன்றில் தமது ஆண்களை தங்களால் சாமார்த்தியமாக கையாளமுடியும் என்பதில் பெண்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். பெண்களின் கூட்டங்களில் ஆண்கள் கூட கலந்துகொண்டனர்.

பெண்கள் பேசினார்கள்:

"பெண்களாகிய எங்களுக்கு என்ன தெரியும்? வேலைக்குப் போவதும், பிறகு வேலையிலிருந்து திரும்புவதும் தான். முழுநாளும் முதுகுடைந்து போய்விடுகிறோம். வீடு திரும்பியதும் சமையல் செய்து பிள்ளைகளுக்கும் குடும்பத்திற்கும் பரிமாறவேண்டும். ஆண்களுக்குத்தான் எல்லாம் தெரியும். அவர்கள் உலகத்தின் எந்த மூலைக்கும் போகலாம்; குடிக்கலாம். சாராய விற்பனையிலிருந்து வரும் காசில்லாமல் அரசாங்கம் நின்று பிடிக்க முடியாதா" அப்படியானால் அரசாங்கம் எங்களது ஆம்பிளைகளையும் எடுத்துக்கொண்டு விடட்டும்."

இந்த இயக்கம் மிகவுக் அசாதாரணமானது. இவர்கள் வறிய கிராமியப் பெண்களாவர். இவர்களுக்கு மத்திய தலைமை எதுவும் கிடையாது. கைது செய்வதென்றாலும் முக்கியமான தலைவர் என்று யாருமில்லை.

இந்த வளர்ச்சிகள் இந்திய பெண்ணிலைவாதத்தின் காத்திரமான அபிவிருத்திகளை, அவை எவ்வாறு ஒருங்கிணைந்து செயற்படுகின்றன என்பதனை தெளிவாகக் காட்டுகின்றன. ☆

(07.08.1993இல் நெதர்லாந்தில் நடைபெற்ற 16வது இலக்கியச்சந்திப்பில் வாசிக்கப்பட்டது)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவள்.

மரணித்து
சில பொழுதுகளே
பிணமென்ற பேரோடு . . . .
உறங்கிப்போன உறவுகள்
உறங்காத என்னவள்
"எல்லா போகங்களையும்
ஜீரணித்தவனாக வாழ்ந்த"
வாழாத அவள்
எனக்காக அழுகிறாள்.

அவள் அழுவதற்கோ
சிரிப்பதற்கோ
"சிரிப்பதற்கோ அவகாசமிருந்ததில்லை"
காரணமான பொழுதுகள் பல
இவ்வேளை புதிது
எனக்காக அழுகிறாள்

இருபத்திநாங்கு கை, காலுடன்
வலம் வந்தவளின்
"ஒரு கையாகக் கூட
இருந்த வேளையில்லை"
எல்லாம் ஒடிந்து போனதாய்
ஒப்பாரி இடும் என்னவளே
எனக்காக அழுகிறாள்.

நான்
தாலியை விற்றும் போதையில்
போலிக் கணவனாக அவளுடன்,
தாலியே போய் விட்டதாக
வீழ்ந்தும் கணவனாக
உழைப்பின் களைப்பால்
குங்குமம் கரைந்த நாட்கள்
குங்குமம் குலைந்ததாக
குமுறும் என்மனைவி
இது புதிய வேளை
என் ஆத்மாவை சுடுகிறது.

எங்கள் ஜாதகப் பொருத்தம்
பொய்த்து விட்டதாக
புலம்பும் என்னவள்
"பொருத்தமற்றே அவளோடு
வாழ்ந்து முடித்த பொழுதுகள்
ஆகாத போதும் ஆகாரம் தேடும்
ஆதித்தனான நாட்கள்"
ஆறுவேளைகள் ஆகாரமற்று
அழுது புலம்பும் என்னவளே
ஆறாது ! ஆறாது ! !
ஆன் மாவை சுடுகிறது.

✷ கோசல்யா





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விட்டு விடுதலையாகி..

—நிருபா



"என் வீட்டுத் தோட்டத்தில் பூவெல்லாம் கேட்டுப் பார்
என் வீட்டு யன்னல் கம்பி எல்லாமே கேட்டுப் பார்
என் வீட்டு தென்னங் கீற்றை இப்போதே கேட்டுப்பார்
என் நெஞ்சை...."

"டு சுவாற்ச, டிறெக்கிக அவுஸ்லேண்டறின், கல்ஸ் மைவுல்"
(கறுத்த, ஊத்தை வெளிநாட்டுக்காறியே ! வாயை மூடு)

"டு வைச சுவைன், வறும் சொல் க் மைன் மைவுல் கல்ரென்?"
(வெள்ளைப் பன்றியே ! நான் ஏன் வாயை மூட வேண்டும்?")

இவன் அறுவான். இண்டைக்கு என்ர மூட்டையே மாத்திட்டான். நான் சந்தோசமா சைக்கிள் ஓடிக் கொண்டு பாட்டும் படிச்சது அவனுக்குப் பொறாமை போல. நாசமாப் போன கிழடு !

கிழட்டுப் பிள்ளையின்ர நல்ல காலமும் என்ர நல்ல காலமும். தப்பினம். கொஞ்சம் கூட மிதிச்சிருந்தனெண்டால் அவனுக்கு மேலால தான் சைக்கிள் ஓடியிருப்பன்

பிறகு சொல்ல வேணுமே? வெளிநாட்டுக்காரரைப் பற்றி பிச்சுக் குதறுறதுக்கெண்டே கொஞ்சம் பத்திரிகைகள் இருக்குது.

"வெளி நாட்டவரிற்கு சைக்கிள் ஓடத் தெரியாது. நாங்கள் உழைத்து வரி கட்ட, அந்தக் காசில இருந்து கொண்டு சாப்பிடுவது போதாதெண்டு இப்ப சைக்கிளும் வேண்டி ஓடுகிறார்கள். இவர்கள் சைக்கிள் ஓடுவதால்தான் எங்கள் நாட்டில் விபத்துக்கள் கூடிக்கொண்டே போகின்றன. இப்படியே போனால் எதிர் காலத்தில் எங்கள் நாட்டில் சைக்கிள் பற்றாக்குறை வந்து விடும் . . . . . . . . . " எண்டு பக்கம் பக்கமாக எழுதிப் போடுவாங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊரிலெயெண்டால் எல்லாமே வித்தியாசம்.

வீட்ட நிண்டு மிதிக்கத் தொடங்கினா அந்த வைரவர் இருக்கிற புளிய மரம், பாழடைஞ்ச வீடு எல்லாந் தாண்டி வினோதினி வீட்டுக்கு முன்னால தான் நிப்பாட்டுறது. பெல்லடிக்கிற அடியில அவள் வந்து பின்னுக்கு ஏறுவாள்.

கந்த சுவாமி கோயிலடி சைக்கிள் கடையடியில கொஞ்சப் பெடியள் நிற்பினம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரிப் பாப்பினம். நாங்கள் பெரிய ராசாத்திகள் மாதிரி முறைச்சுப் பாத்துக் கொண்டு டியூற்றரிப் பக்கமா போவம்.

இது ஒரு சனியன் பிடிச்ச நாடு. சிரிக்கேலாது. கதைக்கேலாது. பாட்டுப் படிக்கேலாது . . . . சுதந்திரமா ஒரு சவமும் செய்யேலாது. இதுக்குள்ள குளிர் வேற.

மங்கையக்கா கிட்டத்தான் இருக்கிறா. கடையில சாமான்கள் வாங்கிக் கொண்டு அப்பிடியே அவாட்டையும் ஒருக்காப் போட்டு வருவம்.

மங்கையக்கா ஆரெண்டு உங்களுக்குத் தெரியாதெல்லே ! கிட்டத்தட்ட என்ர அம்மாவின்ர வயசுதான் இருக்கும். என்ர ஊகம். மூன்று பிள்ளைகள். ஒரு பொம்பிளைக்கு ரண்டு ஆண். சாந்தி எனக்கு நல்ல பிரெண்டா இருந்தவள். அவள் அப்பிடியே தாயை உரிச்சு வைச்சமாதிரி.

மங்கையக்காவும் என்னோட நல்ல ஒட்டு. அக்கா, அம்மா, பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் எண்டு நிறைய பொம்பிளையளோட பழகியிருக்கிறன். ஆனா இவ மங்கையக்கா என்னைக் கூட விளங்கிக் கொள்ளுற மாதிரி. எனக்கொரு பிரச்சனையெண்டால் அவாட்டத்தான் போவன்.

இடிவாங்கி இடிவாங்கி அவ்வளவு லேசில உடைஞ்சு போகேலாத எங்கட ஊர் உரல் மாதிரி மங்கையக்கா ! அவவுக்கெண்டொரு சரித்திரமே இருக்கு. எல்லாம் சாந்தி தான் சொன்னாள். சிநேகிதி மாதிரிப் பழகக் கூடிய அம்மா இருக்கெண்டு சாந்தியில எனக்குப் பொறாமை.

பதின் மூன்று வரிசத்துக்கு முந்தி வெளிநாட்டுக்கு வந்தவவாம். பிள்ளையள் அவவின்ர தாயோட ஊரில வளர்ந்தவையாம். மங்கையக்கா வேலை செய்து காசு சம்பாதிச்சு ஒவ்வொரு பிள்ளையளாக் கூப்பிட்டவவாம். புருசன் இந்தியாவில. விவாகரத்து செய்திட்டாவாம். குடியும் சூதும். மங்கையக்காவிற்கு ஒவ்வொரு நாளும் அடிதானாம்.

நான் மங்கையக்கா வீட்டு பெல்லை அமத்திறத்துக்குள்ள அவவே கீழே வந்திட்டா.

"சொல்லாமல் கொள்ளாமல் வந்திட்டீர். கொஞ்சம் பிந்தியிருந்தால் என்னைப் பிடிச்சிருக்கமாட்டீர்."

"கடைக்கு வந்தனான். அப்பிடியே உங்களையும் சந்திச்சு சொல்லிப்போட்டுப் போவம் எண்டு நினைச்சன். இண்டைக்குத் தோசைக்குப் போட்டிருக்கிறன். அலுவலொண்டும் இல்லத்தானே? வாங்கோவன்."

"வாருமன் மேல. ரீ குடிச்சிட்டுப் போகலாம்."

"திரும்ப நாலாம் மாடியில ஏறி இறங்கிறதுக்குள்ள நீங்கள் களைச்சுப் போவியள். கடைக்கே போறியள். வாங்கோ நானும் அதாலதானே வீட்டபோவேணும்."

நான் சயிக்கிள உருட்ட மங்கையக்காவும் அசையத் தொடங்கினா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஏலுமெண்டா கொஞ்சம் வேளைக்கு வாங்கோ.
சுமதி ஒரு படம் தந்தவள். பாத்திட்டு நாளைக்குக் குடுக்கவேணும்."

"என்ன படம்?"

"பத்தினிப் பெண்"

"தலையங்கமே ஒரு மாதிரிக் கிடக்கு. இண்டைக்கும் ரண்டரை மணித்தியாலத்த வீணாக்க வேணும்."

"கதை பறவாயில்லையாம். சிம்பிளா எடுத்திருக்கெணடாள்."

"உப்பிடிச் சொல்லி எத்தின படங்களப் பாத்தனாங்கள்."

"எதுக்கும் நீங்கள் பின்னேரம் வாங்கோவன்."

"பிறகு சந்திப்பம்."

அவ மறைஞ்சிட்டா. நான் திரும்பவும் மிதிக்கத் தொடங்கினேன். அந்த உயரத்துக்குப் போய்ச் சேருறத்துக்கிடையில மனிசருக்கு உயிர் போய் வந்திடும்.

போன ஒரு வருசத்துக்குள்ள எத்தின விசயங்கள் நடந்து முடிஞ்சிட்டுது.
முரளியைப் பிரிஞ்சது ...... சாந்தி கலியாணங் காட்டி கனடாவுக்குப் போனது ...... அண்ணை செத்தது ......

இந்தியன் ஆமி வந்திறங்கின கையோட அண்ணை என்ன இஞ்சால கூப்பிட்டான். வந்தநாள்த் தொடக்கம் சாந்தியும் மங்கையக்காவும் பழக்கம். அவை ரண்டுபேரும் இல்லாட்டி நான் சரியாக் கஸ்ரப்பட்டிருப்பன்.

அண்ணையும் தன்ர ஒரு பிள்ளை மாதிரியெண்டு மங்கையக்கா அடிக்கடி சொல்லுவா. அவனப் பற்றி யோசின வந்தா கதைப்பம். மங்கையக்கா விக்கி விக்கி அழுவா. உண்மையாவே அவவுக்கு அண்ணையில பாசம்தான் போல !





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நானும் மங்கையக்காவும் எவ்வளவு மண்டாடிக் கேட்டம். கொஞ்சங்கூட கட்டுப்பாடில்லாமல் குடிச்சிது. டொக்ரர் தன்னால ஏலாதெண்டு முடிவாச் சொல்லிட்டார்.

"மருந்து தந்து பிரியோசனமில்லை. இவர் உயிருக்கு ஆபத்து. குடிக்கிறதை உடனடியாக நிறுத்தவேணும்."

வேலைக்கும் போறேல்ல. சோசல் காசும் எடுக்கப் போறேல்ல. அஞ்சப் பத்த நான் தான் குடுக்கிறது. டொகா சொன்னாப் பிறகு நான் அதையும் நிப்பாட்டீற்றன். கெஞ்சி மண்டாடிச்சிது. ஒரு நாள் கடிதமும் எழுதி வைச்சிது. இண்டைக்குத்தான் கடைசியெண்டு ஒவ்வொரு முறையும் சொல்லும். கோலா குடிக்க, பொமஸ் சாப்பிட எண்டு பொய் சொல்லி காசு வாங்கி எல்லாத்தையும் குடிச்சிடும். இஞ்ச தானே உதுகளெல்லாம் மலிவா வேண்டலாம்.

அண்ணை காதலிச்ச பெட்டையும் எங்கட ஊர் தான். எனக்கும் அவற்ர காதல் பிடிக்கேல்ல. முரளியோட பழகத் துவங்கின பிறகு தான் எனக்கு அது பிழையெண்டு தெரிஞ்சிது.

அம்மாவும், ஆச்சியும் ஏன் அண்ணைற்ர காதல எதிர்த்தினம் எண்டு எனக்குத் தெரியாது. அந்தப் பெட்ட நல்ல வடிவு. கொஞ்சக்காலம் இந்தியாவில படிச்சது. ஐஞ்சாறு வருசமா அண்ணைக்காக காத்துக்கொண்டிருந்திட்டு பிறகு கலியாணம் முடிச்சிட்டுது. கேள்விப்பட்ட நாள்த் தொடக்கம் இவனும் குடிதான்.

ஒருநாள் அண்ணை காலமயே குடிக்கத் தொடங்கிவிட்டான். நான் வேலைக்குப் போட்டு வந்தன். அவன்ர அறைக்கதவு உள்ளுக்க பூட்டிக் கிடந்திது.
மங்கையக்காவும் நானும் தட்டுதட்டெண்டு தட்டினம். பொழுது பட்டுப் போச்சு. கதவு திறக்கேல்ல. "சுலுகல் டீன்ஸ்" சுக்கு ரெலிபோன் அடிச்சம். கதவு திறந்துவிட்டாங்கள். மலபோல அண்ணை விழுந்து கிடந்திது. மூக்குச் சளி வடிஞ்சு . . . . . . காறற் பிரால நனஞ்சு . . . . . கக்கூசும் இருந்து . . . . .

நானும் முரளியும் பழகேக்க அண்ணை ஒண்டுஞ் சொல்லேல்ல. எனக்கொரு மாப்பிள தேடிப்பிடிக்கிற தன்ர கஸ்ரம் தீர்ந்து போச்செண்டோ அல்லது தான்தான் விரும்பினவளோட சேர்ந்து வாழேலாமப் போச்சு. நானெண்டாலும் விரும்பினவனோட சந்தோசமா இருக்கட்டுமெண்டு நினைச்சிதோ தெரியேல்ல.

அண்டைக்கு விசயம் தெரிய வந்த பிறகு அண்ணை கொண்ட கோலம் மாதிரி முதல் ஒருநாளும் இல்ல. "இந்தா கத்திய எடு பொல்ல எடு அவன நான் வெட்டுறன். அடிச்சுக் கொல்லுறன் " எண்டு ஆவேசப்பட்டிது. பிறகு எண்ணிலயுமெல்லே ஏறிப்பாஞ்சிது.

ஒரு கிழமை கழிச்சுத்தான் தனக்குத் தெரியுமாம். ஏன் உடனவே சொல்லேல்லயாம்.

நான் எப்பிடி இதப்போய் அண்ணையிட்ட சொல்லுறது. அண்ணையும் நானும் அவ்வளவு நெருக்கமாவே பழகினனாங்கள். தற்செயலா வருத்தம் கிருத்தம் வந்து உடலுறுப்பைப் பற்றிக் கதைக்க வேண்டியிருந்தால் அதையே வெளிப்படையா கதைக்கேலாத நிலையில எங்கள வளத்து வச்சிருக்கினம்.

அண்டைக்குத்தான் அவன் முரளியோட முதல் முறையா படுத்தனான். எனக்கு ரத்தம் வரேல்லையாம். அதால தான் என்னோட வாழமாட்டன் எண்டு வீட்ட கொண்டுவந்து விட்டிட்டுப் போட்டான். எண்டு அண்ணேட்ட நான் சொல்லேலுமே?

ரெலிபோன் எடுத்து அழுத அழுகையில மங்கையக்கா ஓடி வந்திட்டா. அவா இல்லையெண்டால் நான் செத்திருப்பன்.

"இவன் எந்தக்காலத்தில இருக்கிறான்? அதுவும் இந்த ஐரோப்பாவில இருந்து கொண்டு . . . . "



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எனக்கும் அவன் இப்பிடியெண்டு தெரியாது. நான் அநியாயமா என்ர வாழ்க்கய அழிச்சிட்டன்."

"எல்லாப் பொம்பிளையளுக்கும் முதல்முறையா ரத்தம் வராது. ஒவ்வொருத்தற்ற உடம்பமைப்பும் வெவ்வேற மாதிரி. நீ அழாதயடியம்மா."

மங்கையக்கான்ர அரவணைப்புத்தான் அன்டைக்கு எனக்கு ஆறுதல் தந்திது.

நான் ரண்டு மூண்டு நாளா சமைக்கேல்ல. அவா தான் சமைச்சுத் தந்தா. அவன நினைக்கேக்க சிலநேரம் ஆத்திரம் வந்திது. சிலநேரம் சரியான கவல நெஞ்ச அடைச்சிது. ஒரு வருசமாவெல்லே அவனோட பழகினது. எனக்கு இனி வாழ்க்கையே இல்லயெண்டுதான் நினைச்சன். அப்பிடி நினைச்ச நேரமெல்லாம் அழுதன்.

இடிக்க இடிக்க இடிஞ்சு போகாத உரலெண்டெல்லே மங்கையக்காவச் சொன்னனான். அவதான் என்னயும் ஒரு உரலாக்கினா. நான் ஒண்டையும் இழக்கேல்ல. எனக்கு முன்னால பெரிய ஒரு எதிர்காலம் இருக்கிது. எண்டு அடிக்கடி சொல்லுவா.

ஆத்திரமும் கவலையும் ஆற ஆறுதலா யோசிச்சுப் பாத்தன். அவா சொன்னதெல்லாம் சரியெண்டு பட்டிது.

ரத்தம் வரேல்ல எண்டதுக்காக சேந்து வாழ மாட்டன் எண்டவன் பிறகு பிறகு என்னென்னத்துக்கெல்லாம் சந்தேகப்பட்டிருப்பானோ?

அவன் இவ்வளவு வேளைக்கு தன்ன அடையாளம் காட்டினது நல்லது.

எங்கட நித்திரேல்ல நல்லதா கெட்டதா எத்தின கனவுகளை காணுறம். கெட்ட கனவில வந்த உருவம்தான் அவன் முரளி. அவனோட பழகின காலத்த ஒரு கெட்டகனவா நினைச்சு நான் மறந்திட்டன்.


சில பெண்கள் வெளியீடுகள்

கோசல்யா கவிதைகள்
கவிதைத் தொகுப்பு
தொடர்புகட்கு
S.Sornalingam
Leineweberstr.6
4330 Mühlheim/Ruhr
Germany

மறையாத மறுபாதி
கவிதைத் தொகுப்பு
தொடர்புகட்கு
EXIL
27,RUE JEANMOULIN
92400 COURBEVOIE
FRANCE

சக்தி
சஞ்சிகை
தொடர்புகட்கு
Sakthi
BOKS 99 OPPSAL
0619 OSLO 6
NORWAY

ஊதா
சஞ்சிகை
தொடர்புகட்கு
"UUTHA'
ALLER WELT HAUS
Potthof str. 22
5800 HAGEN 1
GERMANY




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிளாரா செற்கின்

## ஜேர்மன்பெண்நிலைவாத முன்னோடி

மல்லிகா

பெண்ணிலைவாதம், பெண்கள் பிரச்சனை, அல்லது சாதாரணமாக பெண்கள் பற்றி பேசும் போது நாம் கிளாரா செற்கினை மறந்துவிடமுடியாது. ஜேர்மன் சோசலிச பெண்கள் இயக்கத்தின் ஆரம்பகாலத் தலைவியாகவும், தொழிலாளப் பெண்களின் போராட்டங்களில் அவரின் பங்களிப்புகள் மற்றும் சாதனைகள் மூலமாகவும் அவர் பெற்ற பெரும் புகழும் பெண்கள் மத்தியில் என்றும் நிரந்தரமானது.



ஐரோப்பிய சோசலிசம் மற்றும் பெண்கள் விடுதலை பற்றிய எமது அறிவை பூர்த்தி செய்வதற்கு இந்தப் பெண்ணின் வாழ்க்கைப்பற்றியும் அவருடைய செயற்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்வது அவசியம் என்பதனால் கிளாரா செற்கினை (1857-1933) ஒரு பெண்நிலைவாதியாகவே இக்கட்டுரை அறிமுகம் செய்கின்றது. பெண்களுக்காக உழைத்துப் போராடி, தியாகங்கள் பல செய்து, சமூக ரீதியாக, அரசியல் ரீதியாக, மற்றும் அறிவியல் ரீதியாகப் பல சாதனைகள் படைத்த பெண்ணுக்கு இது சமர்ப்பணம்.

நான் இங்கு குறிப்பிடுபவை அவரின் வாழ்க்கையையும், செயற்பாடுகளையும் பற்றிய முழுமையான தரவுகள் அல்ல, என்னுடைய வாசிப்பிற்கும் அறிவுக்கும் இயலுமைக்கும் உட்பட்ட விதத்திலேயே இதை எழுதியுள்ளேன். சோசலிச முகாமில், பிரட்றிக் ஏங்கல்ஸ், ஆகஸ்ட் பேபல் ஆகியோருக்குப் பின்பு வந்த முக்கியமான பெண்கள் பிரச்சனை பற்றிய சித்தாந்தவாதி என்ற முறையில், கிளாரா செற்கின் பற்றிய ஒரு கலந்துரையாடலை வாசகர்கள்(கேட்போர்) மத்தியில் உருவாக்கும் என்பதே எனது நம்பிக்கையாகும். ஜேர்மன் மற்றும் உலக தொழிலாளவர்க்க மற்றும் சோசலிசப் பெண்களினால் அவருடைய கல்வி மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பாகுதல் ஆகியவை பற்றிய செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களாகும்.

Wiederau, Saxony என்னுமிடத்தில் 1857ம் ஆண்டு ஜுலை மாதம் 5ம் திகதி கிளாரா, கொட்பிறீட்----- ஜோசபின் ஐஸ்னர் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார். பெண்கள் உரிமைகள் சம்பந்தமாக கிளாராவின் அக்கறை இளம்பிராயத்திலிருந்தே அவரின் தாயாரினாலும், அவர் கல்வி கற்ற Von Steyber Institute(Leipzig) இன் தலைவி ஆகஸ்டே சிமித்தினாலும் ஊக்கப்படுத்தப்பட்டன.

அக்காலத்தில் மற்றைய ஜேர்மன் பெண்கள் வளர்க்கப்பட்ட விதத்திலிருந்து மாறுபட்ட விதத்திலேயே கிளாரா வளர்க்கப்பட்டார். பையன்களே அவளது விளையாட்டுத் தோழர்களாக இருந்தனர். பள்ளிக்கூடத்திலும் அவருடன் கூடப் படித்தவர்கள் ஆண்களாகவே இருந்தனர். இந்த சூழ்நிலைகளாலும் அவரின் தாயாரின் பெண்கள் சமத்துவம் சம்பந்தமான நம்பிக்கைகளுமே அவரைப் பிற்காலத்தில் ஆண்களின் பிரத்தியோகமான "பிரதேசங்கள்" என்று எண்ணப் பட்ட விடயங்களில் தலையிட உதவியது . கிராமப்பாடசாலையில் கல்வி கற்றதுடன் தந்தையிடம் மற்றைய கிராமப்பையன்களுடன் உயர்கல்விக்குத் தயாராகும் பாடங்களையும் படித்தார். அத்துடன் தந்தையின் நூல்நிலையத்தில் கோதே, ஷில்லர், ஹோமர், ஷேக்ஸ்பியர், டிக்கின்ஸ் ஆகியோருடைய நூல்களையும் படித்தார். ஆனால் பிற்காலத்தில் இந்த நூல்களைக் காட்டிலும் சிறுபிராயத்தில் தன்னைக் கவர்ந்த நூல்கள் படங்களுடன் கூடிய சரித்திர புத்தகங்களான பிரெஞ்சுப்புரட்சி, சுவிஸ் சமஷ்டியின் விடுதலைக்கான போராட்டங்கள், மற்றும் பாப்பரசருக்கு எதிராக நடைபெற்ற எதிர்ப்போராட்டங்களுமே எனக் குறிப்பிட்டுள்ளார். ஒருவர் தன்னுடைய கொள்கைகளுக்காகப் போராடவும் அவசியமானால் தன் உயிரைக்கூடத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கவேண்டும் என்ற உணர்வுகளை தனக்கு இந்த நூல்களே ஊட்டியதாகவும் குறிப்பிடுகின்றார்.

1872 இல் கிளாராவின் தந்தையார் 66 வயதில் ஓய்வு பெற்றார். தனது சிறு ஓய்வூதியத்துடன் தனது வீட்டில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார். தாயார் வீட்டறைகளை வாடகைக்குக் கொடுத்து சிறிது பணம் சம்பாதித்தார். இந்த நிலமைகளில் கிளாராவிற்கு உயர்கல்வியைத் தொடருவது சிரமமாக இருந்தது. எனினும் கிளாராவின் தாயார் ஜேர்மன் பெண்கள் தேசிய சபையின் செல்வாக்கை உபயோகித்து Von Steyber Institute என்ற ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையில் கிளாராவைச் சேர்ப்பித்தார்.

ஜேர்மனியில் அக்காலத்தின் முறைப்படி பெண்கள் சர்வகலாசாலைக்குப் புகும் பரீட்சைக்குப் படிப்பது தடைசெய்யப்பட்டிருந்தபடியால் கிளாராவினால் அப்படிப்பைத் தொடரமுடியவில்லை. ஆண்களுக்கு சகல தொழில்கள் செய்யும் வாய்ப்பு இருந்தபோதிலும் பெண்களுக்கு ஆசிரியைத் தொழிலும் தையற்தொழிலுமே ஒதுக்கப்பட்டிருந்தன.

ஜேர்மனியில் ஆசிரியத் தொழில் செய்த பெண்களே கல்வித் தகமையை பெற்றவர்களாகவும், பேச, அமைப்பாக்க கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

ஆகஸ்டே சிமித்திடம் ஆசிரியையாகப் பயிற்றுவிக்கப்பட்ட கிளாரா கல்வி மூலமே பெண்கள் சமத்துவத்தையும் பல மாற்றங்களையும் செய்யமுடியுமென்று அப்போது நம்பினார்.

சோசலிஸக் கருத்துக்களின் அறிமுகம் கிளாராவிற்கு அவருடைய தம்பியார், ஆதர் மூலமாகவே உண்டாகியது. 1878ல் கிளாரா தனது படிப்பை முடித்த பொழுது ஆகஸ்ட்பேர்பல், வில்கெல்ம் லிப்னெக்ட் ஆகியோர் தலைமையில் இருந்த சோசலிச ஜனநாயகக் கட்சியுடன் மிகவும் நெருக்கமாகிவிட்டார்.

1878 வரைக்கும் கிளாராவிற்கும் தொழிலாளவர்க்கத்திற்குமிடையிலான சம்பந்தம் அறிவியல் ரீதியான அனுதாபமாகவே இருந்தது.

Von Steyber Instituteல் படித்த ருசியப் பெண்ணான வாவராவின் நட்பின் மூலமே கிளாரா அரசியல் ரீதியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இந்த ருசிய நண்பியுடன் ருசிய மாணவர்களின் அரசியல் படிப்பு வட்டத்தில் கிளாரா கலந்து கொள்ள ஆரம்பித்தார்.

இந்த நண்பர்களின் மூலமாக ஜேர்மன் சோசலிச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகவாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இரவுகளில் நடைபெற்ற நீண்ட விரிவுரைகளிலும் கூட்டங்களிலும் கிளாரா கலந்துகொண்டார். இது கிளாராவின் தாயாருக்குப் பிடிக்காதபடியால் தாய்க்கும் மகளுக்குமிடையில் சச்சரவுகள் ஏற்பட்டன. கிளாராவின் தொழிலாளர் இயக்கத்துடனான வேலைகளும், சோசலிஸக் கருத்துக்களும் தீவிரமடைந்த பொழுது அவருக்கும் அவருடைய ஆசிரியையான ஆகஸ்டே சிமித்துக்குமிடையில் மனஸ்தாபங்கள் உருவாகின. தவிர்க்கமுடியாதவாறு கிளாரா தனது தாயிடமிருந்தும், சகோதரியிடமிருந்தும் ஆசிரியையிடமிருந்தும் பிரிய வேண்டியதாயிற்று. பிற்காலத்தில் கிளாராவின் மார்க்ஸிய ஆசானான ருசிய யூதரான ஒசிப் செற்கினின் தொடர்பு அவரின் சோசலிஸத்திற்கான மாற்றத்திற்கு முக்கிய படியாக அமைந்தது. பிஸ்மார்க்கின் சோசலிஸ்ட்டுகளுக்கு எதிரான சட்டத்தினால் 1880இல் ஒசிப் செற்கின் வெளிநாட்டவர் என்றபடியால் நாடுகடத்தப்பட்டார். 1881இல் கிளாராவும் நாட்டைவிட்டு வெளியேறினார். சூரிச்சில் சிறிதுகாலம் வாழ்ந்த பின்பு பாரீஸில் ஒசிப் செற்கினுடன் கிளாரா வாழ்ந்தார். இரு குழந்தைகளுடன் இவர்கள் குடும்பம் வறுமையில் வாழ்ந்தது. எனினும் பாரீஸ் சோசலிஸ இயக்கங்களில் இருவரும் உழைத்து வந்தனர். 1889இல் ஒசிப் செற்கின் காசநோயினால் மரணமானர். அதன்பின்பு கிளாரா இரு புதல்வர்களுடனும் ஜேர்மனி திரும்பினார்.

1880களில் பிரெஞ்சு, மற்றும் ஜேர்மன் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் மூலமாக பெண்கள் பிரச்சனைகள் பற்றிய ஒரு அறிஞையாக அவர் பிரசித்தி பெற்றிருந்தார். இதனால் பாரீசில் 1889இல் நடைபெற்ற இரண்டாவது அகிலத்தின் கூட்டத்தில் ஐரோப்பிய தொழிலாள இயக்கத்தைப் பற்றி பேச தேர்தெடுக்கப்பட்டார்

## சமத்துவம் (Die Gleichheit)

1891ல் கிளாரா செற்கின் **"சமத்துவம்"** என்ற ஜேர்மன் சோசலிஸ ஜனநாயகக் கட்சியின் சோசலிஸப் பெண்களுக்கான பத்திரிகையின் ஆசிரியையாகப் பதவியேற்றார் பெண்களின் அறிவு வளர்ச்சிக்கும் அமைப்பாவதற்கும் இப்பத்திரிகை பேருதவி செய்தது. ஆசிரியராக மட்டுமல்ல பல கட்டுரைகளையும் கிளாரா இப்பத்திரிகையில் எழுதினார்.

1903-4களில் 11,000 பிரதிகள் விற்பனையாகிய இந்தப் பத்திரிகை 1907இல் 75000 பிரதிகள் விற்பனையாகின. இந்தப் பத்திரிகையின் முதலாவது இதழில் கிளாரா இவ்வாறு எழுதினார்.

*"ஆயிரம் ஆண்டுகள் நிலவும் பெண்பாலரின் இழிநிலைக்கான காரணத்தை ஆண்களினால் இயற்றப்பட்ட சட்டங்களில் அல்லாமல் பொருளாதார அமைப்பில் காணப்படும் சொத்து உறவுமுறைகளிலேயே தேடவேண்டும் என்ற கொள்கை அடிப்படையிலேயே "சமத்துவம்" வெளிவருகின்றது."*

ஜேர்மனியில் பாடன் வூற்றன்பேர்க் மாநிலத்திலுள்ள ஸ்ருட்காட் நகரில் தனது பெண்கள் இயக்க வேலைகளை ஆரம்பித்தார். இந்த மாநிலத்தில் பெண்கள் இயக்கங்கள் தடைசெய்யப்படாமையினால் வேலை செய்வது சுலபமாகவிருந்தது.

**"சமத்துவத்திற்கு"** ஆசிரியராகவிருந்த போது Neue Zeit போன்ற பத்திரிகைகளிலும் அவர் எழுதி வந்தார். எழுத்தாளியான கிளாரா சிறந்த மேடைப் பேச்சாளியாகவும் இருந்தார். 1892ல் முதலாவது கட்சி மகாநாட்டில் சோசலிஸப் பெண்களின் முன்னணிப் பேச்சாளராகவும் திகழ்ந்தார். பெண்கள் அரசியலில் ஈடுபடுவதையும், அரசியல் அமைப்புகளில் சேர்வதையும் தடுக்கும் சட்டங்களைப் பாராளுமன்றத்திலும் வெளியிலும் எதிர்க்கவேண்டும் என்ற தீர்மானங்களை ஆதரித்து கட்சியில் உரைகள் நிகழ்த்தினார். கட்சித் தோழர்கள் பெண் தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்ய வேண்டுமென்றும் ஊக்கப்படுத்தினார். 1896இல் அவர் ஜேர்மன் சோசலிஸ ஜனநாயகக்கட்சியின் வருடாந்த மகாநாட்டில் பெண்கள் சம்பந்தமான நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.

*"தொழிலாளவர்க்கப் பெண்களின் இடம் தங்களுடைய வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு மத்தியிலேயே அன்றி மற்றைய வர்க்கப் பெண்களுடனல்ல. ஏனெனில் அவள் ஒரு பெண் என்பதற்காகவன்றி ஒரு பெண்தொழிலாளி என்பதற்காகவே சுரண்டப்படுகிறாள்."*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தொழிற்சங்கங்களில் பெண்களை அமைப்பாக்குதல்.

தொழிற்சங்கங்களில் பெண்களை அமைப்பாக்குவதில் கிளாரா செற்கின் பெரும் பங்காற்றினார். 1892ல் 4355 பெண்களே SPD யின் தொழிற்சங்கங்களில் இருந்தனர். இது 1.8% மாகும். 1895இன் கணிப்பின்படி தொழில் செய்யும் பெண்களின் தொகை 34.9% ஆக இருந்தது. அந்த வருடம் பெண்களும் ஆண்களின் தொழிற்சங்கங்களில் சேர்வதற்கிருந்த தடை நீக்கப்பட்டது. எனினும் பல்வேறு காரணங்களைக்காட்டி பெண்களின் தொழிற்சங்கள் கலைக்கப்பட்டன.

பெண்களின் விடயங்களில் அரசியல் மற்றும் தொழிற்சங்கங்களில் சோசலிஸ இயக்கம் அக்கறைக் காட்டத் தொடங்கிய பின்பு தொழிற்சங்கங்களில் பெண்களின் தொகை அதிகரிக்கலாயிற்று. 1892இல் 4355ஆக இருந்த அங்கத்தவர்கள் தொகை 230, 347 ஆக உயர்ந்தது. கிளாரா புத்தகங்கள் கட்டும் தொழிலாளர் சங்கத்தில் 25 வருடங்கள் உழைத்தார். 1896இல் இரண்டாவது அகிலத்தின் இலண்டன் மகாநாட்டில் தையல் வேலை செய்யும் பெண்களின் பிரதிநிதியாக கலந்து கொண்டு சங்கத்தின் சர்வதேச செயலாளராகத் தேர்தெடுக்கப்பட்டார்.

## கல்வி பற்றி.....

ஆரம்ப காலந்தொட்டு ஆசிரியைத் தொழில் புரிந்த கிளாராவிற்கு பாட்டாளிவர்க்கப் பெண்களுடன் வேலை செய்த காலங்களிலும் கல்வி பற்றிய அக்கறை அதிகமாகவே இருந்தது. கல்விக்கும், அரசியல் உணர்வுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக கிளாரா உணர்ந்தார். சோசலிஸம் மற்றும் புரட்சிகர இலட்சியங்களைத் தொழிலாளவர்க்கக் குழந்தைகள் மத்தியில் கல்வி மூலமாகவே வளர்க்கலாம் என்று அவர் நம்பினார். தொழிலின் பெருமையைக் கல்வியில் வற்புறுத்தியதுடன் தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தையும் வற்புறுத்தினார்.

பெண்கள் தாழ்வுமனப்பான்மையுடன் வளர்வதைத் தடுக்கவும், பால் ரீதியான உறவுகளில் ஆரோக்கியமற்ற செயற்கையான, வெறும் கிளர்ச்சி உள்ள தன்மைகளை நீக்கவும் ஆண்-பெண் கலவன் பாடசாலைகளை ஆரம்பிக்கப் படவேண்டுமென வேண்டினார்.

## முதலாளித்துவப் பெண்ணிலைவாதம்

பெண்களை சோசலிஸ இயக்கத்தினுள் கொண்டுவருவதற்கு, முதலாளித்துவப் பெண்ணிலைவாதிகளை எதிர்க்க வேண்டுமென கிளாரா வாதித்தார்.

1896ல் SPD யின் கோதாகாங்கிரசில் பேசும் பொழுது (இது பின்பு, "பாட்டாளிவர்க்கப் பெண்களினாலேயே சோசலிஸம் வெற்றி பெறமுடியும்" என்ற நூலாக வெளியிடப்பட்டது.)

*"பெண்கள் இயக்கம்" என்று தனியாக ஒன்று இல்லை...... வரலாற்றின் வளர்ச்சிப் போக்கினிலேயே பெண்கள் இயக்கம் தோன்றி இருக்கின்றது....... ஆகையினால் முதலாளிவர்க்கமும் தொழிலாளவர்க்கப் பெண்கள் இயக்கமுமே இருக்கின்றன- சோசலிஸ ஜனநாயகத்திற்கும் முதலாளித்துவ சமூகத்திற்கும் இருக்கும் தொடர்புகள் போலவே - இவை இரண்டிற்கும் இருக்கும் தொடர்புகளுமாகும்."*

இதே பேச்சில் அவர் மேலும் கூறுகின்றார்:

*"தொழிலாளி வர்க்கப் பெண்கள் தங்களது பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றிருக்கின்றார்கள்; ஆனால் ஒரு பெண்ணாக, மனைவியாக , ஒரு தனிநபராக முழுமையான வாழ்வை அனுபவிக்கும் சுதந்திரத்தை அவள் அடையவில்லை.............. மனைவியாகவோ அல்லது ஒரு தாயாகவோ அவள் செய்யும் உழைப்புக்கு முதலாளித்துவ உற்பத்தியினால் வீசப்படும் எச்சத் துண்டுகளே கிடைக்கின்றன."*

*"தொழிலாள வர்க்கப் பெண்களின் விடுதலைப் போராட்டமானது- முதலாளித்துவப் பெண்கள் தமது வர்க்கத்திலுள்ள ஆண்களுக்கெதிராகச் செய்யும் போராட்டம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*போன்றதல்ல— அவர்களின் போராட்டத்தின் இறுதி நோக்கம்- ஆண்களுடன் சுதந்திரமான போட்டிக்கும் போராடுவது அல்ல- தொழிலாள வர்க்க அரச ஆட்சியை உருவாக்குவதேயாகும். தனது வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்களுடன் கைகோர்த்து அவள் முதலாளித்துவச் சமூகத்திற்கு எதிராகப் போராடுகிறார்கள்."*

## சர்வதேச சோசலிஸ இயக்கம்

ஜேர்மனிக்கு வெளியில் உள்ள சோசலிஸப் பெண்கள் அமைப்புகளிலும் செல்வாக்கு பெற்றிருந்த கிளாரா செற்கின் அவற்றை வழிநடத்துவதிலும் பெரும் பங்காற்றினார். 1907ல் ஒரு சர்வதேசம் பெண்கள் மகாநாட்டை ஸ்ருட்காட் நகரில் கூட்டுவதற்கு அவர் முன் நின்று உழைத்தார். இந்த மகாநாட்டில் 15 நாடுகளிலிருந்து 59 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். 1910ல் கோப்பன்காகனில்(டென்மார்க்) நடைபெற்ற இரண்டாவது சர்வதேச பெண்கள் மகாநாடு சர்வஜனவாக்குரிமையை வலியுறுத்தியது. இந்த மகாநாட்டிலேயே கிளாரா செற்கின் மார்ச் மாதம் 8ம் திகதியை சர்வதேசப் பெண்கள் தினமாக்க வேண்டும் என முன்மொழிந்தார். முதலாளித்துவ வாக்குரிமை இயக்கத்திற்கு எதிராக, 1908ம் ஆண்டு நியூயார்க் நகரில் அமெரிக்க சோசலிஸப் பெண்கள் நடாத்திய ஊர்வல நாளான மார்ச் 8ம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த முன்மொழிவு மகாநாட்டினால் பேராதரவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வருடத்தில் ஒரு தினத்தை எமது தினமாக , எமது ஒடுக்குமுறைகளையும், எமது கோரிக்கைகளையும் ஞாபகப்படுத்தும் தினமாக உருவாக்கியதற்கு நாம் கிளாரா செற்கினுக்கு நன்றி கூறவேண்டும். ஒவ்வொரு வருடமும் நாம் இந்த நாளில் ஊர்வலம் செல்லும் போது- அது சுரண்டப்படுபவர்கள் சுரண்டுபவர்களுக்கெதிராக நடாத்தும் ஊர்வலமாகும்.

## முதலாவது உலகயுத்தம்- ஆகஸ்ட் 1914

போர் ஆரம்பமாகி சில தினங்களுக்குப் பின்பு (1914ஆகஸ்ட் 5) கிளாரா "சமத்துவத்தில்" "தொழிலாளவர்க்கப் பெண்களே! தயாராகுங்கள்." என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதினார். ஜேர்மனி நடாத்தும் போரானது, பிற்போக்கு ஹப்ஸ்பேர்க் பரம்பரையினர், நிலச்சொந்தக்காரர்களுக்காகவும், பெரும் முதலாளிகள் ஆகியோருடைய நலன்களுக்காகவே நடாத்தப்படுகின்றது என நடைபெறும் போரைச் சாடினார். அந்தக் கட்டுரை கீழ்கண்டவாறு ஒரு புரட்சிக்கு மறைமுகமாக அழைப்புவிடுத்தது.

*"தொழிலாளவர்க்கத்திற்கு, மக்களிடையேலான சகோதரத்துவம் வெறும் கனவு இல்லை. உலகசமாதானம் ஒரு அழகான சொல் மட்டுமல்ல— என்ன செய்ய வேண்டும்? மக்களின் வாழ்க்கையில், ஒவ்வொருவரும் தயாராகவிருக்கும் பட்சத்தில், எல்லாவற்றையும் வெல்லக்கூடிய நேரம் ஒன்று உண்டு, தொழிலாளவர்க்கப் பெண்களே, தயாராகுங்கள்"*

போருக்கு எதிரான அவருடைய எழுத்துக்கள் தணிக்கைக்குள்ளாயின. போரை எதிர்க்கும் பெண்கள் பத்திரிகை என "சமத்துவம்" சர்வதேச மட்டத்தில் அங்கிகரிக்கப்பட்டது.

பேர்ன் நகரில் கிளாராசெற்கினும் ரோசாலக்ஸம்பேர்கும் 1915 மார்ச்சில், போருக்கு எதிராக சர்வதேச பெண்கள் மகாநாடொன்றைக் கூட்டினார்கள். 1915 ஆகஸ்டில் கிளாரா முதலாவது முறையாக கைது செய்யப்பட்டார். அந்த வருடமே "சமத்துவம்" பத்திரிகை அவருடைய கையிலிருந்து எடுக்கப்பட்டது.

கிளாராவின் எழுத்துக்கள் புரட்சிகர மூலோபாயத்திற்கான சித்தாந்த அத்திவாரங்களை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தன. வர்க்க சமுதாயத்தில் பெண்களின் தாழ்வு நிலைப் பற்றிய பிரச்சனைகள் பற்றி முன்னெப்போதும் இல்லாதவாறு சிந்தனை தெளிவுள்ள சித்தாந்தவாதியாக கிளாரா செற்கின் விளங்கினார். மார்க்ஸின் சமூக உற்பத்தி பற்றிய சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே அவரின் ஆய்வுகள் இருந்தன. "கார்ல்மார்க்ஸிடம் இருந்து பெண்கள் பெற்றுக்கொண்டது என்ன?" என்ற கட்டுரையில் (மார்ச்1903) அவர் பின்கண்டவாறு எழுதினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*"பெண்களின் சமூக அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரத்திற்கும், நலிவிலிருந்து சந்தோஷமான வாழ்க்கைக்கும் முன்னேறிய கஷ்டங்கள் நிறைந்த பாதையில் பிரகாசமான ஒளியைப் பாய்ச்சியதற்காக மட்டுமல்ல, பெண்கள் இயக்கம், முன் எவரிலும் பார்க்க மார்க்சிற்குக் கடமைப்பட்டுள்ளது. அவர் தமது பூரணமான ஆழ்ந்த ஆய்வுகள் மூலமாக, இன்றைய சமுதாயத்திலுள்ள வர்க்க முரண்பாடுகளையும் அதன் அடிப்படைகளையும், வெவ்வேறு வர்க்கத்திலுள்ள பெண்களின் நலன்கள் பற்றியும் எமது கண்களைத் திறந்துவிட்டார். வரலாற்றை பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்துடன் நோக்கியபடியால் முதலாளித்துவச் சீமாட்டிகளும் பாட்டாளிவர்க்கப் பெண்களும் நேசமிக்க சகோதரிகள் என்ற குழந்தைத்தனமான வாதம் சவர்க்காரகுமிழ்கள் போல் உடைந்து சிதறியது. முதலாளித்துவப் பெண்கள் இயக்கத்தையும் பாட்டாளிவர்க்கப் பெண்கள் இயக்கத்தையும் வேறுபடுத்தும் "ஆயுதத்தை" உருவாக்கியது மட்டுமல்லாமல் அதைப் பயன்படுத்தவும் எமக்கு கற்றுத்தந்தார். அதே சமயம் பாட்டாளிப் பெண்களின் இயக்கத்தை, பாட்டாளி வர்க்கத்தின் சோசலிசத் தொழிலாளர் இயக்கத்துடனும் புரட்சிகர வர்க்கப் போராட்டத்துடனும் இணைக்க எமக்கு உதவினார்."*

1914இல் உருவாகிய போரினால் சோசலிஸ இயக்கத்தினுள் சீர்திருத்தவாதிகளுக்கும் புரட்சிகர சக்திகளுக்குமிடையிலான மோதல்கள் உச்சக்கட்டத்தினை அடைந்தது. அதிகமான இடதுசாரிகள் போரை ஆதரித்தனர். கிளாரா செற்கின், ரோசா லக்ஸம்பேர்குடனும் இன்னும் சிறுபான்மையான இடதுசாரிகளுடனும் சேர்ந்து போரை வன்மையாக எதிர்த்தார்.

1918ல் ஜேர்மன் கம்யூனிஸ்ட்கட்சி (KPD) ரோசாலக்ஸம்பேர்க்கினால் உருவாக்கம் பெற்றது. அதில் 300 பெண்கள் (9%) அங்கம் வகித்தார்கள். 1919-1924வரைக்கும் KPDயின் அரசியல் பீடத்தில் கிளாரா செற்கின் அங்கம் வகித்தார். 1920 ஜுலை 2ம் திகதி ஜேர்மன் பாராளுமன்றத்தின் முதலாவது கம்யூனிஸ்ட் அங்கத்தவராக அமர்ந்தார். தனது வாழ்க்கையின் இறுதிப் பாகத்தை அவர் ருசியாவிலேயே கழித்தார். அங்கு பொல்ஷிவிக் புரட்சியிலும் கம்யூனிஸ் அகிலத்திலும் அவர் பங்காற்றினார்.

1927-1933 வரைக்கும் மொஸ்கோவில் கம்யூனிஸ அக்கடமியில் சர்வதேச பெண்கள் இயக்கத்தின் சித்தாந்தத்தலைவியாக இருந்தார்.

1932 ஆகஸ்ட் 30ம் திகதி ஜேர்மன் பாராளுமன்றத்தில் மிக முதிய தலைவர் என்ற முறையில் உரை நிகழ்த்தினார்.

1933ம் ஆண்டு ஜன் மாதம் 22ம் திகதி மொஸ்கோவில் கிளாரா செற்கின் காலமானார்.

கிளாரா செற்கினின் தனிப்பட்ட வாழ்க்கையை நோக்கும் பொழுது, அவருடைய தனிப்பட்ட அனுபவங்கள் அவரை தனக்காக மட்டுமல்ல சகல பெண்களுக்குமாக போராட ஊக்குவித்தது என்பதை உணரலாம்.

இளம்பிராயத்தில் ஏற்பட்ட பல சம்பவங்களினால் அவரின் வாழ்நாள் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தார். 1964இல் கிளாராவிற்கு 6 வயதாக இருந்த பொழுது அவரின் கிராமத்தில் நெசவாலைகள் இயந்திரமயமாக்கப்பட்டதினால் பலர் வேலையிழந்தனர். பிற்காலத்தில் அப்போது தான் கண்ட நெசவாளர்களின் துன்பங்கள், விவசாயக் குடும்பங்களின் வறுமை ஆகியவற்றையெல்லாம் ஞாபகத்தில் கொண்டிருந்தார். அவர் எழுதிய பல கட்டுரைகளில் ஒரு பெண் தாயாக மனைவியாகப் படும் துன்பங்களை விபரித்தார். ஒசிப் செற்கின் நோய்வாய்ப்பட்டு இருந்தபொழுது இரு குழந்தைகளுடன் வருமானமும் இல்லாமல், வீட்டுவேலைகளைச் செய்துகொண்டு துன்பங்களைச் சுமந்தார்.

பிற்காலத்தில் பெண்கள் வீடுகளில் ஊதியமில்லாது உழைப்பதற்கெதிராகக் குரல் கொடுத்தார். வீட்டுவேலைகள் பெண்களை அரசியலில் ஈடுபடுவதைத் தடுத்ததைக் கண்ட கிளாரா செற்கின் பெண்களை, தொழிலாளர்களாக, மனைவிமார்களாக, தாயார்களாக- சோசலிஸத்தைத் நோக்கி வரக்கூடிய கல்வியூட்டக்கூடிய வெளியீடுகளை வெளியிடும்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சிக்குள் வற்புறுத்தி வந்தார்.

கிளாரா தாய்மையின் மதிப்பையும் உணர்ந்திருந்தார் தாயாக இருந்ததில் மகிழ்ச்சிகொண்டார். தன்னுடைய இரு புதல்வர்களையும் நன்றாகவே வளர்த்தார். சிறந்த பள்ளிக்கூடங்களிற்கு அனுப்பிவைத்தார். ஆனால் அவர்களுக்கு தொழிலாளவர்க்கப் பையன்கள் போலவே உடை உடுத்தினார் இதனால் அவர்கள் பள்ளித்தோழர்களின் பரிகாசத்துள்ளாகினார்கள். அவர்களுடைய தாய் மற்றவர்களுடைய தாய்மார்கள் போல பிள்ளைகள், தேவாலயம் சமையலறை ( Kinder, Kirche, Küche) என்று இருக்காததும் ஒரு காரணமாக இருந்தது. கிளாரா தனது பிள்ளைகளுக்கு முன் உதாரணமாக விளங்கினார். அவர்கள் அவரது பாதையிலேயே சென்றார்கள் பெண்ணொடுக்குமுறைக்கெதிரான அரசியலில் தோழமை காட்டினார்கள். அவரது இரண்டாவது மகன் கொஸ்டியா "சமத்துவத்தில்" பல கட்டுரைகளை எழுதியதுடன் அதை வெளியிடுவதிலும் உதவினார். போஷாக்கின்மையாலும் ஓய்வின்மையாலும் அவர் சுகநோய்க்குள்ளானர். அவருடைய ஒரு கண் குருடாகியபோது அவருடைய மகனின் உதவியுடனேயே பாராளுமன்றத்திற்குப் போகமுடிந்தது.

உலகப் பெண்ணிலைவாதிகள் எல்லோருக்கும் கிளாரா செற்கின் என்றென்றும் வழிகாட்டும் தீபமாக விளங்குகிறார்.

**( 16வது இலக்கியச்சந்திப்பில் வாசிக்கப்பட்ட கட்டுரை)**



## தொடரும் பெண் குழந்தைகள் கடத்தல்

ஜேர்மனியில் பெண்குழந்தைகளைக் கடத்தி, கொலைசெய்வதும், பாலியல் வன்முறைக்குள்ளாக்குவதும், உடலுறுப்புக்களை பெறுவதற்காக கொலை செய்வதும் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இதே வரிசையில் கடந்த ஒரு மாதத்திற்குள் மூன்று வெளிநாட்டுப் பெண் குழந்தைகள் கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு ஒரு தமிழ்ச் சிறுமி ஒருவரும் கடத்தப்பட்டுள்ளார்.

ஆகஸ்ட் 26ம் திகதி பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்ற சுஜிதா புவனேஸ்வரன் என்ற 13 வயதுச் சிறுமி வீடு திரும்பவில்லை. அவரின் எரிந்த உடலை ஜேர்மன் - ஒல்லாந்து எல்லையிலுள்ள ஆகன் என்ற நகரை அண்மித்த காட்டினில் கண்டெடுத்துள்ளனர். அவ்வழியாக உலாவச் சென்ற ஒருவர் சிறுமியின் எரிந்த உடல் பற்றிய தகவலைப் பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

இதேபோல், எசன் என்னும் நகரைச் சேர்ந்த லெபனானைச் சேர்ந்த அபீர் என்ற 12 வயதான சிறுமியும் காணாமல்ப் போயுள்ளார். மாலை ஐந்து மணிக்கு வீட்டிலிருந்து கடைக்குச் சென்ற சிறுமி வீடு திரும்பவில்லை. அவர் பற்றிய தகவல் இன்னும் இல்லை.

இச்சிறுமியின் வீட்டின் அருகில் வாழ்ந்த மரியானா என்ற பொஸ்னியாவைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமியும் காணாமற்ப் போயுள்ளார். இச்சிறுமியின் உயிரற்ற உடல் 300 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நீடர்சக்சன் என்னும் மாநிலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச்சிறுமி பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட பின்பே கொலை செய்யப்பட்டுள்ளாள்.

இந்தக் கடத்தல்கள் ஜேர்மனியிலுள்ள இனவாதத் தாக்குதல்களின் இன்னொரு வடிவமோ அல்லது உடலுறுப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான கொலையா அல்லது பாலியல் வக்கிரங்களிற்காக செய்யப்படும்கொலைகளா என்பது கேள்விக்குறியே.
பிள்ளைகளை வீட்டிற்கு வரும் வரை பெற்றோர்கள் அச்சத்துடனேயே வாழவேண்டிய நிலையேயுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு உடன்படிக்கை செய்வோம்

முதிர்ந்த கன்னி
முதிராத கனவுகள்
எண்ணிரண்டு வயதுமுதல்
எண்ணத் தொடங்கினேன் வருடங்களை . . . . .

கனவுலகின் ராஜகுமாரன்
நிஜவாழ்வில் வரவில்லை
சன்மானம் இல்லையென்று
சந்தையில் விலைபோகவில்லை !

லட்சங்களை மதித்து
லட்சியங்களை அவமதித்தும்
ஆடவர்க்கெதிராக செய்வோம்
ஓர் உடன்படிக்கை!

சீதனம் கேட்பவரை
சீ_ என்று விரட்டுங்கள்
மணமானபின்னும்
தனியான பெண்கள் கண்டோம்
மணம் இல்லாவிட்டாலென்ன
மாய்ந்துவிட மாட்டோம்
மனம் வைத்து செயற்பட்டு
சீதனம் என்ற சொல்லை
அகற்றிடுவோம் அகராதியைவிட்டு ! !

❄ கருணா ❄



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை மத்தியானம்.

ஒரு வீடு.

வீட்டின் முற்றத்தில் பல மரங்கள் - மா, தென்னை, பலா, அருகே சில பூமரங்கள்.

ஒரு மரத்தில் ஒரு குருவிக்கூடு - சிட்டுக்குருவிகள்.

அழகிய . . . . சின்னச் சிறகுகள் . . . . சின்ன அலகுகள் . . . .

சின்னக் குச்சுகளை வாயில் ஏந்தி . . . . ஒவ்வொன்றாய் சேர்ப்பித்து . . . . கூடு பூரணமாகும் . . . . சிட்டுக்குருவிகள் . . . . . .
சுதந்திரமாக . . . . சிறகசைத்து பறந்து திரியும் . . . . .

மரத்தின் கீழ் ஒரு சிறுவனும், ஒரு சிறுமியும் - அண்ணனும், தங்கையும்.

சிறுவன் மரத்திலுள்ள பழங்களைப் பார்த்தபடி . . . .

சிறுமியின் கண்களோ சிட்டுக் குருவிகளிடம் . . . .

"என்ன விளையாடுவோம்"

அவள் தெரியாதென தன் தோளை அசைத்தாள்.

"மாங்காய் பிடுங்கி சாப்பிடுவமா-"

"ஐயோ . .. மரத்தில் ஏறினால் அம்மா அடிப்பா . . . அண்டைக்கும் நான் தான் அடி வாங்கினது . . . . நீ தப்பிட்டாய் . . . .

"அப்படியென்டால் நான் தனிய பிடுங்கி சாப்பிடப் போறன்"








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நாங்கள் பறப்போம் . . . . அந்த சிட்டுக்குருவிகளைப் போல . . . .

" போடி மொக்கு . . . . சிறகில்லாமல் எப்படி பறக்கிறது"

" நான் மொக்கில்லை . . ."

"இல்லை . . . நீ மொக்கு . . . பொம்பிளையள் மொக்குகள் . . . . அப்பா சொன்னவர் . . . . அம்மா மொக்கு . . . . நீயும் மொக்கு . . . . நானும் . . அப்பாவும் தான் கெட்டிக்காரங்கள் . . . .

"என்னட்டை சிறகுள்ளது . . . " அவள் தனது இரு கைகளையும் தோளுக்கு மேலாக உயர்த்தி . . . . இங்கே பார் எனக் காட்டினாள்.

"கைகளால் பறக்கமுடியாதே . . . ."

"அப்ப என்ன செய்யலாம்? . . . . நாங்கள் சிறகுகள் செய்வோமா?"

" சிறகுகள் செய்ய ஏலாது . . . கடவுள் தான் தரவேணும் . . . அப்பா சொன்னவர்.

"நாங்கள் செய்து பார்ப்பம் . . . . பிழைச்சால் . . கடவுளிட்ட கேட்போம்."

"எப்பிடி செய்வோம்? பேப்பரிலா , துணியிலா . . . நாங்கள் பள்ளிக்கூடத்தில பேப்பரிலையும், துணியிலையும் வண்ணாத்திப்பூச்சி செய்தனாங்கள் . . . . வடிவான வண்ணாத்துப்பூச்சிகள் . . . . மஞ்சள் . . சிவப்பு . . நீலம் . . பச்சை . . அப்பிடி செய்வமா?"

"மேலே பறக்கிறதெண்டால் பெரிய சிறகுகள் தேவை . . . கனக்க பேப்பர், துணி தேவையே . . . . அப்பாவின்ர புத்தகங்களை கிழிப்பம்."

" அப்ப துணிக்கு என்ன செய்வம்"

"அம்மாவின்ர சீலை ஒன்று எடுப்பம் . . . அவை வராக்கிடையில . . . நாங்கள் சிறகு செய்து . . . பறந்து வரலாம்"

"வா இப்ப தொடங்குவம் . . . "

இருவரும் ஒற்றுமையானார்கள் . . . . இருவர் முகங்களிலும் ஆனந்த அலைகள் . . . . .

புத்தகராக்கியிலிருந்து புத்தகங்களை அவன் கீழே போட்டான் . அவள் ஒவ்வொரு ஒற்றையாக கிழித்து அடுக்கினாள் . போதியளவு ஒற்றைகள் கிடைத்ததும் . . . அலுமாரிக்குள் சேலைகளைத் தேடினார்கள்.

"இது வடிவான சீலை"

"பச்சை தான் வடிவு"

"மஞ்சள் தான் வடிவு"

" அப்ப உனக்கு மஞ்சள் சிறகு . . . . எனக்குப் பச்சைச் சிறகு . . "

அவன் சேலையின் ஒரு மூளையைப் பிடிக்க . . . . அவள் மற்றதைப் பிடிக்க . . . இரண்டாக மடித்து . . . பின் அவள் மிகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பவ்வியமாக கத்தரிக்கோலால் வெட்டினாள். இரண்டு சேலைகள் வெட்டப்பட்டன. வேறும் சில தேவையான பொருட்களை தங்கள் பள்ளிக்கூட பைகளிலிருந்து எடுத்தனர். . . பல வர்ண சோக்குகளால் வர்ணம் தீட்டினர் . . . காகிதங்களில் துணித்துண்டுகளை ஒட்டினர்.



" ஆ . .! வடிவான சிறகுகள் . . ."

" இனி எப்படி பொருத்துறது . . ."

"உனக்கு நான் கட்டி விடுறன் . . . நீ எனக்கு கட்டி விடு "

கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு . . . இருவரும் ஒருவரையொருவர் பார்த்து முழித்தார்கள்.

"மகேன் . . . . சுபா . . . . எங்கே இதுகள் போயிட்டுதுகள் . . . ஒரிடமும் போகாமல் . . வீட்டில இருந்து விளையாடச் சொன்னனான் ."

"அறைக்குள்ளே நிக்குதுகள் போல . . . " அப்பாவின் குரல் மிக அண்மையில் . . .

கதவு திறக்கப்பட்டது.

"இங்க பார் இதுகள் செய்திருக்கிற அநியாயத்தை . . . . "

" ஐயோ . . ! என்ர நல்ல சீலைகள் . . . "

" எங்கே என்ர புத்தகங்களைக் காணேல்லை . . . இங்கே! . . . அருமந்தப் புத்தகங்களை இந்த மாடுகள் கிழிச்சுப் போட்டுதுகள்"

நிலத்தில் சிதறியிருக்கும் பொருட்களை கோப முகத்தோடு பார்த்துக்கொண்டிருக்கும் அப்பாவிடமிருந்தும், அம்மாவிடமிருந்தும் தப்பித்து இருவரும் ஓட முயல . . . "பிடியுங்கோ அந்த கள்ள நாய்களை . . . " என அவள் கட்டளை பிறப்பிக்க . . . அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிடித்தார்.

ஒரு அடி மட்டும் அவன் மேல் விழ . . . அவன் எப்படியோ தப்பித்துக் கொண்டான் . அவள் அகப்பட்டாள்.

நல்ல அடி . . . இருவரும் மாறி . . . மாறி . . .

"ஒருநாள் இதுகளை தனிய விட்டிட்டுப் போனால் இப்படித்தான் . . . வீட்டை ரெண்டாக்கி வைக்குங்கள் . . . . இவளுக்குத்தான் அடிக்க வேணும் . . . அவன் விளையாட்டுப் பிள்ளை . . . இவளுக்குப் பொறுப்பாக இருக்கத் தெரியாதே . . . இவள் தான் எல்லாத்தையும் தொடங்குறது . . . என்னடி செய்தனி . . . "

இன்னுமோர் அடி முதுகில் விழுந்தது . . . பளார் . . .

"சிற . . கு . . செ . ய் . . து பற . . க்க " என அரைகுறையாக இழுத்தாள் அழுதபடியே.

"ஏய் மொக்கு . . கழுதை . . பறக்க வெளிக்கிட்டனியா பறப்பு தான் இல்லாத குறை . ."

"எடுத்த சாமான்களை ஒழுங்காக வைக்காமல் . . . இன்ரைக்கு உனக்குச் சாப்பாடு இல்லை . ."

அவள் அழுது கொண்டு ஒரு மூலையில் . . . .

அவனோ உல்லாசமாக வெளியில் . . . .

சின்ன மனது கிழிக்கப்பட்டது. ஒவ்வொரு சொற்களும் கூரிய கற்களாய் அவளைக் காயப்படுத்தின . . .

முந்திய சம்பவங்கள் . . . கோர்வைகளாய் . . . . சின்ன மூளையில் . . . .

ஏன் அம்மாவும், அப்பாவும் எனக்கு மட்டும் நெடுகிலும் அடிக்கினம். . . அவனும் குழப்படி செய்கிறான் தானே . . . அன்ரைக்கும் மரத்தில ஏறி மாங்காய் பிடுங்கினதுக்கு எனக்குத்தான் அடிச்சவை . . . மரத்தில ஏற நீ ஆம்பிளையே என்று அப்பா கேட்டவர் . . . ஆம்பிளைகள் மட்டுமே மரம் ஏறுறது . . . ஏன் இப்படிச் செய்யினம் . . . . நெடுகவும் நான் தான் அம்மாவுக்கு உதவி செய்ய வேணும் . . அறை குப்பையாக இருந்தால் எனக்குத் தான் பேச்சு விழும் . . . எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை . . . எனக்கு விருப்பமான சட்டைகள் போட ஏலாது . . . வெறும் மேலோட நிண்டால் நீ பொம்பிளைப்பிள்ளையென்று பேசியினம் . . .
எனக்கு டான்ஸ் படிக்க விருப்பமில்லை . . . அவைக்கு விருப்பமாம் . . .
அவனுக்கு ஸ்போட்ஸ் விருப்பமில்லை . . . அவன் செய்யிறதில்லை . . .
எனக்கு அம்மா வடிவாக சமைக்கவும், தைக்கவும் சொல்லித் தாறதென்டு சொல்லியிருக்கிறா. இப்பவே இவளை பக்கத்தில வைச்சு சமைச்சால் பார்த்துப் பிடிச்சிடுவாள் என்று அப்பா அன்ரைக்குச் சொன்னவர்.
எனக்கு சங்கிலி போட விருப்பமில்லை . . . போடாடிக்கு அம்மா பேசுவா . . .
எனக்கு சுரேஷோடையும், கபிலனோடையும் தான் விளையாட விருப்பம். . . அவங்களோட நெடுகவும் விளையாட வேண்டாமென்று அம்மம்மா சொன்னவ . . .

சிறிது நேரத்தில் , சிறகுகளின் மேல் அவள் கைகள் விசிறிக் கிடக்க . . . அவள் நித்திரையாகியிருந்தாள்.

இன்ரைக்கும் எப்படியோ தப்பிட்டேன். . . இப்ப வீட்ட போனால் ஒன்டும் செய்யமாட்டினம் . . . தங்கச்சி . . நல்ல அடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாங்கியிருப்பா. . . அவ தானே பறக்க ஆசைப்பட்டவ . . அவவுக்கு வேணும் . . . எனக்கு அடிச்சால் நான் எஞ்சனியராக வரமாட்டேன் என்டு சொல்லுவன். அப்ப பயத்தில விட்டிடுவினம்.

அவன் பெருமிதத்துடனும் . . . . நம்பிக்கைகளுடனும் . . . .

மரத்திலிருந்த பூவொன்றைப் பறித்து . . . . இதழ்களைப் பிய்த்து . . . . கசக்கி . . . எறிந்து விட்டு உற்சாகமாக வீட்டை நோக்கி நடந்தான்.

நேற்றும் . . . .
இன்றும் . . . .
நாளையும், மறுநாளும் . . . .
இதுவே கதையாகி . . . . .

படுத்தவள் எழும்புவாள் . . . . எல்லாவற்றையும் மறப்பாள் . . . பின்னொருநாள் மீண்டும் நினைப்பாள் . . . பின் மறப்பாள் . . . இப்படியே வளருவாள் . . .



# அன்புள்ள அம்மா

அம்மா என நான் கத்தும் சத்தம்
உன் காதில் விழவில்லையா
விம்மலோடு வெதும்பும் என் பாசம்
உன் நெஞ்சைத் தொடவில்லையா
கண்மணி தாங்குமா உன் விழி தூங்குமா
கண்கள் கங்கையோ நெஞ்சில் மங்கையோ
ஏன் இந்தக் கோபம் தீராத சாபம்
என்ன பாவம் நான் செய்தேன்
கண்மணி கண்வளர் என
அன்று பாடாமல் பாடினியா
திண்ணிய அறிவினை எண்ணடி என
இன்று என் உள்ளத்தில் சொன்னாயே
பிறந்ததும் நான் அழுதேனா
தினம் தினம் கண்ணீர் விழுகுதேன்
என்னமோ நீ என் அம்மா
என்றும் நீ தான் என் தெய்வம்
நெஞ்சில் வேதனை கண்ணில் நீரனை
கொஞ்சம் தீரவே பதில் போடம்மா

**கல்யாணி** ☆



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேசப் பெண்கள் தினமும் மலையகப் பெண்களும்

*மேனகா கந்தசாமி*



மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினத்தை நினைவு கூருமுகமாக நாடெங்கும் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு அமைப்புகளும் அல்லது ஒவ்வொரு குழுக்களும் தமக்கு எவற்றை செய்யவேண்டும் எனப்படுகிறதோ அவற்றை செய்துவருகின்றன. அமெரிக்காவில் லொறன்ஸ் நகரில் நெசவாலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளப் பெண்கள் ஒன்றுகூடி 15 மணிநேர வேலை நேரத்தை 10 மணி நேரமாக வென்றெடுத்த வீரச் செயலைத் தொடர்ந்து பல போராட்டங்கள் பல்வேறு தேவைக்காக உலகெங்கும் பெண்களால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1975க்கு முன்பே ஜேர்மனியில் வசித்த பெண்மணியான கிளாரா செற்கின் அவர்களின் முயற்சியால் சர்வதேசப் பெண்கள் தினம் மார்ச் 8ம் திகதி என பிரகடனப்படுத்தப்பட்டாலும் 1975ல் ஐக்கிய நாட்டு சபையினால் பிரகடனப்படுத்திய பின்பே இலங்கையை பொறுத்தவரை அனேக அமைப்புகள் இத்தினத்தையொட்டி பல நிகழ்ச்சிகளை செய்துவருகின்றன. அதுவும் குறிப்பாக 1980க்கு பின்பே இலங்கையில் இதையொட்டி நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொதுவாக பெண்கள் அமைப்புகளின் கோஷமாக "இரண்டாம் பட்சமாகப் பெண்கள் கணிக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும். முடிவெடுக்கும் ஸ்தானங்களில் பெண்களுக்கு பங்கு இருத்தல் வேண்டும். விளம்பரங்களில் பெண்களைக் கவர்ச்சிகரப் பொருளாக பாவித்தல் நிறுத்தப்படல் வேண்டும். " போன்றனவாகவே உள்ளன. இருப்பினும் இவற்றினைப் பற்றி சிந்திக்கவே முடியாத அளவிற்கு இலங்கைக்குள்ளேயே வாழும் ஒரு பகுதியினர் உள்ளனர் என்பது வேதனைக்குரிய விடயமாகும். இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவளியினரின் வழித்தோன்றலில் உருவான பெண்களே அதாவது மலையகப் பெண்களே இந்நிலையில் இருப்பவர்களாவர்.

மலையகப் பெண்கள் இன ரீதியாக, பால் ரீதியாக, வர்க்க ரீதியாக ஒதுக்கப்படுகிறார்கள். ஏனைய பெண்களைப் பொறுத்தவரை தொழில் ரீதியான ஒடுக்குமுறை மிகவும் அதிகமென்றே கூறலாம். இவ்வளவு காலம் இவர்கள் இதிலிருந்து விடுபடாமைக்கு அறியாமையே காரணமாகும். கல்வி ரீதியாக நோக்கும் போது மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதும் இப்பெண்களே. தாங்கள் அன்றாடம் எதிர் நோக்கும் பிரச்சனையைக் கூட உணரும் மனப்பாங்கு இவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. முன்னெடுக்க முடியாதுள்ளது. சிலவேளை உணர்ந்ததும் அதனை மேலும் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழில் சார்ந்த உரிமைகளைக் கூடகோரும் நிலைக்கு இவர்கள் வளர்ச்சியடையவில்லை. உதாரணத்திற்கு ஏனைய தொழிலாளர்களிடையே ஒப்பிடும் போதுகூட இவர்கள் வஞ்சிக்கப்பட்டே வந்திருக்கிறார்கள். சாக்லெட் தொழிற்சாலை, பாட்டா தொழிற்சாலை போன்றவற்றில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மலையகப் பெண்களுக்கு 150 வருடத்திற்கு முன் சாக்கும் தற்போது அதாவது இந்த நவீன காலத்தில் ரெட்டும் தான் சீருடை. இலங்கையின் இயக்க நிலைக்கு காரணமாய் இருக்கும் தேயிலை கொய்யும் பெண்களுக்கு இப்படி ஒரு புறக்கணிப்பா? மாடி வீடு கட்ட பலருக்கு வழி சமைத்து கொடுக்கும் நம்மவருக்கு சொந்தமற்ற 6 அடிக் கம்பிராக்கள், சிந்திக்க நேரமின்றி அயராது உழைக்கும் இவர்களின் நிலை . . . . உலகெங்கும் பாராட்டைப் பெற்றுக் கொள்ளும் உயர்ரக தேயிலையை சுவைக்க சக்தியற்றிருக்கும் நிலை . . . . . அடுப்படியில் வேலை செய்த வெட்டுண்ட கைகளோடு கொழுந்தெடுக்கச் சென்று தேயிலைக்கு அடித்திருக்கும் கிருமிநாசினிகளைத் தம் உடலுக்குள் எடுத்துக் கொள்ளும் அறியாத நிலை. மனிதனால் பிழிந்தெடுக்கப்படும், அதே நேரத்தில் அட்டைகளால் உறிஞ்சப்படும் பரிதாபகரமான நிலையை வயிற்றிலே பிள்ளையை சுமப்பது மட்டுமன்றி தலையிலே கூடையை சுமக்க வேண்டிய வேதனைக்குரிய நிலை . . . . . . இவர்களின் இந்நிலை நீடிக்கத்தான் போகிறது.

மலையகத்தில் முக்கால்வாசிப் பெண்கள் இந்நிலையில் இருக்கும் போது மலையகப் பெண்கள் கல்வி ரீதியாக, தொழில் ரீதியாக ஆண்களுக்கிடையே சமத்துவம் கேட்பது இயலக் கூடிய காரியமா? ஒரு பெண்ணின் விருப்பத்திற்கெதிராகவோ அல்லது அப்பெண்ணின் சம்மதம் இன்றியோ அல்லது சம்மதத்தை கூட முறையாகவோ பலாத்காரமாகவோ பெற்று ஒரு ஆண் உடலுறவு கொள்வது கற்பழிப்பு என்ற குற்றமாகும். இக்குற்றம் புரிபவர் 20 ஆண்டுகால கடுழியச் சிறைத் தண்டனைக்குட்படுத்தப்படுவர் என ஒரு சட்டம் இருப்பதாக மனித உரிமைகள் சாசனம் தெரிவிக்கிறது. இது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பது ஒரு புறமிருக்க, தோட்டப் பகுதியில் வாழும் தம் பெண்களுக்கு இவ்வாறான ஒரு சட்டம் இருப்பதே தெரியாது. ஆவ்வாறு தெரிந்தாலும் தங்கள் தொழில் பறிபோய்விடும் என்ற பயத்தால் அச்சம்பவத்தை மறைத்து விடுகிறார்கள் அல்லது தற்கொலை செய்து கொள்கிறார்கள். மறு உற்பத்தியில் ஈடுபடும் இப்பெண்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்புகளை உணர்த்தல் மிக அவசியம்.

தற்போது மலையகத்தில் எண்ணற்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன. மலையக மக்கள் இல்லையேல் அரச சார்பற்ற நிறுவனங்கள் இல்லை என்பது தெட்டத் தெளிவு. எனவே இவ்வமைப்புகள் மலையகத்தில் பெரும்பான்மையாக உள்ள பெண்களை கவனத்தில் கொண்டு செயற்படல் அவசியமாகும்.

மலையக பெண்கள் கல்வி அறிவில் பின் தங்கி இருந்தாலும், அவர்களின் தொழில் சார்ந்த பிரச்சனைகளையும், அன்றாடம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் அவர்களுக்கு உணர்வித்தால் அது தொடர்பாக அவர்கள் குரல் எழுப்ப தயங்க மாட்டார்கள் என்பதை வரலாற்று ரீதியான போராட்டங்கள் மூலமாக நிரூபித்துள்ளார்கள். அப்பெண்களுக்கு இவற்றை உணர்வித்தல் அவசியமும் அவசரமானதுமாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இதில் அக்கறை எடுக்கவேண்டுமாயின் முதலில் இப் பெண்களின் தொழில் ரீதியான விடயங்களை தொழிற்சங்கங்களோடு கலந்தாலோசித்து ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தவுடன் தொழிற்சங்கங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சேர்ந்து ஒரு பரந்த அளவில் இதை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். அத்தோடு தொழிற் சங்கங்களின் பெண்கள் அணி, தொண்டர் ஸ்தாபனங்களின் பெண்கள் அணி என்பவற்றை சுயாதீனமாக இயங்கவிடவேண்டும். இதேவேளை தொழிற்சங்கங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் செயற்படும் முன்னணி பெண்கள் தமது சுயாதீனத்தை தமது அமைப்புக்குள் நிலை நிறுத்துவதற்காக குரல் எழுப்ப வேண்டும். ஏனெனில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையகப் பெண்கள் மத்தியில் சுயாதீனமான அமைப்பொன்று தோன்றுவதற்கான அடித்தளத்தை இடக்கூடிய பொறுப்பு இவர்களையே சார்ந்துள்ளது . எனவே இவ் ஆரம்பப் பணியை மேற்கொள்ள இருக்கும் இப்பெண்கள் தமது முதற் பணியை செய்து முடித்தல் அத்தியாவசியமாகும்.

நகர்ப்புற தொழிற் சங்கங்கள் தமது போராட்ட நடவடிக்கைகளின் போது மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை புறக்கணித்ததன் மூலம் இந்நாட்டின் பாரிய தொழிலாளர் வர்க்கமான மலையக தொழிலாளர் வர்க்கத்திற்கும் நகர்ப்புறத் தொழிலாளர் வர்க்கத்திற்கும் இடையில் ஒரு பலமான இணைப்பை ஏற்படுத்துவதில் எவ்வாறு தோல்வி கண்டனரோ அதே போல் கொழும்பை மையமாகக் கொண்டு நகர்ப்புற, கிராமப்புற பெண்கள் மத்தியில் செயற்படும் பெண்கள் அமைப்புகள் தமது போராட்டங்களின் போது மலையகம் சம்பந்தமாக ஒரு சில சுலோகங்களை முன் வைப்பதோடு தம்மை வரையறுத்துக் கொள்கின்றன.

பெண்விடுதலையில் அக்கறை செலுத்தும் எந்த ஒரு அமைப்பும் இப்பாட்டாளி வர்க்க பெண்களைப் புறக்கணித்து பெண் விடுதலையில் வெற்றி காண முனைவராயின் அவர்கள் தமது குறிக்கோளை எய்த மாட்டார்கள் என்பது தெட்டத்தெளிவே.

இந்நாட்டின் பெண் விடுதலைக்காக முன் நிற்கும் அமைப்புகளும் தனி நபர்களும் இவ்யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு தமது போராட்டங்களின் போது மலையகப் பெண்களின் பிரச்சனைகளை உள்ளடக்குவதுடன் அவர்களையும் தமது போராட்டத்தில் இணைத்துக் கொள்வது போராட்டத்தின் முழுமையான வெற்றிக்கு அத்தியாவசியமாகிறது என்பதை கருத்தில் கொள்வது அவசியமாகும்.

**நன்றி: குன்றின் குரல்**

## அவதி

*அறியாமை தலைக்கேறி*
*அக்கிரமம் வந்ததினால்*

*அகதியாய் வெளியேறி*
*அன்னியம் வந்ததினால்*

*களனியில் வேலை தேங்கி*
*தரிசு வந்ததினால்*

*பள்ளிகள் மூடி*
*படிப்பறிவு போனதினால்*

*பட்டினியும் அவலமும்தான்*
*பரிசாகக் கிடைத்தன.*

-- மங்கையற்கரசி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவுகள்



அழகிய வெண்பனி தேசமிது
மரங்கள் ஆறுகள்
வீடுகள் நிலங்கள்
புதிய தேசத்தின்
புதுமை பூக்கள் இவை.

என் நினைவுகளோ!
என் அழகிய தேசத்தின்
சோக நிகழ்வுகளில்.

தந்திக் கம்பங்களில்
தொங்கிய உடல்கள்
அவர்களின் நாமங்கள்
அழியு முன்
ஆறுகளில் மிதந்த
இளைஞர்கள்
அவர்களைத் தேடியலையும்
அன்னையின் கண்ணீர் !

வீடுகளை எரித்து - அதன்
வெப்பத்தில்
குளிர்காய்ந்த -நாட்டின்
காவலர்கள் !

இருளில் மறைந்த
கிராமங்கள் - அவர்கள்
என்றும் கேள்விக்குறிகள் ? ?
கற்பிழந்த மங்கைகள்
அப்பா இல்லா மழலைகள்
சோக ஏக்கங்கள்

வானம் அழுதது
பூமியின் இரத்தப்பூக்கள்
பூத்தன
அன்னையோ தந்தையோ
அண்ணாவோ அக்காவோ
தம்பியோ தங்கையோ

சொந்த பந்தங்களோ
எவருடையதோ?

ஓ என் இனிய தேசமே - நீ
புதைகுழிகளில்
புதையுமுன் உன்னை
மீட்க நினைக்கிறேன்
சயனைட் குப்பிகளோடு
புதைந்து கொண்டிருக்கும்
அறியாப்பாலகர்களை
மீட்க நினைக்கிறேன், ஆனால்
முடியவில்லை
நான் வந்த வெண்பனி
நாட்டிலும் - நாசிகள்
நம்மைப் புகைக்கிறார்கள்
திரும்பிப் பார்த்தேன்
நான் நடந்து வந்த
காலடிச்சுவடுகள்
கருமையாக
ஓ இவர்களைப்போல - இவர்தம்
வெண்பனி தேசமும்
முடிமறைக்கிறது.

மேர்ரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜேர்மனியிலுள்ள வேலை பார்க்கும் பெண்களின் நிலை.

## எடுத்துக் காட்டாக ஒரு தொழிற்சாலை:

*கெல்கா மெயர்*

நான் பெரும்பான்மையாக பெண்கள் வேலைசெய்யும் ஒரு எலக்ரோனிக் தொழிற்சாலையின் தொழில் கௌன்சில் தலைவி. பெரும்பாலும் இப்பெண்கள் தொழில் கல்வி கற்றவர்களாயும், எழுத்து வேலை செய்பவர்களாயும் , இன்னும் அலுவலகப் பொறுப்பாளர்களாயும் உள்ளனர்.

அவர்களுக்கெல்லாம் பொதுவான ஒன்று இந்தத் தொழிலுக்குப் பின்னர் அவர்கள் வேறு தொழில்களும் செய்ய வேண்டியுள்ளமைதான். கடைக்குப் போகிறார்கள், வீட்டை சுத்தப்படுத்துகிறார்கள், துணி துவைத்தல், உடைகளை அயன் பண்ணுவது, நோயாளர்களைப்பராமரித்தல் , வீட்டுக்கருவிகளை பழுதுபார்ப்பவர்களை எதிர்பார்த்துக் காத்திருப்பது போன்றவை. இவர்களில் பலர் பிள்ளைகளைப் பராமரிதது வளர்ப்பதுடன் கிண்டர்கார்டனுக்கும் கொணடு செல்ல வேண்டும் . நாள் முழுதும் பரபரப்புடன் வாழ்கின்ற இவர்கள் தனது வேலைகளை அழகாயும் நேர்த்தியாயும் பொறுமையாயும் செய்கின்றபோதிலும் குறைந்த வருமானம் பெறுவோராக வகைப்படுத்தப் பட்டிருப்பதிலும் ஒற்றுமைப்படுகிறார்கள்.

சமூகத்தை வழிநடத்தல், அத்தியாவசிய பணிகளைச் செய்தல் போன்றவற்றில் அரைவாசிக்கு மேல் இவர்களே ஈடுபட்டுள்ள போதிலும் குறைந்த சம்பளம், அதிகாரம் என்பவற்றை கொண்டுள்ளவராக இப்பெண்கள் காணப்படுகிறார்கள். வருந்தத்தக்க முறையில் உலகமுழுதும் இவ்வாறே இது காணப்படுகிறது. அநேக எனது தோழிகள் தனியே தமது பிள்ளைகளைவளர்ப்பவர்கள். கிண்டர்கார்டனுக்கு பணம்கட்டவோ, அதிகரித்த வாடகை, வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்கவோ அவர்களின் வருமானம் போதாது. இவர்களின் பலர் இரண்டாவது வேலையைச் செய்யவும் நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

வார இறுதியில் அல்லது மாலையில் உணவு பரிமாறுபவர்களாயும் ,கஷியராயும் ,விற்பனையாளராயும்,கிளீனிங் வேலைசெய்பவர்களாயும் இவர்கள் வேலைசெய்கிறார்கள். கிழக்கு ஜேர்மனியிலுள்ள தோழியருடன் பார்க்கும்போது அவர்களிடம் வேலை ஒன்று மட்டும் தான் இருக்கிறது. ஆனால் வேலையிழந்த பெண்களின் தொகை தற்போது இங்கும் கூடவாகவுள்ளது. வாகன உற்பத்தி நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள உபகரண உற்பத்திக் குழப்பங்களாலும், மாற்றியமைப்பு மூலமும் பல தேர்ந்த தொழிலாளரின் அதைவும் பெண் தொழிலாளரின் வேலைகளும் பறிபோயின. அல்லது எமது தொழிற்சாலைபோல் உங்காறுக்கு (Ungarn) மாற்றப்பட்டு விட்டன. வேலையால் நிறுத்தப்படுவோமோ என்ற அச்சம் தற்போது அதிகரித்து வருகிறது.

தொழிற்சாலையில் கடந்த 2 மாதங்களாக வேலைக்குறைப்பு இடம்பெற்று வருகிறது . இதன் முதலாவது அர்த்தம் சம்பளக்குறைப்பு. அருகிலுள்ள தொழிற்சாலையொன்றில் - இங்கு பெண்கள் மட்டும் வேலைபார்க்கிறார்கள். முற்றாக மூடப்படவுள்ளது

பெண்களது இந்த குறைந்த சம்பளமும் , வருமானமும் உண்மையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவன. வேலையில்லாதவருக்கு கொடுக்கப்படும் பணம் ( Arbeitlosengeld) ஒய்வூதியம் என்பதை மிகக் குறைவாகவே கிடைக்கும். இதனால் வயோதிபத்தில் பெண்களும், குழந்தைகளைத் தனித்து வளர்க்கும் தாய்மாரும் வறுமைக் கோட்டுக்குள் வர நேரிடுகிறது. இதைவிட இன்றும் பலவற்றுக்கு எதிராக போராடுவதற்கு விடயங்கள் உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக பெண்களுக்கெதிராக நாளாந்தம் நடைபெறும் பலாத்காரத்துக்கெதிராகவும் போராட வேண்டியுள்ளது . இனவாதம்,அகதிகளை திருப்பியனுப்புதல், பலாத்காரம், பாலியல் ரீதியாக தவறாகப்பாவித்தல் போன்றவை.

நாம் ஒன்று சேர்வதால் மட்டுமே ஒரு மனிதன் இன்னொருவரிலும் மேலானவன் அல்ல என்கிற உலகைப் படைக்கலாம்.

**தமிழில் : தேவிகா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனியவளே
எழுது எழுது என்கிறாயே
சுழலும் பூமியில் சுழன்று
கொண்டிருக்கும் எனக்கு
எழுத எப்படி வருமடி........

கும்மிருட்டில் சிக்குண்ட
சின்னச் சிறுமி போல் நான்
தவித்துக் கொண்டிருக்கிறேனடி

சிறகொடிந்த பறவைகளையும்
சிதறுண்ட உடல்களையும்
ஓலமிடும் ஜீவன்களையும்
சிக்கித் தவிக்கும் கைதிகளையும்
விடுவிக்க முடியுமா என்னால்?

சமாதானப் புறாக்கள்
சாகசம் காட்டுதடி
இரத்த பானங்கள்
காய்ந்து வெடிக்குதடி
பச்சிளம் பாலகன்கள்
துப்பாக்கியுடன்....துயர்
கொண்டதடி



அகதி முகாமில் அழுகை
ஆரம்பமானதடி........
புகலிடத்தில் கொடி பிடித்து
கோஷம் போட்டவர்களிடம்....
சத்தமிட்டுக் கூறினேனடி
அவர்களது சத்தத்தில் என்
தேசத்தை மறந்து போனேனடி.

ஜி.மொனிக்கா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*(உலக பெண்ணிலைவாத இயக்கத்தின் காத்திரமான ஊசாத்துணை நூலாக இன்றுவரை கருதப்படும் "இரண்டாவது செக்ஸ்'ஸினை எழுதிய சிமோன் து போவுவார் ( Simone De Beauvoir), 20ஆம் நூற்றாண்டினது தத்துவ இயக்கத்தைத் தனது இருத்தலியல் சிந்தனைகளினால் ஆளுமை செய்த ஜோன்-போல் சார்த்திருடன் ( Jean- Paul Sartre) 1974 (ஆகஸ்ட்-செப்டம்பர்) இல் நடத்திய பேட்டிகளின் தொகுப்பை பிரான்ஸின் Gallimard (1981) வெளியிட்டுள்ளது. பிரஸ்தாப பேட்டியிலே, பெண்கள் பற்றிச் சார்த்திர் கூறியவைகளின் சில பகுதிகள் மட்டுமே இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.)*

# ஜோன்– போல் சார்த்திரும் பெண்களும்.

**பிரெஞ்சு மூலத்திலிருந்து தமிழில்: சூமின்**

**சிமோன் து போவுவார்:-** சுதந்திரமாகவும், உடனடியாகவும் உடலுறவுக்குச் சம்மதித்துவிடும் பெண்கள் கிட்டத்தட்ட விபச்சாரிகளே என நீங்கள் கொண்டிருந்த கேலித்தனமான இருத்தை எப்போது கைவிட்டீர்கள்?

**ஜோன்–போல் சார்த்திர்:-** மிகவும் விரைவாகவே. அதாவது பெண்களுடன் குறைந்த பட்சம் உடலுறவுகளை வைக்கத் தொடங்கியபோது. இதன் பின்பு நான் அப்படி நினைக்கவில்லை. கல்லூரியில் இருந்த காலத்தில் மட்டும் தான் என்னிடம் அப்படியொரு கருத்து இருந்தது.

**போவுவார்:-** நாங்கள் இருவரும் தொடர்புகளைத் தொடங்கிய காலகட்டத்தில் நீங்கள் பல பெண்கள் பிரியனாக இருந்தீர்கள். ஒரு பெண்ணோடு மட்டுமே உறவினை வைக்கக்கூடிய அளவிற்கு உங்களைக் கட்டுப்படுத்த முடியாதவருமாக இருந்தீர்கள். பெண்களுடன் உங்களிற்குப் பல தொடர்புகள் இருந்தது. இந்தத் தொடர்புகள் காலக்கட்டத்திலே பெண்களிடம் உங்களைச் சிறப்பாகக் கவர்ந்த விஷயம் எது?

**சார்த்திர்:-** தேவையற்ற விஷயங்களைக் கதைக்கின்றீர்கள்.

**போவுவார்:-** இது எப்படித் தேவையற்றதாக இருக்கும்?

**சார்த்திர்:-** உங்களிடம் உள்ளதைப் போன்ற, மிகவும் கனதியான தகைமைகளையே நான் பெண்களிடம் எதிர்பார்க்கின்றேன். உதாரணத்துக்கு, சில பெண்கள் அழகாக இருந்தனர், அவர்களிடம் இந்தத் தகைமைகள் இருக்கவில்லை. ஏனையவர்களிடம் தகைமைகள் குறைவாக இருந்த காரணத்தினாலே, உங்களைப்போல அவர்களுடன் ஒரு நீடித்த தொடர்பு ஏற்படாது போயிற்று. ஒரு சிலருடன், ஓரளவிற்குத் தொடர்புகள் ஏற்பட்டன.

**போவுவார்:-** "தேவையற்ற விஷயங்களைக் கதைக்கின்றீர்கள்" என நீங்கள் தற்போது சொன்னது எனக்கு வினோதமாகப்படுகின்றது. வழியில் யாராவது பெண்ணைக் கண்டால் உடனடியாகவே அவளுடன் தொடர்பினை வைத்துவிடும் போக்கினை கொண்டவர் என்றல்லவோ சொல்லலாம் போலுள்ளது . . .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சார்த்திர்:-** ஐயோ ! கடவுளே ! . . . .

**போவுவார்:-** இதில் உண்மை இல்லை. சில வேளைகளில் சில பெண்கள் உங்கள் மீது வலியவந்து விழுந்தனர், நீங்கள் அவர்களைப் புறக்கணித்தீர்கள். பலபெண்களுடன் தொடர்பு கொண்டிருந்த உங்களிற்கு, ஏதாவது ஒரு பெண்ணுடனாவது உறவு ஏற்படவில்லையா?

**சார்த்திர்:-** எனக்குள் சில கனவுகள் ஏற்பட்டன, காதல் கனவுகள். இந்தக் கனவுகள் எனக்குள்ளே ஓர் காவியப் பெண்ணை சிருஷ்டித்தன. அவள் இளமஞ்சள் நிறத்தினள். இவளை ஒத்திருந்த சில பெண்களை எனது நனவு வாழ்வில் நான் சில வேளைகளிலே கண்டேன். ஒருபோதுமே முக்கியமான சம்பவங்களில்லை. எப்படியோ இந்த உருவம் இன்னமும் என்னை விட்டு விலகவில்லை. இளமஞ்சள் நிறத்தினள். வெள்ளை நிற ஆடை அணிந்திருந்த சின்னப் பெண். அவளைக் காட்டிலும் எனக்கு வயது அதிகமாக இருந்தது. லக்ஸம்பேர்க்கிற்கு அருகிலே உள்ள தொட்டியொன்றின் அண்மையிலே நாங்கள் விளையாடி மகிழ்ந்தோம்.

**போவுவார்:-** இது உண்மைக் கதையா? கனவா?

**சார்த்திர்:-** இது நான் கனவு கண்ட கதை . . . .

**போவுவார்:-** அப்படியா! நீங்கள் குழந்தைத்துவக் காதல் கனவுகளைக் கண்டிருக்கின்றீர்கள்.

❖ ❖ ❖ ❖ ❖

**போவுவார்:-** பெண்கள் விஷயத்தில் எந்த வகையிலே நீங்கள் சமத்துவவாதியாக இருந்தீர்கள்? பெண்களைப் பொறுத்தமட்டில் உங்களது பங்கு பாதுகாப்பாளன் என்ற வகையிலா ஏகாதிபத்தியவாதி என்ற வகையிலா இருந்தது?

**சார்த்திர்:-** மிகவும் பாதுகாப்பாளனாக இருந்தேன் என்றே நான் நினைக்கின்றேன். தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஏகாதிபத்தியவாதியாக. பெண்களைப் பொறுத்தமட்டில், உங்களுக்கு வெளியிலானதே எனது பார்வை என நீங்கள் என்னை அடிக்கடி கண்டித்தீர்கள். ஒரு பெண்ணுடன் நான் சமத்துவமான உறவுகளைக் கொண்டிருந்தேன், வேறுவிதமாக உருவாக்கப்பட்ட உறவுகளை அவளால் தாங்கமுடியாமலிருந்தது. பெண்களிடம் நான் கேட்டது இதுதான், அதாவது ஓர் உணர்வுத்துவமான சூழல். பாலியல்த்துவம் கூட அல்ல, ஆனால் உணர்வுத்துவம், அதாவது பிந்திய ஒரு பாலியல் திட்டத்துடன்.

❖ ❖ ❖ ❖ ❖

**போவுவார்:-** பெண்களிடம் நீங்கள் உங்களை விரும்புமாறு கேட்டிருந்தீர்களல்லவா?

**சார்த்திர்:-** ஆம், இந்த உணர்த்துவம் எனக்கு உரித்துடையதாக இருக்க வேண்டுமென்பதற்காக, பெண்கள் என்னை விரும்பவேண்டும் என எதிர்ப்பார்த்தேன். பெண்கள் தம்மை என்னிடம் தந்தபோது இந்த உணர்த்துவத்தை நான் அவர்களது முகத்திலே கண்டேன். அவர்களது முகப்பரப்பில் எனக்கு இது தெரிந்தது. முகத்திலே இதனைக் கண்டபோது என்னை நான் பறிகொடுத்தேன். அடிக்கடி எனது குறிப்புகளிலும் படைப்புகளிலும் இதனை நான் பிரகடனப்படுத்தியுள்ளேன். இதனை நான் இன்றும் நம்புகின்றேன். அறிவும், உணர்வும் தனித்தனி விஷயங்கள் அல்ல. உணர்வே அறிவை உற்பத்தி செய்கின்றது. கிட்டத்தட்ட உணர்வென்பதே அறிவுதான். முடிவிலே பார்த்தால், கோட்பாட்டு விஷயங்களில் மூழ்கியிருக்கும் ஒரு ஞாயமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதனென்டவன் அடித்தவாதியே.

❖ ❖ ❖ ❖ ❖

**போவுவார்:-** பெண்கள் விஷயத்திலே நீங்கள் அடக்குமுறைவாதியாக இருந்ததாகச் சொன்னீர்கள் . . . .

**சார்த்திர்:-** ஆம், எனது இந்தக் கருத்து இலகுவானதல்ல. இந்த அடக்குமுறை பாலியப்பிராயத்திலிருந்து தொடங்குகின்றது. எனது அப்பு எனது அம்மாவை அடக்கினார். எனது சித்தப்பா, எனது அம்மாவை அடக்கினார்.

❖ ❖ ❖ ❖ ❖

**போவுவார்:-** அலட்சணமான பெண் ஒருத்தியால் நீங்கள் ஒருபோதுமே கவரப்பட்டதில்லையா?

**சார்த்திர்:-** உண்மையிலேயும், முழுமையாகவும் அலட்சணமாக இருந்த பெண்ணால் நான் ஒருபோதுமே கவரப்பட்டதில்லை.

❖ ❖ ❖ ❖ ❖

**போவுவார்:-** ஸ்ரெண்டலிச (Stendhalien) அர்த்தத்தில், பெண்கள் உங்களிற்கு "காவியத்துவ" மாகப் பட்டனர் அல்லவா?

**சார்த்திர்:-** ஆம், இந்தக் காவியத்துவம் அவசியமானது. ஒரு மனிதன் தனது உணர்த்துவத்தின் ஒரு பகுதியை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படும்போது, வேறுவிதமாகத் தனது அறிவை அபிவிருத்தி செய்ய, பெண்களின் பக்கத்திலிருந்து உணர்வைக் கோரும்படி தள்ளப்படுகின்றான். தனது உணர்வு, பெண்களின் உணர்வு போல வரவேண்டுமென்பதற்காக உணர்வு பூர்வமான பெண்களைச் சந்திக்க விரும்புகின்றான்.

**போவுவார்:-** இன்னொரு விதத்தில் சொல்வதானால், உங்களுக்குள் ஒரு முழுமைத்துவமின்மை இருந்தது என்றுதானே அர்த்தம்?

**சார்த்திர்:-** ஆம்! பெண்ணுடனான தொடர்ச்சியான உறவைக் கொண்டதே ஒரு சாதாரண வாழ்வு என நான் நினைத்தேன். ஒரு மனிதன் தான் என்ன செய்தான், எப்படி இருந்தான் என்பவைகளையே வரைவிலக்கணம் செய்யப்படுகின்றான். பெண்ணால் அவன் எப்படி ஆக்கப்படுகின்றானோ, அப்படியே அவன் இருந்தான்.

❖ ❖ ❖ ❖ ❖

**போவுவார்:-** பெண்களை முன்னேற்றமடைய, வாசிக்க, சம்பாதிக்க வைக்கவேண்டும் என்ற ஒரு கருத்து உங்களிடம் எப்போதும் இருந்தது . . . . . .

**சார்த்திர்:-** அதிக அறிவு கொண்ட ஒரு ஆணின் தகைமைக்குப் பெண் உயரவேண்டும் என்ற கருத்துடன் அது தொடங்கியது. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே எந்தவொரு புத்திஜீவித, ஒழுக்க வித்தியாசங்கள் இருந்ததில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் மீதான வன்முறைகள்

— தமா

அடக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் ஓர் இனத்தின் இரண்டாந்தர பிரஜைகளாகியாகிய பெண்கள் மீதான வன்முறை பற்றியும், அதன் பாதிப்புக்கள் பற்றியும் தெரிந்து கொள்வதற்காக முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

அடக்குமுறையும் வன்முறையின் வடிவமே. இது சுதந்திரமான இயக்கத்தை, சிந்தனையை, சிந்தனைப் போக்கை தடைசெய்கின்றது. இதனால் ஆரோக்கியமான மனவளர்ச்சி பாதிக்கப்படுவதோடு, பிரச்சனைகளுக்கான காரணங்களை ஆராயும் போக்கோ, அவற்றிற்கு எதிராக போராடவோ, குரல் கொடுப்பதற்கோ இயலாமல் போகிறது.

பெண்மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகளில் முக்கியமானவைகளாக

- பாலியல் பலாத்காரம்
- அடித்து துன்புறுத்துதல்

வேலை செய்யும் இடங்களில் ஏற்படும் பாலியல் தொந்தரவுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். (இவற்றுள் போக்குவரத்தின் போது, உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தலும் அடங்கும்.)

## அடித்து துன்புறுத்துதல்

இவ்வகையான துன்புறுத்தல் சேர்ந்து வாழ்பவர்/கணவன் மூலம் அதிகளவில் ஏற்படுகிறது. இந்நிலைக்கு காரணங்களாக மது போதை, மனநிலையில் ஏற்பட்ட பாதிப்பு/சமநிலையின்மை, என்பன கூறப்படுகின்றன. போதையில் அடித்து துன்புறுத்துவதால் பலர் அதனைக் கருத்திற்கு எடுத்துக் கொள்வதில்லை. அடித்து துன்புறுத்துவதை பெண்கள் வெளியில் சொல்வதற்கும் முன்வருவதில்லை. ஏனெனில் காலம் காலமாக எமக்குப் போதிக்கப்பட்ட வரலாற்றுக் கதைகள் குடும்ப கௌரவம், குடும்பம், கணவன் போன்றவையாகும்.

அநேகமான குடும்ப சண்டைகளுக்கு பலவீனமான பொருளாதார சூழலே காரணம் என பலர் அபிப்பிராயப்படுகின்றனர். குழந்தைகளின் முன்னிலையில் தாய் அடித்து துன்புறுத்தப்படும் போது குழந்தைகளின் மனநிலை பாதிக்கப்படுவதோடு பயம் நிறைந்த சூழலிலேயே குழந்தை வளரத் தொடங்குகிறது. அடித்து துன்புறுத்துதல் சாதாரணமாக எல்லா மட்டங்களிலும் நிகழ்கிறது. நாளாந்த கூலிவேலை செய்து சாப்பிடும் குடும்பங்கள் தொடங்கி, பணக்காரர், உயர்கல்விமான்கள், உயர் பதவி வகிப்பவர்களது குடும்பங்கள் வரை இது சாதாரண நிகழ்வாகும்.

இந்த வதைக்கு எதிராக பெண்களால் குரல் எழுப்ப இயலாமல் இருக்கிறது. சிலர் இவற்றை எமது தலைவிதி என்றும், நான் ஒழுங்காக இருந்தால் ஏன் அடிவிழுகிறது என தம்மீதும், வீட்டின் பொருளாதார நிலை காரணம் என்றும் மௌனமாக சகித்துக் கொண்டு நல்லகாலம் வராமலா போகும் என்ற எதிர்பார்ப்புகளுடன் காலத்தை நகர்த்துகின்றார்கள்.

எமது நாடுகள் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் (மூன்றாம் உலகநாடுகள் என்ற பதத்தை பாவிக்க விரும்பவில்லை) பெண்கள்,

----------- தம்மைக் குறித்து பரப்பப்படும் வதந்திகள் பற்றிக் கவலை கொள்பவர்களாகவும்,-------- தமது "ஒழுக்கம்" பற்றி மற்றவர்களின் கருத்து, எப்படியிருக்கும் என்பதில் அக்கறையுடையவர்களாகவும் இருக்கின்றார்கள்.

"பின் தூங்கி முன் எழுந்த" குடும்பப் பெண்ணாக, எதிர்த்து கதைக்காத, எல்லாவற்றிற்கும் தலையாட்டும் பொம்மைகளாக etc, எதிர்பார்க்கும் எமது ஆணாதிக்க சமூக அமைப்புமுறைக்கு கட்டுப்பட்டுப்போய்விடுகின்றனர். அத்துடன் இந்த வதைக்கு எதிராக குரல் கொடுக்கக் கூடிய அரசு சார்பற்ற எந்த பலமான அமைப்போ, நிறுவனங்களோ, சட்ட ரீதியான பாதுகாப்போ, பொருளாதார ரீதியான உதவிகளோ எமது பெண்களுக்கு இல்லை என்பது உண்மையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாலியல் பலாத்காரம்

பெண்களை பெருமளவில் நிலைகுலையச் செய்வது பாலியல் பலாத்காரமாகும். பெண்கள் உடல் ரீதியில் பலமற்று இருப்பதே இதற்கு காரணமாகும். உடல் ரீதியான பலவீனமான நிலைக்கு காரணங்களாக

போஷாக்கின்மை

ஓய்வின்றிய வேலை

மறுஉற்பத்தியில் பங்கு கொடுத்தல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். சித்திரவதையில் மிக மோசமானது பாலியல்வதையாகும். எமது நாட்டில் இதுபற்றி மனந்திறந்து கதைப்பது அவ்வளவு இலகுவானதல்ல. சித்திரவதைக்குப் பின்பு அதனால் ஏற்படும் உடலியல், உளவியல் ரீதியான விளைவுகளுக்குட்படுவதும் பெண்ணே. சம்பந்தப்பட்ட ஆண் எந்தவித பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியதில்லை. எமது நாட்டு சட்டங்கள் கூட ஆண்களைப் பாதுகாக்கவே துணைபோகின்றன.

பாலியல் பாலத்காரத்திற்குட்பட்ட பெண்கள் எமது சமூகத்தால் கேவலமாக நடாத்தப்படுகின்றார்கள். சமூகத்தின் கெடுபிடிகளாலும், கேலிப்பேச்சுகளாலும், வீணான வதந்திகளாலும் பெண்களில் பலர் பாழ்கிணற்றையும், அலரிவிதையையும், கிருமிநாசினிகளையும் நாடி தமது உயிரைப் போக்கிக் கொள்கின்றனர். பெரும் பாலான பாதிக்கப்பட்ட பெண்கள் பலாத்காரம் பற்றி பொலிஸிடம் முறையிடுவதில்லை. இதற்கு வெட்கம், முறைப்பாடு தொடர்பாக பொலிஸார் காட்டும் அசிரத்தையும், அது தொடர்பாக கேட்கப்படும் தேவையற்ற கேள்விகளும் காரணமாகும்.

அதிகளவு எண்ணிக்கையான பாலியல் பலாத்காரம் திட்டமிட்டே நிகழ்த்தப்படுகிறது என புள்ளி விபரங்கள் கூறுகின்றன. சிறையில் தண்டனை அனுபவிக்கும் பெண்கள் மீதும் பலாத்காரம் பிரயோகிக்கப்படுகிறது. பலமற்ற, பாதுகாப்பற்ற ஓர் மனித ஜீவன் மீது உடல் ரீதியாக பலம்வாய்ந்த ஆண்களால் பிரயோகிக்கப்படும் வன்முறை அசிங்கமானதாகும்.

பாலியல்வதைக்குட்பட்ட பெண்கள் பலர் உளவியல் ரீதியான கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் தனிமைப்பட்டும், வேலைக்கு செல்ல விருப்பம் இன்றியும், நித்திரையின்மை, மீண்டும் அந்த நபரை சந்திப்போமா போன்ற உணர்வுகள் மூலம் அழுத்தப்படுவதோடு சமூகத்தின் பாரபட்சமான கணிப்பீட்டின் மூலம், புறக்கணிப்பையும் வேதனையையும் அனுபவிக்கின்றனர். பலாத்காரத்தின் பின் மனதை ஒரு நிலைப்படுத்துவது மிகவும் கடினமானதாக இருப்பதாக பாதிக்கப்பட்ட பெண்களின் வரலாறு கூறுகிறது.

பாலியல் வதையின் விளைவாக ஏற்படும் வேண்டாத கருவை அழிப்பதன் மூலமாக ஏற்படும் உடலியல் விளைவுகளும் பெண்களுக்கே.

## வேலை செய்யும் இடங்களில் பாலியல் தொந்தரவுகள்

எமது பெண்களில் பெரும்பாலானவர்கள் பராம்பரியத் துறைகளான ஆசிரியர், தாதி, கடைகளில், விற்பனை நிலையங்களில் விற்பனையாளர்களாகவும், ஹோட்டல்களில் வரவேற்பறையிலும் , உல்லாசப் பிரயாணத்துறைகளிலும் தொழில்புரிகின்றனர். 75% கல்வி அறிவுடையவர்களா(எழுத படிக்க தெரிந்த)கவும், வேலை தேடுபவர்களாகவும் உள்ளனர். 35,000 - 40, 000 சுதந்திர வர்த்தக வலையத்தில் உடை தயாரிக்கும் பகுதியில் பணிபுரிகின்றனர். 53% பெண்கள் தேயிலை, இறப்பர், தோட்டங்களிலும் விவசாயத் துறையிலும் தொழில் புரிகின்றனர்.

அரசதுறைகளைவிட தனியார் துறைகளில் தொழில் புரியும் பெண்கள் பாலியல் தொந்தரவுகளுக்குட்படுவதாக கூறப்படுகிறது. வேலை செய்யும் இடங்களில் கேலிப் பேச்சுகளும், இரட்டை அர்த்தமான பகிடிகளும் , ஒருவரின் தோற்றம் பற்றிய வர்ணனைகளும் இடம் பெறுகின்றன. றப்பர் தேயிலைத் தோட்டங்கள், ஏனைய தோட்டங்கள், சுதந்திர வர்த்த வலையத்தில் தொழில் புரியும் பெண்கள் மீதான தொல்லை அதிகமாகும்.

ஆங்கிலேயர் காலத்தில் மட்டுமல்லாது தோட்டங்கள் "மக்கள் மயப்படுத்தப்பட்ட" பின்னரும் கூட இந்நிலைமையே நீடிக்கிறது. குறிப்பாக றப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் பெண்கள் தனிமையில் மலைப்பகுதியில் வேலை செய்யும் போது மேற்பார்வையாளர்கள், தோட்டத் துரைமார்களிடன் பாலியல் தொந்தரவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதனை எதிர்க்கவோ வெளியில் செல்லவோ முன்வர முடியாமல் வேலை பறிபோய்விடலாம், வேறு இடத்திற்கு மாற்றப்படலாம், பழிவாங்கப்படலாம் போன்ற அச்சங்கள் காரணங்களாகின்றன. இதனால் அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் நபர்களின் இச்சைக்குப் பணிந்து போக வேண்டி ஏற்படுகிறது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி

பயணம் செய்யும் போது 65%
உடல் ரீதியான தொடர்பு 20%
இரட்டை அர்த்த பகிடிகள் 10%
வார்த்தை மூலம் இம்சை 25%
கிண்டல் பேச்சு 65% ஆகவும் உள்ளது.

உளவியல் ரீதியாக பெண்கள் பலவீனப்படுத்துவதாக நாளாந்தம் வாழ்வில் முட்டாள், விசரி, படிப்பறிவு இல்லாதது போன்ற

(56 ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகலிடச் சஞ்சிகைகளும் பெண்களும்

லக்ஷ்மி

புகலிடத்தில் இருந்து வெளியாகும் சஞ்சிகைகளை எடுத்துக் கொண்டால் இவற்றில் பெரும்பாலானவை இலங்கையில் உள்ள விடுதலைப் போராட்டத்தை மையமாகக் கொண்டு வெளிவருகின்றன. இதிலும் வர்க்க அரசியலை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் சஞ்சிகைகளில் தான் விடுதலை பற்றிப் பேசும் சஞ்சிகைகளை மட்டும் கருத்தில் கொண்டு இக்கட்டுரையை ஆரம்பிக்கிறேன்.

இதனை இரண்டு முக்கிய பிரிவுகளாகக் கொள்ளலாம்.

1) புகலிடச் சஞ்சிகைகளில் பெண்கள் தொடர்பான ஆக்கங்கள்.

2) புகலிடச் சஞ்சிகைகளில் பெண்களின் ஆக்கங்கள்.

முதலாவது விஷயத்தை எடுத்துக் கொண்டால், பெண்கள் பிரச்சனைகள் பேசப்பட வேண்டும் என்பதற்காக ---- அது அப்படிப் பேசாவிட்டால் தாங்கள் பெண் விடுதலையில் நின்று ஒதுங்கி நிற்பதாக முத்திரை குத்தப்பட்டு விடுவோமோ? என்பதற்காக ---- பேசப்படுகிறதேயன்றி உண்மையான நிலையில் நின்று உணர்வு பூர்வமாகப் பேசப் படுகிறது என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

பொதுவாகப் பெண் விடுதலை குறித்த ஆக்கங்களை வெளியிடும் சஞ்சிகைகள் கடமைக்காகச் செயற்படுகின்றன போன்ற ஒரு உணர்வைத் தோற்றுவிக்கின்றன. இதற்குப் பல உதாரணங்களைக் கூறலாமாயினும், இவற்றில் ஒரு உதாரணம் "பனிமலர்" இலண்டன் இன் மார்ச் -- ஏப்ரல் --- 199? இதழின் 3ம் பக்கத்தில் , சர்வதேசப் பெண்கள் தினம் பற்றிய ஒரு குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

இதனைப் பார்க்கும் போது பெண்களின் ஆக்கங்களை மார்ச் 8ம் திகதி வரும் தினத்தன்று போட்டால் போதும் என்பது போலும் அது தங்களால் முடியாமற் போனதற்கு வருத்தம் வேறு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது மரணவீட்டிற்கு கலந்து கொள்ள முடியாததிற்கு மன்னிப்புக் கோருவது போலத்தான் இருக்கின்றது.

இது போன்ற இவர்களின் பூச்சாண்டி விளையாட்டுக்களை இனம் கண்டு கொள்ள வேண்டும்.

ஆயினும் இச் சஞ்சிகைகளால் வெளியிடப்படும் பெண்விடுதலை தொடர்பான கருத்துக்கள் முற்று முழுதாக நிராகரிக்கப்பட வேண்டியவையல்ல. "வர்க்கப் போராட்டத்தில் பெண்களின் பங்கு", அல்லது "சோசலிச சமூகத்தில் பெண்களின் நிலை" என்னும் தலைப்புக்களுடன் இவர்களின் பெண் விடுதலை குறித்த அக்கறை நின்று போவதுதான் கவலைக்குரியது.

இப்படியான போக்குகள் தொடர்ந்து கொண்டு இருப்பதற்கு முக்கிய காரணம், ஐரோப்பா தழுவிய எந்தச் சஞ்சிகைகளிலும் ஆசிரியர் குழுவிலும் பெண்கள் இல்லாதது தான். ------ "தேனீ"(ஜேர்மனி), நின்று போன "புதுமை"(ஜேர்மனி), ன்னும் பெண்கள் சஞ்சிகைகளான "சக்தி"(நோர்வே), "ஊதா" (ஜேர்மனி), நின்று போன "கண்"(பிரான்ஸ்), நின்று போன "நமது குரல்" (ஜேர்மனி) என்பன இதற்குள் அடங்கா.

ஏனைய சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுக்களில் பெண்கள் இல்லாமலிருப்பதற்கான காரணங்கள்:

1) பெரும்பாலான சஞ்சிகைகள் வர்க்கப் பார்வைக் கூடாகத் தேச விடுதலைப் போராட்டத்தின் மீது அக்கறை கொள்வதனால் பெண் விடுதலை குறித்து இவைகள் அதிகம் பிரக்ஞை கொள்வதில்லை.

2) மறுதலையாக, பெண்விடுதலை பற்றி அக்கறை கொள்ளும் பெரும்பாலான பெண்கள் வர்க்கப் போராட்டம் பற்றி அதிகளவு பிரக்ஞை கொள்வதில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சஞ்சிகைகளில் வரும் "ஆண்" ஆக்கங்கள் எப்போதும் வர்க்கப் போராட்டத்துடனும் தேச விடுதலையுடனும் சோஷலிச சமுதாயத்துடனும் தொடர்பு படுத்திப் பெண்களின் பிரச்சனையைப் பார்க்கின்றார்கள். இதனால் இன்றைய சமூக அமைப்பிற்குட்பட்ட பெண்களின் விடுதலையில் பாராமுகமாக இருந்து விடுகிறார்கள். ஆனால் இங்குள்ள பெண்கள் வர்க்கப் போராட்டத்தினூடான விடுதலையில் நம்பிக்கை கொள்ளும் அதே சமயம், தங்களுடைய இருப்பில் இருந்து இன்று தங்களுடைய விடுதலைக்காகப் போராடுவதில் அதிக அக்கறை கொண்டுள்ளார்கள். ஆசிரியர் குழுவில் ஆண்களும் பெண்களும் இணைந்து செயற்பட முடியாமைக்குக் காரணமாக இந்த இடை வெளியைக் கருதலாமா?

ஆண்களினால் பெண்களின் நிலையில் இருந்து உணர்வு பூர்வமாகப் பிரச்சனைகளைப் பார்க்க முடியாது என்பது வெளிப்படையான உண்மை. இவர்கள் பெண்நிலைவாதத்தை ஆதரிப்பவர்களாக அல்லது துணை போகிறவர்களாக இருக்க முடியுமேயன்றி பெண்நிலைவாதிகளாகி விட முடியாது.

இந்த நிலமைகள் பெண்கள் பெண் விடுதலை சம்பந்தமான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குத் தனியான சஞ்சிகைகள் தோற்றம் பெற வைத்துள்ளது எனலாம். பெண் எழுத்தாளர்களும் பெண் சஞ்சிகைகள் சார்ந்து குவிக்கப்படுகின்றார்கள். பெண்களுக்கென்ற தனிச் சஞ்சிகைகளின் தேவையின்றியமையாததாயினும்- இரண்டு பகுதிகளும் இப்படியே செல்வது ஆரோக்கியமானது அல்ல.

அரசியல் அடிப்படையிலான கட்டுரைகள் பெண்களிடமிருந்து மிகமிகச் சொற்பமாகவே வெளிவந்துள்ளன. - ஏனைய படைப்புகளுடன் ஒப்பிடும் பொழுது, இது மிகவும் துரதிருஷ்டவசமானதும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய விடயமுமாகும்.

குறிப்பாக இலக்கியச்சந்திப்புகளில் அரசியல் தொடர்பான விவாதங்கள் நடைபெறும்போது பெண்களின் பங்களிப்பு மிக மிகக் குறைவாகவிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

சமூகவிடுதலை குறித்த அடிப்படையான அறிவும் தெளிவும் நிச்சயம் எங்களிற்கு இருக்க வேண்டும். இவை தொடர்பான கற்கும் பரப்பனைப் பெண்கள் அதிகரித்துக் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

இன்னும், பெண்விடுதலை சார்ந்து பேசும் சஞ்சிகைகள், ஏனைய பத்திரிகைகள் பெண்விடுதலைக்கு எதிரான அல்லது பெண்களை இழிவுபடுத்தி வரும் கருத்துகளிற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை.

பெண்ணடக்குமுறைக் கருத்துகளின் மீதான தொடர்ச்சியான மோதல்களும் போராட்டங்களுமே பெண்விடுதலை இயக்கத்தைத் தோற்றுவிக்கும்.

---

( 54ம் பக்கத் தொடர்ச்சி )

வசைகள், (பெண் புத்தி பெண்புத்தி etc) மூலமும் சமையலைக் கவனி, பிள்ளையைப் பராமரி, உடுப்பைத் தோய் போன்ற மூளைக்கு வேலையளிக்காத சலிப்பான வேலைகளை திரும்ப திரும்ப செய்ய உத்தரவிடுவதும்,
இந்தப் பிறவியின் பயனே அடங்கி நடத்தலும், தனக்கென ஓர் விருப்பு வெறுப்பை உண்டென்ற உண்மையை தெரியப்படுத்தப்படாமல் ஆண்களுக்கு சேவை செய்யும் மனநிலையை ஏற்படுத்துதல் போன்றவை ஏற்படுத்துகின்றன.

இந்நிலைமைகள் தொடராதிருக்க:-

பெண்கள் தமது கல்வித்தரத்தை வளர்த்துக் கொள்வதோடு தமக்கென விருப்பு, வெறுப்புக்கள், பொழுது போக்குகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொள்வதோடு தனது தனித்துவம் பற்றியும், ஆளுமை, திறமைகளை வளர்த்தெடுப்பதிலும் கவனம்/ஆர்வம் செலுத்த வேண்டும்.

- சட்ட அமைப்பு முறைகள் மாற்றப்பட்டு பெண்களுக்கும் பாதுகாப்பு வழங்கக் கூடிய வகையில் புதிய சட்டங்கள் வரையப்படவேண்டும்.

- பெண்களின் உரிமைப் பற்றிய அக்கறையுடையவர்கள் தம்மை அரசியல் ரீதியாக வளர்த்துக் கொள்வதுடன் அமைப்பாகி/ ஒன்று சேர்ந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவ முன்வரவேண்டும்.
பெண்களுக்கு தற்பாதுகாப்பு முறைகள் பற்றியும் (Self-Protection) பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.

உளவியல் ரீதியான பாதிப்படைந்த பெண்களுக்கு உதவி வழங்க உளவியல் நிபுணர்களுடன் சந்திப்புக்கள், உதவிகள் வழங்கவேண்டும்.

- அரசாங்கம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பொருளாதார ரீதியான உதவிகளை வழங்க வேண்டும்.

இறுதியாக சூழவுள்ள சமூக அங்கத்தவர்கள் குறிப்பாகப் பெண்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுசரணையாகவும் உதவிகளை வழங்கியும் அவர்கள் அந்தக் கஷ்டமான நிலையிலிருந்து விடுபட ஒத்துழைக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# ஒரு பகிரங்க வேண்டுகோள்!

1991ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம், பெண்ணிலைவாதியும், கவிஞையுமான செல்வி என்றழைக்கப்படும் செல்வநிதி தியாகராஜா யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளால் கடத்தப்பட்டார்.

இவர் எங்குள்ளார், இவரது நிலையென்னவென்பது இன்னும் கேள்விக்குறியாகவேயுள்ளது.

செல்வி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் எனும் பிரிவின் இறுதியாண்டு மாணவியாவார். யாழ்ப்பாணம் பெண்கள் ஆய்வு வட்டம், பூரணி பெண்கள் நிலையம்(உடுவில்) ஆகிய அமைப்புகளில் பங்காற்றியவர்களில் முக்கியமானவர். பெண்கள் ஆய்வு வட்டத்தினரால் வெளியிடப்பட்ட ஈழத்து கவிஞைகளின் கவிதைகளைத் தாங்கி வந்த "சொல்லாத சேதிகள்" எனும் தொகுப்பில் செல்வியின் கவிதைகளும் இடம்பெற்றனவென்பது குறிப்பிடத்தக்கது.

செல்வி கடத்திச் செல்லப்பட்டு ஒரு வருடத்திற்குப் பின்பும் அவர் விடுதலை செய்யப்படாத நிலையில், தமது நாடுகளில் கருத்துச் சுதந்திரத்திற்காக போராடுபவர்களைக் கௌரவிக்கும் முகமாக விருதுகள் வழங்கும் சர்வதேசப் பென்(International Pen) அமைப்பின் 1992ம் வருட எழுத்தாளர் விருது செல்விக்கு வழங்கப்பட்டது.



எந்தவித நிபந்தனையுமற்று செல்வியை விடுதலை செய்யும்படி கோரி, இந்தியாவைச் சேர்ந்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் என நூறுக்கு மேற்பட்டவர்கள் கையொப்பமிட்டு ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

செல்வியை கடத்தியவர்களை நாம் கேட்கும் கேள்விகள் இவை தான்:

செல்வி கடத்தப்படுவதற்கு செய்த குற்றம் தான் என்ன?

பெண்களுக்கு விதிக்கப்பட்ட அநீதிகளுக்கெதிராக குரல் கொடுத்ததா?

மனித உரிமை மீறல்களை எதிர்த்தா?

எது தான் அவள் செய்த குற்றம்?

அவள் எவரையும் கொலை செய்தாளா? அதுவுமில்லை......

அப்படியானால் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தது தான் அவள் செய்த குற்றமா?

தமக்கு பிடிக்காதவர்களை கடத்திச் செல்லவும், கொலை செய்யவும் இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

எமது மண்ணின் மொத்த இறைமையை இவர்களுக்குத் தாரை வார்த்துக்கொடுத்தது யார்?

பெண்களின் வேலை அடுப்படியில் தான் எனும் எமது சமூகத்தின் கூற்றை மறுதலித்து பெண்களாலும் எல்லாத் துறைகளிலும் ஈடுபட முடியுமெனக் காட்டியதோடு, பெண்களின் ஒடுக்குநிலையை மாற்றியமைக்கவும், தான் தன் கண் முன் கண்ட அநீதிகளை எதிர்த்து போராடவும் செல்வி ஒரு போராளியாகப் புறப்பட்டாள். செல்வி போன்று சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு அடிபணியாது பொதுப்பணிகளில் ஈடுபடும் பெண்களை விரல்விட்டு எண்ணக்கூடிய துரதிர்ஷ்ட நிலையேயுள்ளது. செல்விக்கு ஏற்பட்ட இந்நிலை அரசியலிலும், பொதுப்பணிகளிலும் ஈடுபட்டிருக்கும், அல்லது இனிமேல் ஈடுபடப்போகும் பெண்களுக்கோர் அச்சுறுத்தலாகவேயுள்ளது.

செல்வியை விசாரணையின்றி கடத்திச்சென்று, இவ்வாறு கைது செய்து வைத்திருப்பதென்பது அடிப்படை மனிதப் பண்பிற்கே முரணானதாகும்.

தமிழ் மக்களின் விடுதலையைப் பெறுவதற்காக ஏந்தப்பட்ட ஆயுதங்கள் எந்தவித குறிக்கோளுமின்றி மக்கள் நலன்களில் அக்கறைக்கொண்டவர்களுக்கெதிராக நீட்டப்படுவதென்பது, நமது மண்ணில் "ஜனநாயகம்" செத்துக்கொண்டிருக்கின்றது என்பதை அறிவுறுத்துகின்றது.

இத்தகைய அராஜக நடவடிக்கைகளைக் கைவிட்டு, கருத்தை கருத்தால் சந்திக்கும் ஒரு சூழலை உருவாக்க சகலதரப்பினரும் முயற்சிக்கக வேண்டுமென்பதே எமது அவா.

இரண்டு வருடங்களாக செல்வியை கடத்தி வைத்திருக்கும் இந்த மனிதாபிமானமற்ற செயலை நாம் கண்டிப்பதோடு, அவரை எந்தவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யும்படி தமிழீழ விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்